கம்பராமாயணம்

பாலகாண்டம்

மிதிலைக் காட்சிப் படலம்

★

உரையாசிரியர்:

'சம்பந்தன்'

★

பதிப்புரிமை]

[விலை ரூபா 3-90

க. அகற்றி

1993ம் ஆண்டு திக்கிரை மாத பரிசளிப்பு விழாவின் போது. சமய பரீட்சையில் - 26 - இடம் பெற்ற மைக்காக இப்பரிசு மாணவர் ஒன்றியத்தால் அன்புடன் வழங்கப்பட்டது

K. mano
திர்வாகி

Y. Sayanthan
தலைவர்

P. Mahinthan
செயலாளர்

S. Thayalini
பொருளாளர்

கம்பராமாயணம்

பாலகாண்டம்

மிதிலைக் காட்சிப் படலம்

உரையாசிரியர்:
—சம்பந்தன்—

ஸ்ரீ லங்கா வெளியீடு
யாழ்ப்பாணம்

மிதிலைக் காட்சிப் படலம்

முதற் பதிப்பு:

ஆவி, 1972

பிரசுரம்:

ஸ்ரீ லங்கா வெளியீடு

அச்சுப்பதிவு:

ஸ்ரீ லங்கா அச்சகம்,
யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 3-90

★

Mithilaik Kadchip Patalam

Commentator:

'Sambandan'

First Edition:

June, 1972

Printers & Publishers:

Sri Lanka Press & Book Depot
K. K. S. Road, Jaffna.

Price: Rs: 3-90

முன்னுரை

கம்பகாவியம் திவ்விய அமுதம் போன்றது; அற்புதமானது. ஆழ்ந்து நோக்குவோருக்கு இடையறுத வம்பலரும் மலர்ச்சோலையது.

மாணவர்களுக்கு நுழைய வழிவகுத்தலே வேண்டப்படுவது. அதற்கமைய மிதிலைக் காட்சிப் படலத்துக்கு வேண்டிய அளவு இடர்களைந்து சுருக்கித் தெளிவாக எழுதினேன்.

பிழைகள் இருக்கலாம்; மன்னித்து விடுங்கள்.

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்;
9-6-72.

'சம்பந்தன்'

பண்டிதமணி அவர்கள்

அளித்த

அணிந்துரை

'சம்பந்தன்', கவிதைகள் புனைவதிலும் சிறந்த கட்டுரைகள் எழுதுவதிலும் இலக்கிய உலகிற் பிரசித்தியெய்தியவர்; அன்றி, நிறைவான ஆசிரிய அநுபவமும் இவருக்குண்டு. இப்படிப்பட்ட ஒருவர், உயர்வகுப்புக்கு விதித்த இலக்கியப் பகுதிக்கு உரை யெழுத முன்வந்தது, பரீக்ஷார்த்திகளாகிய மாணவர்களுக்குக் கிடைத்த தொரு பாக்கியமேயாம்.

உரை, பொழிப்புரை, பதவுரை, விசேடஉரை என்ற கிரமத்தில் அமைந்திருப்பது, கிரகிக்க வேண்டியவைகளை எளிதிற் கிரகித்தற்கு உரியதொரு வாய்ப்பாம்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்;
9-6-1972.

சி. கணபதிப்பிள்ளை

மிதிலைக் காட்சிப் படலம்

அ.தாவது, ஸ்ரீ இராம இலக்குமணரும் கௌசிகமுனிவரும் விதேக நாட்டின் தலைநகரமான மிதிலைக்கண் சென்று கண்டனவற்றைக் கூறும் செய்யுட் கூறுபாடு என்க. "ஆருமோர் நெறியேயன்றி யருத்தங்கள் விராய்ச் சிறந்த பாரிய பொதுச்சொற்றானே டார்வது படலம்" எனபது சூடாமணி நிகண்டு. "பொதுமொழி தொடர்வது படலமாகும்" என்பது பிங்கல நிகண்டு. மிதிலன் என்பவன் நிருமித்த நகரம் மிதிலை.

முதல் 21 பாடல்கள் மிதிலை வருணனை

கொடிகளின் காட்சி

1. மையறு மலரி னீங்கி யான்செய் மாதவத்தின் வந்து
செய்யவ ளிருந்தா ளென்று செழுமணிக் கொடிக ளென்னும்
கைகளை நீட்டி யந்தக் கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை யொல்லை வாவென் றழைப்பது போன்ற தம்மா.

பொழிப்புரை:

காவலையுடைய அம்மிதிலையானது 'திருமகள் தாமரை மலரின் நீங்கி, யான் செய்த பெருந்தவத்தினால் என்னிடத்தில் வந்து அவதரித்தாள்' எனக் கொடிகளாகிய கைகளை உயரத் தூக்கிச் செந்தாமரைக் கண்ணனாகிய இராமபிரானை விரைந்து வருக என்று அழைப்பதை ஒத்திருந்தது.

பதவுரை:

அந்த கடிநகர் - அந்தக் காவலையுடைய மிதிலை நகரமானது, *செய்யவள்* - செம்மை உடையவளாகிய திருமகள், *மை அறு மலரின் நீங்கி* - குற்றமற்ற தாமரை மலரைப் பிரிந்து, *யான் செய் மாதவத்தின்* - நான் செய்த பெரிய தவத்தின் பயனால், *வந்து இருந்தாள்* - அவதரித்துத் தங்கினள்; *என்று* - எனக்கூறி, *செழுமணி கொடிகள் என்னும்* - மிக்க அழகிய கொடிகள் என்கின்ற, *கைகளை நீட்டி* - கைகளை உயரத் தூக்கி, *கமலம் செங் கண் ஐயனை* - தாமரை மலரன்ன செம்மைசான்ற கண்களையுடைய இராமபிரானை, *ஒல்லை வா என்று* - விரைந்து வருக என, *அழைப்பது* - அழைத்தலை, *போன்றது* - ஒத்திருந்தது. (எ-று)

விசேட உரை:

மலர் - தாமரை மலர். 'யான்செய் மையறு மாதவத்தின் வந்து' எனினுமமையும். வருதல் - பூமியில் அவதரித்தல். செய்

யவள் - திருமகள், அழகுமுதலாய எல்லா உயர் பண்புகளும் உடையவள் என்க. செழுமை - அழகு, மணி - அழகு. செழுமணிக் கொடிகள், வால் வெண் சங்கு என்பதுபோல. ஐயன் - பெருமையிற் சிறந்தோன், தலைவன், ஈசன் என்றுமாம். கொடிகள் என்னும் கைகள் - உருவகம். திருவருட் கருத்து முற்றுதற் பொருட்டே திருவவதாரங்கள் நிகழினும் இவ்விடத்து அது நிகழ்ந்தமை கருதி 'யான் செய் மாதவம்' எனப்பட்டது. செழுமணிக் கொடிகள் - இரத்தினங்கள் அழுத்திய காம்புகளையுடைய கொடிகளுமாம். அம்மா - வியப்பிசை.

2. நிரம்பிய மாடத் தும்பர் நீண்மணிக் கொடிக ளெல்லாம்
தரம்பிற ரின்மை யுன்னித் தருமமே தூது செல்ல
வரம்பில்பே ரழகி னோடு மணஞ்செய்வான் வருகின் றானென்
றரம்பையர் விரும்பி னூடி மாடலி னுடக் கண்டார்.

பொழிப்புரை:

நிறைவாகிய தகுதி பிறரெவர் மாட்டும் இல்லாமையை நினைந்து தரும தேவதையே தூதுசெல்ல எல்லையற்ற பேரழகினையுடைய பிராட்டியை மணக்க வருகின்றான் என, தேவமாதர் விரும்பினிடத்து ஆடும் ஆட்டம் என, மேல் மாடங்களின்மீது வரிசையாகக் கட்டிய கொடிகள் ஆட (அவர்கள்) கண்டார்கள்.

பதவுரை:

நிரம்பிய தரம் பிறர் இன்மை கண்டு - நிறைவாகிய தகுதி பிறர் எவரிடத்தும் இல்லாமையை நினைந்து, தருமம் ஏ - தருமதேவதையே, தூது செல்ல - தூதாகச் சென்று வேண்ட, வரம்பு இல் பேர் அழகினோடு - எல்லை சொல்லற்கரிய அழகினையுடைய பிராட்டியை, மணம் செய்வான் வருகின்றான் - மணஞ் செய்பவன் வருகின்றான், என்று - என்று கூறி, அரம்பையர் விரும்பின் ஆடும் ஆடலின் - தேவமாதர் விரும்பினிடம் ஆடும் ஆட்டம் என, மாடத்து உம்பர் - மேல்மாடங்களின் மீது, நிரை மணி கொடிகள் எல்லாம் - நிரையாகக் கட்டப்பட்ட அழகிய கொடிகள் எல்லாம், ஆடக் கண்டார் - ஆடுவதை (அவர்கள்) கண்டார்கள். (எ-று)

விசேட உரை:

நிரம்பிய தரம் - தருமத்தை நிலை செய்யவல்ல முழுமை பெற்ற தகுதி. சிவதனுசை எடுத்து வளைக்கவல்ல முழுமை பெற்ற தகுதி என்றுமாம். அதருமத்தை நசித்து தருமத்தை நிலை நிறுத்தவே இராமாவதாரம் நிகழ்ந்ததாதலால் தருமமே தூது செல்வதாயிற்று. தூது - பேசி இணங்கச் செய்தல், இணங்கச்

செய்வோருமாம். வரம்பில் பேரழகு - எல்லை செய்வரிய உருவ குண அழகுகள். அரம்பையர் நிகழப்போவதை நன்கு தெரிந்திருத்தனர் ஆதலின் 'செய்வான்' என்றார். செய்வான், எதிர்கால வினையெச்சமுமாம். அறங்கெட அரக்கராற் பெருந்துயரடைந்தவரும், இராமாவதார மகிமையை நன்கு உணர்ந்தவரும் விசும்பினரேயாதலால் அவர் மகளிர் விசும்பிடத்தே மகிழ்ந்து ஆடினராக, அதனைக்கண்டு அங்ஙனமே கொடிகளும் ஆடின என்பார், 'அரம்பையர் விசும்பிலாடும் ஆடலின் ஆட' என்றார்.

யானைப்போர்

3. தயிருறு மத்தீற் காம சரம்படத் தலைப்பட் டூடும்
உயிருறு காத லாரி னென்றையொன் றெருவ கில்லாச்
செயிருறு மனத்த வாகித் தீத்திரள் சிந்த வன்றை
வயிரவாண் மருப்பி யானை மலையென மலைவ கண்டார்.

பொழிப்புரை:

தயிர் கடையப் பொருத்திய மத்தனைய காமனது சரம் உறுத்த கூடிப் பிணங்கும் உயிரனைய காதலர்போல யானைகள் கோபம் மிகுந்த மனத்தன போலாகி சிவந்த கண்களினின்றும் நீத்திரள் சிந்த ஒன்றை யொன்று நீங்காவாய் மலைகளெனப் போரிடுதலை அவர்கள் கண்டார்கள்.

பதவுரை:

தயிர் உறு மத்தின் - தயிர் கடையப் பொருந்திய மத்தனைய, காமன் சரம் பட - மன்மதனது பாணங்கள் பாய, தலைப்பட்டு - கூடி, ஊடும் - பிணங்கும், உயிர் உறு காதலாரின் - உயிரனைய அன்பினர் போல, வயிரம் வால் மருப்பு யானை - வயிரம் போன்ற உறுதியான வெள்ளிய கொம்புகளையுடைய யானைகள், செயிர் உறு மனத்த ஆகி - கோபம் மிக்க மனத்தன போல் ஆகி, செம்கண் தீ திரள் சிந்த - சிவந்த கண்களினின்றும் நெருப்பின் திரள் சிந்த, ஒன்றை ஒன்று ஒருவகில்லா - ஒன்றை ஒன்று நீங்காதனவாகி, மலை என - மலைகள் போல, மலைவகண்டார். போரிடுதலை (அவர்கள்) கண்டார்கள்.

விசேட உரை:

காதலாரின் தலைப்பாடும் ஊடலும் போல என்றதனால் செயிருறு மனத்த போல என உவம உருபு வருவிக்கப்பட்டது. இதனால் அப்பகைக்கண் மாக்களும் மக்கட் பண்பு பெற்றிருந்தன என்பதும் உணர்த்தப்பட்டது. மத்தும் காமன் சரமும் முறையே தயிரையும் மனத்தையும் நிலைகலக்குதல் பொதுமை. வயிர வான்

மருப்பு எனக் கொண்டு வயிரம்பதித்த பூணணிந்த பெருமை யுடைய மருப்பு எனினுமாம்.

துகிற் கொடிகள்

4. பகற்கதிர் மறைய வானம் பாற்கடல் கடுப்ப நீண்ட
துகிற்கொடி மிதிலை மாடத் தும்பரிற் றுவன்றி நின்ற
முகிற்குலந் தடவுந் தோறு நனைவன முகிலிற் சூழ்ந்த
அகிற்புகை கதுவுந் தோறும் புலர்வன வாடக் கண்டார்.

பொழிப்புரை:

சூரியனது கதிர்கள் மறையவும் வானம் பாற்கடலைப் பொருந்தவும் மிதிலாபுரியின் மாடங்களின் மேல் கட்டப்பட்ட நீண்ட துகிற் கொடிகள், முகில்களின் கூட்டம் வரும்போது நனைவனவாகி முகிலெனச் சூழ்ந்த அகிற்புகை பற்றும்போது உலர்வனவுமாக அவர்கள் கண்டார்கள்.

பதவுரை:

பகல் கதிர் மறைய - சூரியனது கிரணங்கள் மறையவும், வானம் பாற்கடல் கடுப்ப - ஆகாயமானது பாற்கடலைப் பொருந்தவும், மிதிலை மாடத்து உம்பரில் - மிதிலாபுரியின் மாடங்களின் மேல், துவன்றி நின்ற - நெருங்கி நின்றனவாகிய, நீண்ட துகில் கொடி - கட்டப்பட்ட நீண்ட வெண் துகிலாலாகிய கொடிகள், முகில் குலம் தடவும் தோறும் நனைவன - மேகக்கூட்டங்கள் வருடும் போதெல்லாம் நனைவனவாகி, முகிலின் சூழ்ந்த அகில் புகை கதுவும் தோறும் - மேகங்கள் எனச் சூழ்ந்த அகிலின் புகை பற்றும் போதெல்லாம், புலர்வன - உலர்வனவுமாக, கண்டார் - (அவர்கள்) கண்டார்கள்.

விசேட உரை:

உம்பர் - மேல்: உம்பரில் மிதிலை எனக் கொண்டு தேவருலகத்தும் இல்லாத சிறப்பினையுடைய மிதிலை என்றுமாம். துகில் - இடையல், வேதகம், பட்டு, ஏடகம் என நால்வகைத் தெனினும் பாற்கடல் கடுப்ப என்றதனால் வெண்டுகிலையே குறித்தது.

5. ஆதரித் தமுதிற் கோரூர்ப் தவயவ மமைக்குந் தன்மை
யாதெனைத் திகைக்கு மலிலான் மதனற்கு மெழுத வொண்ணைச்
சீதையைத் தருத லாலே திருமக ளிருந்த செய்ய
போதெனப் பொலிந்து தோன்றும் பொன்மதில் மிதிலை புக்கார்.

பொழிப்புரை:

பிராட்டியின் திருமேனியை ஒத்த உருவை எழுதவிரும்பி அழுதில் எழுதுகோலைத் தோய்த்து அவள் உறுப்புக்களை எழுதுமாறு யாதெனைத்

திகைத்து நிற்குமேயல்லாது மதனனுலும் எழுதமுடியாத சீதாதேவியைத் தருதல் பெற்ற சிறப்பினுல் திருமகள் வாழும் செந்தாமரை மலர்போலப் பொலிந்து தோன்றும் பொன்மதில் சூழ்ந்த மிதிலை நகரினுள்ளே அவர்கள் புகுந்தனர்.

பதவுரை:

ஆதரித்து – (பிராட்டியின் திருமேனியை ஒத்த ஓர் உருவை எழுத) விரும்பி, அமுதில் கோல் தோய்த்து - அமிர்தத்தில் எழுது கோலைத் தோய்த்துக்கொண்டு, அவயவம் அமைக்கும் தன்மை யாது என - உறுப்புக்களை எழுதும் விதம் யாதோ என்று, திகைக்கும் அல்லால் – மயங்குமேயல்லாது, மதனற்கும் எழுத ஒண்ணு சீதையை - மன்மதனுக்கும் எழுதுதற்கு இயலாத சீதாதேவியை, தருதலால் - பெற்ற சிறப்பினுல், திருமகள் இருந்த செய்ய போது என பொலிந்து தோன்றும் - இலக்குமி வீற்றிருந்த செந்தாமரை மலரே எனும்படி சிறந்து விளங்கும், பொன் மதில் மிதிலை புக்கார் - அழகிய மதில் களையுடைய மிதிலாபுரியின்கண் (அவர்கள்) புகுந்தார்கள்.

விசேட உரை:

ஆதரம் - ஆசை. மதனன் – மனத்தைக் கலக்குவோன். அவனே அழகிய மாதரை அறிந்து ஆடவர் மனத்தைக் கலக்குவோனுதலின் பிராட்டியின் உருவை ஒருகால் எழுதவல்லான் என்று கற்பித்தார். திருமகள் இருந்த செய்ய போதுக்கும் மிதிலைக்கும் வாழ்வுக்கு இடமாதல், அழகு, வாட்டமின்மை முதலியன பொதுமை. சீதா - உழுபடைச்சால். சீதை - உழுபடைச் சாலில் தோன்றியவள்; இடவாகுபெயர்.

மிதிலை நகர் வீதி

6. சொற்கலை முனிவ னுண்ட சுடர்மணிக் கடலுந் துன்னி
அற்கலந் திலங்கு பன்மீ னரும்பிய வானும் போல
விற்கலை நுதலி ருமை மைந்தரும் வெறுத்து நீத்த
பொற்கலன் கிடந்த மாட நெடுந்தெரு வதனிற் போனர்.

பொழிப்புரை:

அகத்தியனுற் பருகப்பட்டபின் சுடர்மணிகளோடு கிடந்த சமுத்திர தளமும், இரவில் நெருங்கி விளங்கும் விண்மீன்கள் தோன்றிய வானமும் போல, ஒளியுடைய பிறைபோன்ற நெற்றியை உடைய மகளிரும் மைந்தரும் வெறுத்து உகுத்த ஆபரணங்கள் கிடந்த மாட வீதியிலே அவர்கள் சென்றார்கள்.

பதவுரை:

சொல் கலை முனிவன் உண்ட - இலக்கண நூலைச் செய்தருளிய அகத்திய முனிவன் உண்டபின் கிடந்த, சுடர்மணிக் கடலும் - ஒளி விடும் இரத்தினங்கள் கிடந்த கடலிடமும், அல் - இரவின்கண், கலந்து துன்னி இலங்கு பன்மீன் அரும்பிய வான்உம் போல - சேர்ந்து நெருங்கி விளங்கும் பலவாய தாரகைகள் முளைத் தெழுந்த வானமும் என, வில் கலை நுதலினரும் - ஒளி பொருந்திய பிறைச் சந்திரன் போன்ற நெற்றியை உடைய மகளிரும், மைந்தரும், ஆட வரும், வெறுத்து நீத்த பொற்கலன் - வெறுத்துப் புறத்தே எறிந்த அழகிய ஆபரணங்கள், கிடந்த மாட நெடுந்தெரு அதனில் போனூர் - மாளிகைகளையுடைய பெருந் தெருவில் (அவர்கள்) சென்றார்கள்.

விசேட உரை:

சொற்கலை - இலக்கண நூல். உண்ட சுடர் மணிக்கடல் - உண்டபின் சுடர்மணிகளோடு விளங்கும் கடற்றளம். அல் - இருள் கலந்து துன்னி இலங்குதல், தம்முள் மாறுபட்ட ஒளி கள் ஒன்றுகி நெருங்கிப் பிரகாசித்தல். கலை - சந்திரகலை பதி னாறினென்று. மைந்தர் - வலிமையுடையோர்; அவர் குமாரரா கிய ஆடவர். பொற்கலன் - அழகிய ஆபாணங்கள்; பொன்னு லாகிய ஆபரணங்களுமாம். நீத்தல் - புறத்தே போக்குதல். கல விக்கண் இடையூறு செய்தமையே வெறுத்து நீத்தமைக்குக் காரணமாம். அல், ஆகுபெயர்.

7. தாறுமாய் தறுகட் குன்றந் தடமத வருவி தாழ்ப்ப
ஆறுமாய்க் கலின மாவி லாழியா லழிந்தோ ராருய்ச்
சேறுமாய்த் தேர்க ளோடத் துகளுமா யொன்றே டொன்று
மாறுமா ருகி வாளா கிடக்கிலா மறுகிற் சென்றார்.

பொழிப்புரை:

இருப்புமுள்ளை மாய்க்கின்ற குரூரமான மலைபோன்ற களிற்றுயானை கள் மிக்க மதத்தைச் சொரியக் கருமையான நதியாகியும், குதிரைகளின் வாய் நுரையால் நிறமழிந்து அது வெண்ணிற நதியாகியும், தேர்கள் ஓடச் சேருகியும், பின் துகளாகியும் ஒன்றேடொன்று மாறுபட்டு ஒருநிலையில் நில்லாத பெருவீதியில் (அவர்கள்) சென்றார்கள்.

பதவுரை:

தாறு மாய் - இருப்புமுள்ளை மூரித்து மாய்க்கின்ற, தறுகண் குன் றம் - குரூரமான மலைபோன்ற களிற்று யானைகள், தட மத அருவி தாழ்ப்ப - மிக்க மதமாகிய அருவியைச் சொரிய, ஆறு உம் ஆய் -

(கருமையாகிய) நதியாகியும், கலினம் மா விலாழியால் - கடிவாளம் பூண்ட குதிரைகளின் வாய் நுரையால், அழிந்து - அந்நிறம் அழிந்து, ஓர் ஆறு ஆய் - ஒரு வெண்ணிற ஆறு ஆகி, தேர்கள் ஓட - தேர்கள் இடையீடின்றி ஒடுதலினால், சேறு உம் ஆய் - சேறுய நிலையையும் எய்தி, துகள் உம் ஆய் - பின் புழுதியுமாகி, ஒன்றேடு ஒன்று மாறு மாறு ஆகி - ஒன்றுட னொன்று மாறுபடுந் தன்மை பெற்று, வாளா கிடக்கிலா மறுகில் சென்றார் - ஒரு தன்மைத்தாகக் கிடத்தல் இல்லாத குறுந்தெருவில் (அவர்கள்) சென்றார்கள்.

விசேட உரை:

தாறு – அங்குசமுமாம். தறுகண்மை - அஞ்சாமையுமாம். யானைகளின் மதநீரால் கருநிறத்தினதாய நதி குதிரைகளின் வாய் நுரையால் வெண்ணிற நதியாயிற்று என்பதாம். அவ் வழியே தேர் இடையீடின்றி ஓட ஓடச் சேறுகிப் பின் புழுதியு மாக யானைகள் மீண்டும் செல்ல கருநிற நதியாகி குதிரைகள் செல்ல வெண்ணிற நதியாக மாறி, தொடர்ந்து வரும் தேரால் சேறும் புழுதியுமாகி ஒரு நிலையிற் கிடக்காத மறுகு என்க: யானை குன்றமாக அதன் மதம் அருவியாயிற்று.

8. தண்டுத லின்றி யொன்றித் தலைத்தலைச் சிறந்த காதல்
உண்டபின் கலவிப் போரி னெசிந்தமென் மகளி ரேபோல்
பண்டரு கிளவி யார்தம் புலவியிற் பரிந்த கோதை
வண்டொடு கிடந்து தேன்சோர் மணிநெடுந் தெருவிற் சென்றார்.

பொழிப்புரை:

நீங்குதலின்றித் தலைமை பெருமைகளில் ஒன்றிச் சிறந்த அன்பினைச் சுவைத்தபின் நிகழ்வதாய புணர்ச்சிப் போரின்பின் துவண்டு கிடந்த மென்மையான மகளிரேபோல இனிய சொற்களையுடைய மகளிர் ஊட லின்போது அறுத்தெறிந்த மலர்மாலைகள் வண்டோடு கிடந்து தேன் சொரியும் அழகிய பெருந் தெருவில் (அவர்கள்) சென்றார்கள்.

பதவுரை:

தண்டுதல் இன்றி - நீங்குதல் இல்லாது, தலை தலை ஒன்றி - தலைமை பெருமைகளில் பொருந்தி, சிறந்த காதல் உண்டபின் - சிறப் பினைப் பெற்ற அன்பைச் சுவைத்தபின், கலவிப்போரில் - புணர்ச்சி யாகிய போரில், ஒசிந்த மெல் மகளிர் போல் - துவண்டு கிடந்த மென்மையான மகளிரே போல, பண் தரு கிளவியார் தம் புலவியில் - இன்னிசையைத் தருவது போன்ற சொற்களையுடைய பெண்களது ஊடலின்போது, பரிந்த கோதை – அறுத்தெறிந்த மலர் மாலைகள்,

வண்டோடு கிடந்து - வண்டினோடு விழுந்து கிடந்து, தேன் சோர் மணி நெடுந் தெருவில் சென்றார் - தேன் வழிதற்கிடமான அழகிய பெருந் தெருவில் (அவர்கள்) சென்றார்கள்.

விசேட உரை:

தண்டுதல் - நீங்குதல். தலை - தலைமை, தலை - பெருமை. தலைமையும் பெருமையும் சிறிதும் வேறுரு நிலையிற் பொருந்திச் சிறப்புற்ற அன்பையே தலைத்தலை ஒன்றிச் சிறந்த காதல் என்றார். பரிதல் - அறுத்தல். தலைத்தலை ஒன்றிச் சிறந்த காதல் என்பதற்கு ஆடவர் மகளிர் என்ற இரண்டிடத்தும் ஒருதன்மைத்தாய் மிக்கிருந்த ஆசையின் பயனுகிய காமவின்பம் என்பாருமுளர். புணர்ச்சி, அன்பின் பயனெனவெனக் கலங்கி மெலிந்த மகளிர் சோர்வுற்றுக் கிடந்தவாறு கிடந்த கோதைகள் எனினும் பொருந்தும். கோதையிடத்துத் தேன் சொரிவது போல மகளிரிடத்து வியர்வை வழிதல் நிகழும்.

மகளிர் ஆடல்

9. நெய்தீர் னரம்பிற் றந்த மழலையி னியன்ற பாடல்
தைவரு மகர வீணை தண்ணுமை தழுவித் தூங்கக்
கைவழி நயனஞ் செல்லக் கண்வழி மனமுஞ் செல்ல
ஐயநுண் ணிடைய ராடு மாடக வரங்கு கண்டார்.

பொழிப்புரை:

நெய்பூசிய கூட்டமாகிய நரம்புகளில், தடவுதலைப் பொருந்திய மகரயாழ் தந்த இனிய பாடலையும், மழலை யினைய இனிய சொற்களால் இயன்ற பாடலையும் மத்தளத்தின் இனிய ஓசை தழுவி அமைதி செய்ய, கைசென்றவழி கண்கள் செல்ல, கண் சென்றவழி மனம் தொடர, நுண்ணிய இடையினராய மகளிர் ஆடுகின்ற ஆடகப் பொன்னாலாய அரங்கினை (அவர்கள்) கண்டார்கள்.

பதவுரை:

நெய் திரள் நரம்பின் - நெய் பூசிய கூட்டமாகிய நரம்புகளில், தைவரும் மகர வீணைதந்த பாடல் - தடவுதலைப் பொருந்திய மகரயாழ் தந்த இனிய பாடலையும், மழலையின் இயன்ற பாடல் - குதலை மொழியென அமைந்த இனிய சொற்களால் இயன்ற பாடலையும், தண்ணுமை தழுவி தூங்க - மத்தளம் வேறுபாடறப் புல்லி அமைதி செய்ய, கை வழி நயனம் செல்ல - கைகள் சென்ற வழி கண்கள் தொடர, கண்வழி மனமும் செல்ல - கண்கள் சென்றவழி மனமும் தொடர, ஐயம் நுண் இடையார் - உண்டோ என சந்தேகத்துக்கிட

மான இடையை உடைய மகளிர், ஆடும் ஆடக அரங்கு கண்டார் - நடனஞ் செய்கின்ற ஆடகப் பொன்னுற் செய்த ஆடிடங்களை (அவர் கள்) கண்டார்கள்.

விசேட உரை:

நெய் - தேனுமாம். ''நெய்க்கணிஞல்'' என்பதுபோல. நெய் திரள் நரம்பு - தேனெழுக்கெனத் திரண்ட நரம்பு. வீணையும் மிட றும் தண்ணுமையும் ஒன்றித் தழுவாத வழி ஆடலே நிகழ முடி யாமை கருதி அவற்றின் அமைதி முதலிற் பேசப்பட்டது. கையும் கண்ணும் மனமும் ஒருவழிப்படாதவிடத்துக் கருத்துக்களை உணர்த் தும் முத்திரைகளோடு பொருந்திவரும் அபிநயங்கள் யிரற் றனவாகும் என்பது கருதியே 'கைவழி நயனமும், கண்வழி மன மும் செல்ல' என்றார். நயனம் - வழியை யடைவித்தலுடையது. மகரயாழ், பத்தொன்பது நரம்புகளையுடைய அங்காந்த சுரு மீனின் வடிவினது. ஆடகம் - நால்வகைப் பொன்னின் ஒன்று. சாதரூபம், கிளிச்சிறை, சாம்பூநதம் என்பன மற்றவை. ஆடக அரங்கு - ஆடகப் பொன்னுற் செய்த வரங்கு. அரங்கு - இடம். ஆடற்கண் மழலையி னியன்ற பாடலே வீணையிலும் இசைக்கப் படுவதால் நரம்பிற்றந்த என்பதனேடும் பாடல் வருவிக்கப்பட் டது.

மகளிர் ஊசலாடுதல்

10. பூசலி னெழுந்த வண்டு மருங்கினுக் கிரங்கிப் பொங்க
மாசறு பிறவி போல வருவது போவ தாகித்
காசறு பவளச் செங்காய் மரகதக் கழுதிற் பூண்ட
ஊசலின் மகளிர் மைந்தர் சிந்தையோ டுலவக் கண்டார்.

பொழிப்புரை:

மகளிர், மறுவற்ற பவளம் போன்ற சிவந்த காய்களையும் மரகதம் போன்ற பசிய காய்களையுமுடைய கழுகுமரங்களிற் கட்டிய ஊஞ்சல களிலே பேரொலி செய்தெழுந்த வண்டுகள் இடையின் மென்மைக்காக இரங்கி மெல்லெனலி செய்ய, குற்றம் நிறைந்த பிறப்பைப் பெறற உயிர் தரியாது பிறத்தலும் இறத்தலும் அடைதல் போல ஆசை தமி ழங்கா ஆடவர் மனம் தொடர, கீழ்வருவதும் மேற்போவதுமாய் ஆடுவதை (அவர் கள்) கண்டார்கள்.

பதவுரை:

மகளிர் - பெண்கள், காசு அறு பவளச் செம் காய் மரகதம் காய் கழுகில் பூண்ட - மறுவற்ற பவளம் போன்ற சிவந்த காய்களை

யும் மரகதம் போன்ற பசிய காய்களையுமுடைய கமுகமரங்களில் கட்டிய, ஊசலின் - ஊஞ்சலிலே, பூசலின் எழுந்தவண்டு மருங்கினுக்கு இரங்கி பொங்க - பேரொலி செய்து எழுந்த வண்டுகள் இடையின் மென்மைக்காக இரங்கி மெல்லொலி செய்ய, மாசு உறு பிறவி வருவது போவது போல ஆகி – குற்றம் நிறைந்த பிறப்பை எடுத்த உயிர் இடையீடின்றிப் பிறத்தலாகிய வருகையையும் சாதலாகிய செல்லுகையையும் எய்துதல் போல் ஆகி, மைந்தர் சிந்தையோடு உலவ கண்டார் – தம்மி னீங்கா ஆசையுடைய ஆடவர் மனம் நீங்காது தொடர ஆடுவதை (அவர்கள்) கண்டார்கள்.

விசேட உரை:

காய் மரகதத்தோடும் சேர்க்கப்பட்டது. பூசல் - பேரொலி. பொங்குதல் - ஒலித்தல். அஃது இரக்கத்தால் பிறந்ததாதலின் மெல்லொலி எனப்பட்டது. மைந்தர் சிந்தையோடு - தத்தம் காதலரைப் பற்றி நீங்காது நின்ற சிந்தையோடு எனினுமாம். 'மாசுறு பிறவி' என்றது 'பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்ற உயிரை' அது பிறந்திறந் துழலுவதற்கான வினைகளையே செய்வது. "பூசலி னெழுந்தவண்டு மருங்கினுக் கிரங்கிப் பொங்க" என்பது தற்குறிப்பேற்றவணி.

கடை வீதிகள்

11. வரப்பறு மணியும் பொன்னு மாரமுங் கவரி வாலும்
சுரத்திடை யகிலு மஞ்ஞுத தோகையுந் தும்பிக் கொம்பும்
சுரப்பவு நிரப்பு மள்ளர் குவிப்புறக் கரைக டோறும்
பரப்பிய பொன்னி யன்ன வாயமும் பலவுங் கண்டார்.

பொழிப்புரை:

வரம்பில்லாத இரத்தினங்களையும், பொன்னையும், முத்துக்களையும், கவரிமான மயிரையும், அகிலையும், மயிற்பீலியையும், யானைக் கொம்புகளையும், வரம்புகளையமைக்கும் உழவர் குவித்து வைக்கும்படி கரை தொறும் பரப்பிய காவிரி நதியை ஒத்த கடைவீதிகள் பலவற்றையும் (அவர்கள்) கண்டார்கள்.

பதவுரை:

வரம்பு அறு மணி உம் - அளவில்லாத இரத்தினங்களையும், பொன் உம் - பொன்னையும் முத்து உம் - முத்துக்களையும், கவரி வால் உம் - கவரி மானின் தோகையாகிய மயிரையும், சுரத்திடை அகில் உம் - வெம்மையுடைய காட்டினிடத்தவாய அகிற்கட்டை

களையும், மஞ்ஞை தோகை உம் - மயிலின் பீலியையும், தும்பி கொம்பு உம் - யானையின் கொம்புகளையும், குரம்பு அணை நிரப்பு மள்ளர் - வரம்புகளாய கரையைக் கட்டும் உழவர், குவிப்புற – குவித்து வைக் கும்படி, கரைகள் தோறும் பரப்பிய - கரைகளிலெல்லாம் பரவச் செய்கின்ற, பொன்னியன்ன ஆவணம் பலவும் - காவிரி நதியை ஒத்த கடைவீதிகள் பலவற்றையும், கண்டார் (அவர்கள்) கண்டார் கள்.

விசேட உரை:

மணிமுதல் தனித்தனி குவித்து வைக்கப் பெறும் கடைவீதி மள்ளர் தனித்தனி குவித்து வைக்குமாறு அவற்றை மலையிடத் திருந்து வாரிக்கொணரும் பொன்னியை ஒக்கும் என்பதாம். அகில் சந்தனம் போன்றதொரு நறுமணந்தரு மரம். அது பாலை நிலத்து வளர்வதால், 'சுரத்திடை அகில்' என்றார்.

மகளிர் இசைபாடு மிடங்கள்

12. வள்ளுகிர்த் தளிர்க்கை நோவ மாடகம் பற்றி வார்ந்த
கள்ளென நரம்பு வீக்கிக் கையொடு மனமுங் கூட்டி
வெள்ளிய முறுவ லூன்ற விருந்தென மகளி ரீந்த
தெள்விளிப் பாணித் தீந்தேன் செவிமடுத் தினிது சென்றார்.

பொழிப்புரை:

வளமை காட்டும் நகங்களுடைய தளிர்க் கரங்கள் நோவ முறுக் காணிகளைப் பிடித்து ஒழுகும் கள்ளென நாதசுகம் தருமாறு நரம்புகளைக் கட்டிக் கையொடு மனத்தையும் ஒருமையெய்தச் சேர்த்து இளமுறுவல் தோன்றப் புதுமை எனுமாறு மகளிர் உவந்து தந்த தெளிந்த பழ இரசம் போன்ற இசைப்பாட்டாகிய இனிய தேனைக் காதாற் பருகி மகிழ்ந்து (அவர்கள்) சென்றார்கள்.

பதவுரை:

வள் உகிர் தளிர் கை நோவ - வளமை காட்டும் நகங்களையுடைய தளிர் போன்ற கைகள் நோகும்படி, மாடகம் பற்றி – முறுக்காணி களைப் பிடித்து, வார்ந்த கள் என நரம்பு வீக்கி - ஒழுகு நறுந்தேன் என (நாதசுகந் தருமாறு) நரம்புகளை இறுகக் கட்டி, கையொடு மனமும் கூட்டி - கைவிரல்களோடு மனத்தையும் ஒருமையுறச் சேர்த்து, வெள்ளிய முறுவல் தோன்ற - வெண் பொன் போன்ற பற் கள் (இளநகை செய்தலால்) சிறிது தோன்ற, மகளிர் விருந்து என ஈந்த - பெண்கள் புதுமை எனும்படி அருளிஞலளித்த, தெள் பாணி

விளி தீம் தேன் - தெளிந்த பழஇரசமனைய இசைப்பாட்டாகிய இனிய தேனை, செவி மடுத்து - செவிகளாற் பருகி, இனிது சென்றார் - மகிழ்ந்து (அவர்கள்) சென்றார்கள்.

விசேட உரை:

வள் – வளமை. மாடகம் - வீணையின் முறுக்காணி; அது நரம்பை வீக்குங்கருவி. வார்ந்த கள் என்றது ஒழுகும் தேனை யொத்த நாதசுகத்தை. வெள்ளிய முறுவல் தோன்ற - வெள்ளி யனைய பற்கள் சிறிது தோன்ற, அது இளநகையின் போதே நிகழுமென்க இளநகை, தான் அனுபவித்துப் பாடும்போது பிறப்பது. விருந்து - புதுமை; அது யாண்டும் எவர்மாட்டும் கேட்டற்கரியதொரு இனிமையின் அற்புத அமைவு. ஈதல் - அருளிற் கொடுத்தல். பாணி - பழஇரசம். விளி - இசைப்பாட்டு.

குதிரைகள் சுழன்றோடுதல்

13. கொட்புறு கலினப் பாய்மா குலான்மகன் முடுக்கி விட்ட
மட்கலத் திகிரி போல வாளியின் வருவ மேலோர்
நட்பினி ரிடைய ருவாய் ஞாலிய ருணர்வி னொன்றாய்க்
கட்புலத் தினைய வென்று தெரிவில தியக் கண்டார்.

பொழிப்புரை:

குயவன் சுற்றிய மட்கலத்துக்குத் துணையான சக்கரம் போல, வட்ட கதியாக ஓடிவருவனவும் மேலோர் நட்பென இடையருதனவுமாகி ஞானி களின் அறிவுபோல் ஒரே தன்மை உடையனவுமாகி கண் பார்வைக்கு இத்தன்மையன என அறிதல் கூடாதனவுமான கடிவாளம் பூட்டப்பட்ட சுழன்று செல்லும் குதிரைகள் திரிதலை (அவர்கள்) கண்டார்கள்.

பதவுரை:

குலால் மகன் முடுக்கி விட்ட - குயவனால் சுற்றி விடப்பட்ட, மண் கலம் திகிரி போல - மட்பாத்திரங்களுக்குத் துணைக்கருவியான சக்கரம் போல, வாளியின் வருவ - வட்ட கதியாய் வருவனவாகவும், மேலோர் நட்பினின் இடை அருவாய் - பெரியோர் நட்பென இடை யருமை உடையனவாகவும், ஞானிகள் உணர்வின் ஒன்று ஆய் - ஞானிகளின் அறிவேபோல் ஒரே இயல்புமுடையனவாகவும், கண் புலத்து இனைய என்று தெரிகில - கண்பார்வைக்கு இத்தன்மையுடை யன என்று தெரியக் கூடாதனவுமாகி, கொட்பு உறு கலினம் பாய்மா – சுழற்சி மிகுந்து கடிவாளத்தோடும் பாய்ந்து செல்லும் குதிரைகள் திரியக் கண்டார் - திரிதலை (அவர்கள்) கண்டார்கள்;

விசேட உரை:

குலால் மகன் – குயத் தொழிலாளன். வாளி - வட்டமாயோடுதல். இடையருமை - இறுதிவரை வேகம் மாறுமை. ஒன்றுதல் - செல்லும் நெறி மாறுது ஒன்றேயாகி அமைதல். இயைய - இத்தன்மையுடையன: கொட்பு - சுழற்சி.

மாடங்களில் மாதர்கள்

14. வாளரம் பொருத வேலும் மன்மதன் சிலையும் வண்டின்
கேளொடு கிடந்த நீலச் சுருளுஞ் செங்கிடையுங் கொண்டு
நீளிருங் களங்க நீக்கி நிரைமணி மாட நெற்றிச்
சாளரந் தோறுந் தோன்றுஞ் சந்திர வதயங் கண்டார்.

பொழிப்புரை:

அரத்தால் அராவப்பட்ட ஒளியையுடைய வேலையும், மன்மதனது வில்லையும், வண்டினத்தோடு கிடந்த சுருள் செம்மைசெய்த சடை முதலியவற்றையுங் கொண்டு, நீண்ட பெரிய களங்கத்தையும் நீக்கி, வரிசையாக அமைந்த மாளிகைகளின் மேலிடத்தனவாய சாளரங்களின் வாயில்கள் தோறும் தோன்றும் சந்திரர்களின் உதயத்தை (அவர்கள்) கண்டார்கள்.

பதவுரை:

அரம் பொருத வாள் வேலும் - அரத்தால் அராவப்பட்ட ஒளி பொருந்திய வேலினையும், மன்மதன் சிலையும் - மாரனது சிலையையும், வண்டின் கேள் ஒடு கிடந்த நீலச் சுருளும் செங்கிடையும் - வண்டின் சுற்றத்தோடு கிடந்த இருண்ட சுருள் செம்மை செய்த சடை முதலிய ஐம்பால் முடிகளையும், கொண்டு - தம்மிடத்தே கொண்டு, நீள் இரு களங்கம் நீக்கி - நெடிதிருந்த பெரிய கறையை அகற்றி, நிரை மணி மாடம் நெற்றி சாளரம் தோறும் - வரிசையாக அமைந்த மாளிகைகளின் மேலிடத்தனவாய சாளரங்களின் வாயில்கள் தோறும், தோன்றும் சந்திர உதயம் கண்டார் - காட்சிதரும் சந்திரர்களின் உதயத்தை (அவர்கள்) கண்டார்கள்.

விசேட உரை:

வாள் அரம் - ஒளிபொருந்திய அரம்; வாள் விசேடம் என்றுமாம். மன்மதன் - புத்தியை மயக்குவோன். கிடை - சடை, கொண்டை, குழல், பனிச்சை, முடி, சுருள் என ஐந்து வகை

யாக மகளிர் மயிரை அழகு செய்வர். அவற்றுள் சுருளும் பனிச் சையும் சொல்லப்பட்டன. பனிச்சை - சடை; பின்னி முடிக்கப் படுவது. நீலம் - இருள். வேல் கண்ணுக்கும், சில புருவத்துக் கும், சந்திரன் முகத்துக்கும் உவமை. பகலிலே ஒளி மழுங்காத பல சந்திரர்களைக் கண்டார்கள் என்பது உருவக உயர்வு நவிற்சி அணி.

மதுவருந்தி ஊடிய மகளிர்

15. பளிக்கு வள்ளத்து வார்த்த பசுநறுந் தேறல் மாந்தி
வெளிப்படு நகைய வாகி வெறியன மிழற்று கின்ற
வொளிப்பினு மொளிக்க வொட்டா வூடலு முணர்த்து மாபோற்
களிப்பினை யுணர்த்துஞ் செவ்விக் கமலங்கள் பலவுங் கண்டார்.

பொழிப்புரை:

பளிங்குக் கிண்ணத்திலே வார்க்கப்படும் குளிர்ந்த நறிய கள்ளைக் குடித்து அதனால் வெளிப்படும் சிரிப்பை உடையனவாயும், கலக்க நிலையனவாய சொற்களைக் குதலையாகப் பேசுவனவாயும், மறைக்க முயன் றும் அது முடியாத பிணக்கை அறிவிக்கும் வகையில் இன்பநுகர்ச்சியை வெளிப்படுத்துவனவாயுமுள்ள அழகிய செந்தாமரை மலர்கள் பலவற்றை யும் (அவர்கள்) கண்டார்கள்.

பதவுரை:

பளிக்கு வள்ளத்து வார்க்கும் - பளிங்குக் கிண்ணத்திலே வார்க் கப்படுகிற, பசு நறு தேறல் மாந்தி - குளிர்ந்த வாசனையுடைய மது வைக் குடித்து, வெளிப்படு நகைய ஆகி - அதனால் வெளிப்படும் சிரிப்பை உடையனவாயும், வெறியன மிழற்றுகின்ற - கலக்க நிலை யிற் பிறப்பனவாய சொற்களைக் குதலையாகப் பேசுகின்றனவாயும், ஒளிப்பினும் ஒளிக்க ஒட்டா ஊடலை உணர்த்தும் ஆ(று) போல் - மறைக்க முயன்றும் மறைக்க முடியாத ஊடலை அறிவிக்கும் வகை யில், களிப்பினை உணர்த்தும் - இன்ப நுகர்ச்சியை வெளிப்படுத் துவனவாயுமுள்ள, செவ்வி கமலங்கள் பலவும் கண்டார் - அழகிய செந்தாமரை மலர்கள் பலவற்றையும் (அவர்கள்) கண்டார்கள்.

விசேட உரை:

முகங்களைக் கமலங்கள் என்றது உருவக உயர்வு நவிற்சி அணி. பசுமை - குளிர்ச்சி. வெளிப்படு நகை -- பிறரைப் பார்க்கச்செய் யும் பெருஞ்சிரிப்பு. களிப்பு - இன்பநுகர்ச்சி.

மகளிர் பந்தாடுதல்

16. மெய்வரு போக மொக்க வுடனுண்டு விலையுங் கொள்ளும்
பையர வல்கு லார்த முள்ளமும் பளிங்கும் போல
மையரி நெடுங்க ணோக்கம் படுதலும் கருகி வந்து
கைபுகிற் சிவந்து காட்டுங் கந்துகம் பலவுங் கண்டார்.

பொழிப்புரை:

மெய்யா லெய்தும் காமவின்பத்தை ஆடவரொப்பத் தாமும் அனுபவித்து, அவர் தம்மினை அனுபவத்தின் விலையையுங் கொள்ளுபவரும், பாம்பின் படமனைய அல்குலை யுடையவருமான விலைமகளிரது உள்ளமும், கண்ணுடியும் போல, மை எழுதிய செவ்வரி படர்ந்த கண்ணின் பார்வை படுதலும் கருநிறமாகி கையிடம் வந்து சேரும்போது சிவந்து காட்டும் பந்துகள் பலவும் (அவர்கள்) கண்டார்கள்.

பதவுரை:

மெய்வரு போகம் - மெய்யினு லெய்தும் காமவின்பத்தை, ஒக்க உடன் உண்டு - ஆடவர் அனுபவித்தவாறே தாமும் அவருடன் அனுபவித்து, விலை உம் கொள்ளும் - அவர் தம்மினுய் பெற்ற இன்ப அனுபவத்திற்கான விலைப்பொருளையுங் கொள்ளுபவரும், பை அரவு அல்குலார் தம் - பாம்பின் படம் போலும் நிதம்பத்தை உடையவருமான விலை மகளிரது, உள்ளம் உம் - மனமும், பளிங்கு உம் போல - கண்ணுடியும் போல, மை அரி நெடு கண் நோக்கம் படுதலும் - மை எழுதிய செவ்வரி படர்ந்த கண்களின் பார்வை படும்பொழுது, கருகி - கருநிறமாகி, வந்து கை புகின் சிவந்து காட்டும் - வந்து கையிடம் சேரும்போது செந்நிறம் பெற்றுத் தோன்றுகிற, கந்துகம் பல உம் கண்டார் - பந்துகள் பலவற்றையும் (அவர்கள்) கண்டார்கள்.

விசேட உரை:

ஒக்க உடனுண்ணுதல், அவரின் வேறுகாதவகை தாமும் அவ்வின்பநுகர்தலே, பை - படம். அல்குல் - நிதம்பம். அஃதரைக் கீழ்ப் பிரதேசம். நோக்கம் - பார்வை. கந்துகம் - பந்து; விலைமாதர் தம்மை யடைந்தார் பொருள் தருமளவும் காதலுடையார் போல்வர். கண்ணுடி தன்னையடுத்த பொருளைக் காட்டுவது. கருவிழி நோக்கம் படக் கருநிறம் பெற்றும் சிவந்த கைகளிடத்தனவாகச் செந்நிறம் பெற்றும் மாறும் வெண் பந்து

கள் நிறம் மாறும்படி மகளிர் பந்தாடுதலைக் கண்டன ரென்ப தாம். இது பிறிதின் குணம் பெறலணி. 'விலையும்' உம்மை எச் சம். விலைமாதர் ''பிற நெஞ்சிற் பேணிப் புணர்பவர்'' என்ப தும், பளிங்கு ''அடுத்தது காட்டும்'' என்பதும் நோக்கற் பாலன.

மகளிர் வட்டாடிடங்கள்

17. கடகமுங் குழையும் பூணு மாரமும் கலிங்க நுண்ணூல்
மடகமும் மகர யாழும் வட்டினி கொடுத்து வாசத்
தொடையலங் கோதை சோரப் பளிக்குநாய் சிவப்பத் தொட்டுப்
படைநெடுங் கண்ணுர் வட்டாட் டாடிடம் பலவுங் கண்டார்.

பொழிப்புரை:

கைவளைகளையும், காதணிகளையும், மற்றும் ஆபரணங்களையும், இரத் தின மாலைகளையும், கலிங்கத்துப் போர்வைகளையும், மகர வீணைகளையும் பந்தயப் பொருள்களாக வைத்து வாசனையுடைய மாலைகளணிந்த கூந் தல் சோர, பளிங்காற் செய்த நாய் என்ற காய்கள சிவப்புறத் தீண்டி வேலொத்த நீண்ட விழிகளையுடைய மகளிர் வட்டாடும் இடங்கள் பல வற்றையும் (அவர்கள்) கண்டாகள்.

பதவுரை:

கடகம் உம் - கைவளைகளையும், குழை உம் - காதணிகளையும், பூண் உம் - மற்றும் ஆபரணங்களையும், ஆரம் உம் - இரத்தின மாலைகள் யும், நுண் நூல் கலிங்கம் வடகம் உம் - நுண்ணிய நூலாற் செய்த கலிங்க நாட்டுப் போர்வைகளையும், மகர யாழ் உம் - மகர வீணைகள் யும், வட்டினி கொடுத்து - பந்தயப் பொருள்களாக வைத்து, வாசம் தொடையல் அம் கோதை சோர - நறுமணமுடைய மாலைகள் யணிந்த கூந்தல் சரிந்து தளர, பளிங்கு நாய் சிவப்ப - பளிங்காற் செய்த நாய் என்னுங் காய்கள் செந்நிறம் பெற தீண்டி - தொட்டு, படை நெடு கண்ணூர் - வேல் போன்ற நீண்ட கண்களையுடைய மக ளிர், வட்டு ஆட்டு ஆடு இடம் பலவும் கண்டார் - வட்டாட்டினை ஆடுகின்ற இடங்கள் பலவற்றையும் (அவர்கள்) கண்டார்கள்.

விசேட உரை:

ஆரம் - பதக்கம், முத்துமாலை என்றுமாம். வடகம் - போர்வை. வட்டினி - பந்தயப்பொருள். நாய் - ஆடுகருவியான காய்கள். வட்டாட்டு - சூதாட்டம். வட்டு - சூதாடுகருவி.

நீராடும் மகளிர்

18. பங்கயங் குவளை யாம்பல் படர்கொடி வள்ளை நீலஞ்
செங்கிடை தரங்கக் கெண்டை சினவரா லினைய தேம்பத்
தங்கள்வே றுவமை யில்லா வவயவந் தழுவிச் சாலும்
மங்கையர் விரும்பி யாடும் வாவிகள் பலவுங் கண்டார்.

பொழிப்புரை:

தாமரை, செங்குவளை, சேதாம்பல், வள்ளை, கருங்குவளை இவற்றின மலர்களும், பாசிகளும், கெண்டை மீன்களும், வரால் மீன்களும் போலவன பலவும் வருந்த, தமக்கோர் உவமானமில்லாத அங்கங்களைக் கொண்டு மகளிர் விரும்பி நீராடுந் தடாகங்கள் பலவற்றையும் கண்டார்கள்.

பதவுரை:

பங்கயம் - செந்தாமரை மலர்களும், *குவளை* - செங்குவளை மலர்களும், *ஆம்பல்* - சேதாம்பல் மலர்களும், *படர் கொடி வள்ளை* - படர் கொடியான வள்ளையும், *நீலம்* - நீலோற்பல மலர்களும், *செம் கிடை* - செம்மை விரவிய பாசிகளும், *தரங்கம் கெண்டை* - அலைகளோடுலவும் கெண்டை மீன்களும், *சினை வரால்* - சூல்கொண்ட வரால் மீன்களும், *இனைய* - இவை போல்வன, *பலவும் தேம்ப* - பலவும் வருந்துமாறு, *தங்கள் வேறு உவமை இல்லா அவயவம் கொண்டு* - தமக்கு மற்றோர் உவமானம் இல்லாத அங்கங்களைப் பொருந்தி, *சாலும் மங்கையர்* - சிறந்த மகளிர், *விரும்பி ஆடும்* - விரும்பி நீராடுகின்ற, *வாவிகள் பலவுங் கண்டார்* - தடாகங்கள் பலவற்றையும் (அவர்கள்) கண்டார்கள்.

விசேட உரை:

பங்கயம் முதலியன மகளிர் குடைந்தாடுதலால் உடலும், உவமைக்கமையாமையால் உளமும் வருத்தமுற்றன என்க. தாமரை முகத்துக்கும், குவளை, கெண்டை கண்ணுக்கும், ஆம்பல் வாய்க்கும், வள்ளை காதுக்கும், நீலம் கிடை கூந்தலுக்கும், வரால் கணைக்காலுக்கும் உவமை. இனைய என்றது, சங்கு, கெளிறு, தண்டு முதலியனவற்றை. ''அவயவந் தழுவி'' என்பதற்கு 'முகம் செவி கண்களை மூடிக்கொண்டு' என்பாருமுளர்.

வட்டாடும் மைந்தர்

19. இயங்குறு புலன்க ளந்த மிங்குங்கொண் டேக வேகி
மயங்குபு திரிந்து நின்று மறுகுறு முணர்வி னென்னப்
புயங்களிற் கலவைச் சாந்தும் புனர்முலைச் சுவடும் நீங்காப்
பயங்கெழு குமரர் வட்டாட் டாடிடம் பலவும் கண்டார்.

பொழிப்புரை:

இயக்கமுடைய ஐம்புலன்கள் அங்குமிங்கும் இழுத்துச் செல்ல, சென்று மயங்கி அலைந்து கலங்கும் சிற்றறிவு எனுமாறு நடியன கலவை செய்த சந்தனக் குழம்பும், கலவி செய்த மகளிரின் தலைகளின் தழும்பு களும் தோள்களில் நீங்கப்பெறாத பயன் மிகுந்த இளமைக்காளை சூதா டும் இடங்கள் பலவற்றையும் (அவர்கள்) கண்டார்கள்.

பதவுரை:

இயங்குறு புலன்கள் - இயக்கம் பொருந்திய ஐம்புலன்கள், அங் கும் இங்கும் கொண்டு ஏக - அங்கும் இங்கும் என எங்கும் இழுத்துச் செல்ல, ஏகி - சென்று, மயங்குபு திரிந்து நின்று மறுகுறும் - மயங்கி அலைந்துநின்று கலங்குகிற, உணர்வு இது என்ன - சிற்றறிவே இது என்று சொல்லும்படி, கலவை சாந்து உம் - வாசனைப் பொருள்கள் கலவை செய்த சந்தனக் குழம்பும், புணர் முலை சுவடு உம் - புணர்ந்த மகளிரது முலைத்தழும்புகளும், புயங்களில் நீங்கா - தோள்களில் நீங் கப்பெறாத, பயம் கெழு குமரர் - பயன்கள் மிகுந்த இளைஞர், வட்டு ஆட்டு ஆடு இடம் - சூதாடும் இடங்கள், பலவும் கண்டார் - பலவற் றையும் (அவர்கள்) கண்டார்கள்.

விசேட உரை:

புலன்கள் - இந்திரியங்களின் உணர்ச்சிகள். புலன்கள் கொண் டேகத் திரிந்து மறுகுறு முணர்வு சிற்றறிவு. அது குமரர் ஆடும் போது எங்கும் சுற்றும் வட்டுக்கு உவமை. 'இது' என்றது வட் டினை. வட்டு - சூதாடுகருவி. வட்டாட்டு - சூது. பயம் - பயன். குமரர் பதினாறு முதல் முப்பத்திரண்டாண்டெல்லைக்குள்ளா னோராய ஆடவர்.

இளமைத்தகை

20 வெஞ்சுட ருருவெற் றன்ன மேனியர் வேண்டிற் றீயும்
நெஞ்சின ரசன் கண்ணி னெருப்புரு வலைங்க னன்னர்
செஞ்சிலைக் கரத்தர் மாதர் புலவிகள் தீருத் தீர்ந்த
குஞ்சியர் சூழ நின்ற மைந்தர்கள் குழாங்கள் கண்டார்.

பொழிப்புரை:

சூரியன் உருவெடுத்தன்ன மேனியருள், வேண்டுவார் வேண்டிய வாறு ஈயும் மனத்தினரும், ஈசன் நெற்றிக்கண் நெருப்புக்கு அழியாத மதனை ஒத்த அழகினைப் படைத்தவரும், செம்மையே புரியும் விலைல

ஏந்திய கைகளை யுடையவரும், மகளிருடல்களைத் தணித்ததனாற் சிவந்த முடியை உடையவருமாகிய குமரரின் கூட்டங்களை (அவர்கள்) கண்டார் கள்.

பதவுரை:

வெம் சுடர் உரு உற்று அன்ன மேனியர் - வெம்மையாகிய சூரி யன் உருவெடுத் தன்ன சரீரத்தை உடையவரும், வேண்டிற்று ஈயும் நெஞ்சினர் - வேண்டுவார் வேண்டியவாறு தரும் அருள் மனத்தின ரும், ஈசன் கண்ணின் நெருப்பு அரு அனங்கன் அன்னர் - சிவபிரான் நெற்றிக்கண்ணின் நெருப்புக்கு அழியாத மதனை ஒத்த அழகினரும், செம் சிலை கரத்தர் - செம்மையே புரியும் வில்லை ஏந்திய கைகளை உடையவரும், மாதர் புலவிகள் திருத்தி சேந்த குஞ்சியர் - மகளிர் ஊடல்களைத் தணித்ததனாற் சிவந்த முடியினை உடையவருமாகிய, சூழ நின்ற மைந்தர் தம் குழாங்கள் கண்டார் - சுற்றுப் புறங்களில் நின்ற குமரரது கூட்டங்களை (அவர்கள்) கண்டார்கள்.

விசேட உரை:

வேண்டிற்று ஈதல் - வேண்டியவாறு கொடுத்தல், நெருப் பரு அனங்கன் - நெருப்புக்கு அழியாத அனங்கன் அனங்கன் – உருவமில்லாதவன்; செம் சிலை - செம்மை புரியும் சிலை. செம் மையைக் கைக்கு அடையாகக்கொள்ளினு மமையும். மாதர் புல விகள் திருத்திச் சேந்த குஞ்சியர் என்றது ஊடலின்போது செம் பஞ்சூட்டிய அவ்வூடல் மகளிர் தம் பாதங்களில் மைந்தர் விழுந்து வணங்கியே தணிப்பர் என்பதை விளக்க, ''கொடுமை யொழுக் கங் கோடல் வேண்டி அடிமேல் வீழ்ந்த கிழவன்'' என்பதை நோக்கின் புலவிக்காலத்து அதைத் தணிக்கவேண்டி ஆடவர் மகளிரடிமீது வீழ்ந்து வணங்குதல் வழக்குப் போலும்.

பூஞ்சோலைகள்

21. பாகொக் குஞ்சொற் பைங்கிளி யோடும் பல பேசி
மாகத் தும்பர் மங்கையர் நாண மலர் கொய்யும்
தோகைக் கொம்பி னன்னவர்க் கன்னந் நடை தோற்றுப்
போகக் கண்டு வண்டின மார்க்கும் பொழில் கண்டார்.

பொழிப்புரை:

பாகு போன்ற இனிய சொற்கள் பலவற்றை பசுங்கிளிகளோடு பேசி விண்மேல் வாழும் அரம்பையரும் நாணுமாறு மலர்களைக் கொய் யும் மயிலும் மலர்க்கொம்பும் போன்ற மகளிர்க்கு அன்னங்கள் நடை

யழகில் தோல்வியெய்தி வெட்கிப்போதலைக் கண்டு வண்டுகள் ஆரவாரிக்கும் சோலைகளை (அவர்கள்) கண்டார்கள்.

பதவுரை:

பாகு ஒக்கும் சொல் பல பைங்கிளியோடு உம் பேசி - சர்க்கரைப் பாகுபோன்ற இனிய சொற்கள் பலவற்றைப் பசுங்கிளிகளோடும் பேசி, மாகத்து உம்பர் மங்கையர் நாண மலர் கொய்யும் - விண்ணின் மேல் வாழும் அரம்பையரும் நாணுமாறு மலர்களைக் கொய்யும், தோகை - மயில் போல்வாரும், கொம்பின் அன்னவர்க்கு - மலர்க்கொம்பு போல்வாருமாய அவருக்கு, அன்னம் நடை தோற்று போக கண்டு - அன்னங்கள் நடையழகில் தோல்வியெய்தி வெட்கிப் போதலைப் பார்த்து, வண்டினம் ஆர்க்கும் பொழில் கண்டார் - வண்டுகளின் கூட்டம் ஆரவாரிக்கும் சோலைகளை (அவர்கள்) கண்டார்கள்.

விசேட உரை:

பாகொக்குஞ் சொற் பைங்கிளியோடும் (மழலை) பல பேசி எனினுமமையும். தோகை அன்ன கொம்பு அன்ன அவர்க்கு என உவம உருபை ஈரிடத்துங் கொள்க. தோகைக் கொம்பினன்னவர் - மயிற் பீலியையுடைய கொம்பன்னவர் என்றுமாம். ஆயின் தோகை கூந்தலை உணர்த்தும். அன்னம் மகளிர் நடைக்குத் தோற்றுப்போகக் கண்டு வண்டினம் ஆரவாரிப்பதாகச் சொல்லப்படுவது குறிப்புத் தற்குறிப்பேற்ற அணி. இன் சாரியை.

அரண்மனையைச் சூழ்ந்துள்ள அகழி

22. உம்பர்க் கேயும் மாளிகை யோளி நிழல் பாய
இம்பர்த் தோன்றுந் நாகர்த நாட்டி னெழில் காட்டிப்
பம்பிப் பொங்குங் கங்கையி னுழ்ந்த படை மன்னன்
அம்பொற் கோயிற் பொன்மதில் சுற்றும் அகழ் கண்டார்.

பொழிப்புரை:

தேவர்களுக்கே ஏற்ற மாளிகை வரிசைகளின் சாயை படிதலால் இவ்வுலகில் தேவருலக அழகினைக் காண்பிப்பதும், மிகுந்து பொங்கும் கங்கையி னுழ்ந்ததும், சேனைகளையுடைய சனகனது அழகிய பொன்மயமான கோயில் மதிலைச் சூழ்ந்துள்ளதுமான அகழியை (அவர்கள்) பார்த்தார்கள்.

பதவுரை:

உம்பர்க்கு ஏயும் மாளிகை ஒளி - தேவர்களுக்கு ஏற்ற மாளிகை வரிசைகள், நிழல் பாய - சாயை தன்னிடம் படிதலால், இம்பர்

தோன்றும் நாகர்தம் நாட்டின் எழில் காட்டி - இவ்வுலகில் தோன்றுவதொரு தேவலோக அழகினைத் தன்னிடம் காண்பிப்பதும், பம்பி பொங்கும் கங்கையின் ஆழ்ந்த - மிகுந்து அலைபொங்கும் கங்காநதியிலும் ஆழ்ந்ததுமான, படை மன்னன் - படைகளையுடைய சனகராசனது, அம் பொன் கோயில் பொன்மதில் சுற்றும் அகழ் - அழகிய பொன்மயமான அரசமாளிகையைச் சூழ்ந்துள்ள அகழியை, கண்டார் - (அவர்கள்) கண்டார்கள்.

விசேட உரை:

ஒளி - வரிசை. நாகர் - தேவர்; உரகருமாம். உரகர் எனின் ஆழமிகுதியால் அவர்நாட்டு அழகினையும் காட்டி என்க. பம்புதல் - மிகுதல். படை - கஜ ரத துரக பதாதிகள். அம்பொன் - மிக்க அழகுமாம். சுற்றும் மகழ் - விரித்தல் விகாரங்கள்.

கன்னிமாடத்தில் பிராட்டியைக் காணுதல்

23. பொன்னின் சோதி போதினி லுற்றம் பொலிவே போல்
தென்னுண் டேனிற் றீஞ்சுவை செஞ்சொற் கவி யின்பக்
கன்னிம் மாடத் துப்பரின் மாடே களி பேடோ
டன்னம் மாடு முன்றுறை கண்டங் கய னின்றார்.

பொழிப்புரை:

கன்னி மாடத்தின் மேல் பெடையோடு அன்னச் சேவல்கள் விளையாடுகின்ற இடத்தின் முன் புறத்தில், பொன்னின் பேரொளியும், மலர்களின் நறுமணமும், தேனின் இனிய சுவையும், உயர்ந்த கவிதையின் இன்பமும் ஒருங்கு விளங்குவதுபோல அழிவற்ற அழகியாகிய பிராட்டியைக் கண்டு அயலில் அவர்கள் நின்றார்கள்.

பதவுரை:

கன்னி மாடத்து உம்பரின் மாடு - கன்னிகா மாடத்தின் மேலிடத்தே, களி பேடோடு அன்னம் ஆடு முன்துறை - மகிழ்ச்சியுள்ள பெடைகளோடு அன்னச் சேவல்கள் விளையாடுகின்ற முன்னிடத்தில், பொன்னின் சோதி - பொன்னின் பேரொளியும், போதின் இன் நாற்றம் - மலர்களின் இனிய மணமும், தென் உண் தேனின் தீம் சுவை - வண்டுகள் உண்ணும் புதுமலர்த் தேனின் இனிய சுவையும், செம் சொல் கவி இன்பம் - வளம் நிறைந்த சொற்களாலமைந்த கவிகளின் இன்பமும், பொலிவே போல் - ஒருருவில் விளங்குதல்போல, (கன்னி) கண்டு - காலத்தானழியாத அழகினை உடையவளும், குற்றமற்றவளும், எக்காலத்தும் கெடாத கற்புடையவளுமாகிய பிராட்டியைக் கண்டு, அயல் நின்றார் - அயலிலே விலகா மனத்தினராய் (அவர்கள்) நின்றார்கள்.

விசேட உரை:

கன்னி மாடம் - கன்னியருக்காக அமைக்கப்பட்ட மாடம். உம்பரின் மாடு - மேலிடம். தென் - வண்டு. தென் உண் தேன் - வண்டுகள் உண்ணும் புதுமலர்த் தேன். செஞ்சொற்கவி - செம்மை சான்ற சொற்களாலான கவி. கன்னி - அழியாத அழகினை உடையவள்; மாசற்றவள்; கெடாத கற்பினள் என்க. உம்பரின் மாடு, அன்னமாடு துறைக்கண், சோதியும் நாற்றமும் தீஞ்சுவையும் இன்பமும் ஒன்றித்த பொலிவேபோல் கன்னியைக் கண்டு நின்றார் என்க. இன்பப் பொலிவேபோல் கன்னியை மாடத்தும்பரில் கண்டு நின்றாரெனினும் அமையும். பிராட்டியாகிய கன்னி வாழ் மாடத்து அன்னமாடுந் துறைகண்டு நின்றாரென உரைப்பாருமுளர்; அது "முன்னைநாள் - அன்ன மாடுந்துறைக் கருகு நின்றாளையக் கன்னிமாடத்திடைக் கண்டதுங் கழறுவாய்" எனப் பின்னுல் உரைக்கப்பட்டதற்கு ஒவ்வாமை யுணர்க. இதுகாறும் காட்சிகளைக் கண்டு கண்டு தரியாது சென்றவர்கள் ஈண்டு நின்றது என்னையோவெனின், 'இற்றை யெல்லை யாரையுந் தீண்டாத மனம் அவளைத் தீண்டிற்று ஆகலானும், திருவருட் கருத்தும் அதுவாய், நிகழுங்காலமும் எய்திற்று ஆகலானும் இராமன் நின்று னென்க. முனிவனும் திருவருட்கருத்து ளுக்கிய செயலினனே என அறிக. இலக்குவனே 'அண்ணன் முனிவன் ஆகிய இருவர்தம் அடியை யன்றி அயலொன்றும் அறியாத பண்பினன்' ஆதலின் அவர் நின்றவழி தானும் நின்றன னென்க.

பிராட்டியின் சிறப்பு 24—35

24. செப்புங் காலைச் செங்கம லத்தோன் முதல் யாரும்
எப்பெண் பாலுங் கொண்டுவ மிப்போ ருவ மிக்கும்
அப்பெண் டானே யாயின போதிங் கயல் வேறோர்
ஒப்பெங் கேகொண் டெவ்வகை நாடி யுரை செய்வோம்.

பொழிப்புரை:

ஓர்ந்து சொல்லுமிடத்து, பிரமன் முதலாக யாவரும் எட்டுத்திசைகளிலும் ஒப்புப் பொருளை ஆராய்ந் தெடுத்து உவமிப்போர் உவமிக்கும் திருமகளே பிராட்டியாக வந்துள்ளபோது, வேறொரு உவமையை எவ்வாறு தேடி எடுத்துச் சொல்வோம்.

பதவுரை.

செப்பும் காலை – (உவமையை ஓர்ந்து) சொல்லுமிடத்து, செங்கமலத்தோன் முதல் யார் உம் – செந்தாமரை மலரை வாழ்விட

மாகக் கொண்ட பிரமதேவன் முதல் உள்ளவர் எவரும், எண் பால் உம் கொண்டு உவமிப்போர் - எட்டுத் திசைகளிலும் உவமையை ஆராய்ந்து கொண்டு உவமை சொல்வோர், அ பெண் தானே ஆயின போது - அந்தத் திருமகள்தானே (பிராட்டியாக) வந்துள்ளபோது, இங்கு அயல் வேறு ஓர் ஒப்பு எங்கே நாடி - இவ்விடத்து அவளை (திரு மகளை) விட வேறேர் உவமைப் பொருளை எங்கே தேடி, எ வகை கொண்டு உரை செய்வோம் - எவ்வாறு எடுத்துச் சொல்ல வல்லேம்,

விசேட உரை:

இது கவியின் கூற்று. திருமகளே பிராட்டியாக அவதரித்த மையால், பிராட்டி உவமையில்லாதவள் என்பது கருத்து.

25. உமையா ளொக்கும் மங்கைய ருச்சிக் கரம்வைக்கும்
கமையாண் மேனி கண்டவர் காட்சிக் கரைகாண
இமையா நாட்டம் பெற்றில மென்ரு ரிருகண்ணுல்
அமையா தென்ரு ரந்தர வானத் தவரெல்லாம்.

பொழிப்புரை:

சிறப்புடைய மாதர்களும் உச்சிமேல் கைகளை வைத்து வணங்குதற் குரியவளும், பார்பதியை ஒத்த பொறுமை யுடையவளுமான பிராட்டியின் மேனியை நோக்கினர், இவள் அழகின் எல்லையைக் காண இமையாத கண்களைப் பெற்றேமில்லையே எனருர்கள். தேவர்களோ இரு கண்களால் முடியாதென்றனர்.

பதவுரை:

மங்கையர் உச்சி கரம் வைக்கும் - சிறப்புடைய மாதர் உச்சி மேற் கைகளைக் குவித்து வணங்குதற்குரியவளும், உமையாள் ஒக் கும் - (பொறையின் சிகரமாகிய தவத்தாலுயர்ந்த) பார்வதி தேவியை ஒத்தவளுமான, கமையாள் மேனி - பொறுமை யாட்டியான பிராட் டியின் அழகை, கண்டவர் - பார்த்த மண்ணவர், காட்சி கரை காண - அழகின் எல்லையைக் காணுதற்கு, இமையா நாட்டம் பெற்றி லம் என்ருர் - இமையாத கண்களைப் பெற்றிலேம் என்று குறையுற் றனர். அந்தரம் வானத்தவர் எல்லாம் - மேலுலகில் வாழும் தேவர் கள் எல்லோரும், இரு கண்ணுல் அமையாது என்ருர் - இரண்டு கண்களினுலும் முடியாது என்றனர்.

விசேட உரை:

உமையாளொக்கும் மங்கையர் எனப் பொருள் கொள் வாருமுளர். உலக நாயகியாரான உமைக்கும் பிராட்டிக்கும்

உயர்வு தாழ்வு கற்பித்தல் அறிவுடைமையாகா தென்க. உமை - காப்பவள். மேனி - அழகு; அது, அக புற அழகுகளை உணர்த்துவது. எனவே இமையா நாட்டம் என்றது உள்ளழகை உணர வல்ல மூடாத அறிவுக் கண்ணையும் மூடாத வெளிக் கண்ணையும் எனக் கொள்க. இங்ஙனமே தேவர்தம் இருகண் என்றதும் அக புறக்கண்களையே யென்க. மண்ணவரும் விண்ணவரும் முறையே இமையா நாட்டமும் இரண்டுக்கும் அதிகமாய கண்களும் பெறின் பிராட்டியின் உள் வெளி அழகுகளை முழுமையாகக் கண்டுவிட லாமெனக் கருதியது அவர்தம் சிற்றறிவின் சிறுமையையே உணர்த்துவதாகும். கமை - பொறுமை. கமையாள் – பொறுமை வடிவினள். இதனால் பிராட்டியின் எல்லையற்ற அக புற அழகு கூறப்பட்டது.

26. வென்றம் மானைத் தாரயில் வேலுங் கொலைவாளும்
பின்றம் மானப் பேர்கய வுஞ்சப் பிறழ்கண்ணுள்
குன்றம் மாடக் கோவி னளிக்குங் கடலன்றி
அன்றம் மாடத் தும்ப ரளிக்கு மமுதன்னாள்.

பொழிப்புரை:

உவமிக்கப்படும் அழகிய மானை வென்று, கூரிய வேலையும் கொலை வாளையும் பின்னிடச் செய்து கயல் மீன்கள் அஞ்சும்படியாகவும் பிறழும் கண்களையுடைய பிராட்டி, மந்தர மலை சுழலத் திருமாலின் கருத்துப்படி (அமுதினை) தந்த பாற்கடலில் அன்றி, அப்பொழுது அந்தக் கன்னி மாடத்து மேலிடந்தந்த அமுதை ஒத்தாள்.

பதவுரை:

அம் மானை வென்று (உவமிக்கப்படும்) அழகிய மானை (மருண்ட பார்வையினாலே) வெற்றி கொண்டு, தார் அயில் வேல் உம் கொலை வாள் உம் பின்ற - வெற்றிமாலை சூடிய கூரிய வேலையும் கொலை பயின்ற வாளையும் பின்னிடச் செய்து, மானம் பேர் கயல் அஞ்ச - சிறப்புடைய பெரிய கயல் மீன்களும் ஒப்பின்மையால் அஞ்சும்படி யாகவும், பிறழ் கண்ணுள் - பிறழும் கண்களையுடைய பிராட்டி, குன்றம் ஆட - மந்தர மலை சுழல, கோவின் அளிக்கும் கடல் அன்றி - திருமாலின் பொருட்டு (அமுதினை) தந்த பாற்கடலில் அல்லாமல், அன்று அ மாடத்து உம்பர் அளிக்கும் அமுது அன்னாள் - அப்பொழுது அந்தக் கன்னிமாடத்து மேலிடம் தரும் அமுதம் போல்வாள்.

விசேட உரை:

மானின் மருட்சி, வேலின் கூர்மை, வாளின் ஒளி, மீனின் பிறழ்ச்சி என்பவற்றிற்கு ஒப்பாகாத சிறப்பினையுடைய கண்கள்

என்க; தாரயில், கொலை என்னும் அடைகள் வேல் வாளிரண்டிற்கும் கொள்ளினு மமையும். கோ - செல்லுகையையுடைய திருமால். அது, துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனத்தின் பொருட்டு அவதரித்தல். கோ - தேவருலகுமாம்.

27. பெருந்தே னின்சொற் பெண்ணிவ ளொப்பா ளொருபெண் ணைத்
தருந்தா னென்ரு னின்முக னின்னுந் தரலாமே
அருந்தா வந்தத் தேவ ரிரந்தா லமுதென்னும்
மருந்தே யல்லா தென்னினி நல்கும் மணியாழி.

பொழிப்புரை:

பெருமை பெற்ற தேன்போலும் இனிய சொல்லினளாகிய பிராட்டியனைய பெண்ணொருத்தியைப் படைத்துத் தருக எனத் தேவர்கள் வேண்டினும் பிரமன் மீண்டும் படைத்தல் கூடுமோ? அவர்கள் வேண்டுமிடத்து அமுதினையன்றி மணிக்கடல் வேறெதனைத்தான் தரவல்லது?

பதவுரை:

பெரும் தேன் இன் சொல் பெண் இவள் ஒப்பாள் ஒரு பெண்ணை - பெருமை பெற்ற தேன்போலும் இனிய சொல்லினையுடைய இப் பிராட்டியை ஒப்பாளாய ஒரு நங்கையை, தரும் என்று அருந்தா அந்தத் தேவர் இரந்தால் - பெற்றுத் தருக என அமுதினை யன்றி அருந்தாத அந்தச் சிறப்பினையுடைய தேவர்கள் இரந்து வேண்டினும், நான்முகன் இன்னும் தரல் ஆம் ஏ? - நான்கு முகத்தினையுடைய பிரமன் மீண்டும் தருதல் கூடுமோ?, மணி ஆழி அமுது என்னும் மருந்து ஏ அன்றி இனி என் நல்கும் - (அவரிரந்தால்) அழகிய பாற்கடல் அமுதமாகிய மருந்தை அல்லது இனி வேறெதனைத் தரவல்லது?

விசேட உரை:

பெண் - விரும்பப்படுபவள். பெண் இவள் - உய்நிநோக்கி அறநெறி நின்றோரால் விரும்பப்படும் பிராட்டி; அவள் முன் பாற்கடலில் தானே தோன்றியவள். ஈண்டும் உழுபடைச்சாலில் தோன்றியவளே. ஆதலின் அவள் என்றும் பிரமனால் படைக்கப் பட்டனள் அல்லள். எனவே எவர் வேண்டினும் பிரமனால் தரு தற் கியலாதாள் அவள் என்பதை உணர்க. 'தரும்' என் பதை வினைமுற்றாகக் கொண்டு இன்னும் படைக்கலாமே என உரைத்து, இவளொப்பாள் யாண்டும் எக்காலத்தும் இல்லையாத லால் நான்முகன் தருதலிலன் எனலுமாம். தரலாமே, ஏகாரம்

எதிர்மறை: தேவரிரந்தா லென்பதைப் பின்வாக்கியத்தோடு மியைக்க. பாற்கடலிற் பெற்ற அமுதம் முற்றுமா யெய்தாத வழி, மீண்டும் அதைக்கடைய எஞ்சியதைத் தருதல் கூடும் என் பது குறிப்புப் போலும். தரும் - தாருமென்பதன் விகாரம். தான் - அசை; மணியாழி - இரத்தினகரமான கடல் என்றுமாம்.

28. அனையாண் மேனி கண்டபி னண்டத் தரசாளும்
வினையோர் மேவும் மேனகை யாதிம் மிளிர்வேற்கண்
இனையோ குள்ளத் தின்னலி னேர்தம் முகமென்னும்
பனிதோய் வானின் வெண்மதிக் கென்றும் பகலன்றே.

பொழிப்புரை:

விண்ணை யாளும் நல்வினையாளரான இந்திராதி தேவர்கள் விரும் பும் மேனகை முதலிய மிளிரும் வேலனைய கண்களையுடைய தேவமாதர்கள், அத்தகைய பிராட்டியின் அழகைக் கண்டபின் துன்பமுடையராயினர். அவர் தம் முகமாகிய குளிர்ச்சி நிறைந்த வானில் விளங்கும் இளமை நீங்காத ஒவ்வொரு சந்திரனுக்கும் எக்காலமும் பகலே யாயிற்று.

பதவுரை:

அண்டத்து அரசு ஆளும் வினையோர் - விண்ணினை அரசாளு கின்ற நல்வினையாளரான இந்திராதி தேவர்கள், மேவும் மேனகை ஆதி மிளிர் வேல்கண் இனையோர் - விரும்பும் மேனகை முதலிய ஒளி விடும் வேல் போன்ற கண்களையுடைய இத்தேவமாதர், அனையாள் மேனி கண்டபின் - அத்தகையினளான பிராட்டியின் அழகைக் கண்ட பிறகு, உள்ளத்து இன்னலினேர் - மனத்தின்கண் துன்பமுடையராயி னர். தம்முகம் என்னும் - அவர்தம் முகமாகிய, பனி தோய் வானின் - குளிர்ச்சி நிறைந்த ஆகாயத்தில் விளங்குகிற, வெண்மதிக்கு - இளமை நீங்காத ஒவ்வொரு சந்திரனுக்கும், என்று உம் பகல் - எக்காலமும் பகற் பொழுதே யாயிற்று.

விசேட உரை:

ஈடாகாமை நோக்கி இன்னலுற்ற தேவமாதர் முகங்கள் ஒளியிழந்து பகற் சந்திரனையிருக்கும் என்பதாம், தகை, மேலே உரைக்கப்பட்டது. வினையோர் - நல்வினையாளர். மேனி கண்ட பின் என்பதற்கு அக புற அழகினைத் தம் சிற்றறிவினுக் கமையக் காணவல்ல அளவிற் கண்டபின் என உரைக்க. வெண்மை - இளமை.

29. மலர்மே னின்றிம் மங்கையிவ் வையத் திடைவைகப்
பலகா லுந்தம் மெய்ந்நனி வாடும் படிநோற்றார்
அலகோ வில்லா வந்தண ரோநல் லறமேயோ
உலகோ வானே யும்பர்கொ லோவீ துணரேமால்.

பொழிப்புரை:

இத்தகைய பிராட்டி தாமரை மலராகிய இடத்தினின்று இறங்கிப் பூவுலகிடையே வாழ்வதற்காகத் தம் சரீரம் மிக வாட்டமுறத் தவம் புரிந்தவர்கள் அளவிறந்த முனிவர்களோ, சீரிய தருமதேவதையோ, மண்ணுலகோ, விண்ணுலகோ, தேவர்களோ இதன் உண்மையை அறிகின்றேமில்லை.

பதவுரை:

இ மங்கை - இத்தகைய பிராட்டி, மலர் மேல் நின்று - செந்தாமரை மலராகிய இடத்தினின்று இறங்கி, இ வையத்திடை வைக - இப்பூவுலகிலே தங்கி இருக்கும் பொருட்டு, பல கால் உம் - பலகாலமாக, தம் மெய் நனி வாடும்படி நோற்றார் - தமது சரீரமானது மிகவும் வாட்டமுறுமாறு பெருந்தவம் புரிந்தவர்கள், அலகு இல்லா அந்தணர் ஓ - எண்ணில்லாத முனிவர்களோ?, நல் அறம் ஏ ஓ - நல்ல தருமதேவதை தானே?, உலகு ஓ - நிலவுலகோர் அனைவருமோ?, வான் ஓ - தேவருலகினர் யாவருமோ?, உம்பர் கொல் ஓ - இந்திரன் முதலிய மேலான தேவர்கள்தாமோ?, ஈது உணரேம் - இதன் உண்மையை உணருந் திற னில்லே மாயினேம்;

விசேட உரை:

நனி - மிக; அலகு - எண், அந்தணர் - பிராமணருமாம்; அறம் - அறக்கடவுள், (தருமதேவதை) உலகு, வான் - இடவாகு பெயர்கள், உலகோ என நிலவுலகத்தோரைப் பொதுவாகக் கூறினரேனும் அந்தணரை வேறு பிரித்தவாறே, வானே எனக் கூறி வானின்கண் ணுயர்வுடையாரைக் கருதிப் போலும் உம்பர் கொலோ என்றார் என்க; உம்பர் - மேலானவர்;

30. தந்தே னில்லா மங்கையர் செங்கைத் தளிர்மானே
அன்னே தேனே யாரமு தேயென் றடிபோற்றி
முன்னே முன்னே மொய்ம்மலர் தூவி முறைசாரப்
பொன்னே சூழும் பூவி னெதுங்கிப் பொலிகின்றாள்.

பொழிப்புரை:

தமக்கு உவமையில்லாத தோழியர் பலர், சிவந்த தளிர்க்கையையுடைய மான் போன்றவளே, தாய் போன்றவளே, தேன் போன்றவளே,

அரிய அமுதம் போன்றவளே எனப் புகழ்ந்து பாதங்களைத் துதித்தவராய் முன்னிடங்களிலெல்லாம் மலர் சொரிந்து வரிசையாகச் செல்ல, பொன் போலும் மகரந்தம் நிரம்பிய பூக்களின்மேல் நடந்து விளங்குகின்றாள்.

பதவுரை:

தம் நேர் இல்லா மங்கையர் - தமக்கு உவமையில்லாத தோழியர் பலர், செம் தளிர் கை மானே - சிவந்த தளிர்போன்ற கைகளையுடைய மானின் பார்வையை உடையவளே, அன்னே - தாய் போன்றவளே, தேனே - தேன் போன்றவளே, ஆர் அமுதே - அரிய அமுதம் போன்றவளே, என்று - எனப்புகழ்ந்து, அடிபோற்றி - பாதங்களைத் துதித்தவராய், முன் ஏ முன் ஏ மொய் மலர் தூவி - முன்னிடங்களிலெல்லாம் பெருமையுடைய மலர்களைச் சொரிந்து, முறை சார - வரிசையாகச் செல்ல, பொன் ஏ சூழும் பூவின் - பொன்போலும் மகரந்தம் நிரம்பிய மலர்களின் மேல் நடந்து, பொலிகின்றாள் - விளங்குகின்றாள்.

விசேட உரை:

அரசரும் அரசமாதேவியரும் அடியேத்தப் பெறுதல் மரபு; பொன்னே சூழும் பூவின் - அழகு நிரம்பிய மலரில் எனினுமாம். பூவே சூழும் பொன்னின் ஒதுங்கி என இயைத்தும் பொருள் கொள்ளினுமமையும். தோழியரைத் தந்நேரில்லா மங்கையர் என்றதனால், பிராட்டியின் உயர்வு தானே விளங்குவதாயிற்று.

31. பொன்சேர் மென்காற் கிண்கிணி யாரம் புனையாரங்
கொன்சே ரல்குன் மேகலை தாங்கும் கொடியன்னார்
தன்சேர் கோலத் தின்னெழில் காணச் சதகோடி
மின்சே விக்க மின்னர சென்னும் படிநின்றாள்.

பொழிப்புரை:

பொன்னினாலான பாதங்களிலணியும் சதங்கைகளையும், இரத்தின மாலைகளையும், மலர்மாலைகளையும், பெருமைவாய்ந்த இடையிலணியும் மேகலையையும், தாங்கும் கொடிகள் போன்ற தோழியர் தன்னிடம் பொருந்திய அலங்காரத்தின் இனிய அழகை விரும்பி எவரும் காணும் படி நூறுகோடி மின்னல்கள் குற்றேவல் செய்ய மின்னரசு எனுமாறு பிராட்டி நின்றாள்.

பதவுரை:

பொன் சேர் - அழகு கிடந்த, மென் கால் கிண்கிணி - மென்மையாகிய பாதங்களில் அணியும் சதங்கைகளையும், ஆரம் - மணிவடம்

களையும், புனை ஆரம் - ஒழுங்காயமைந்த மலர்மாலைகளையும், கொன் சேர் அல்குல் மேகலை - பெருமை பொருந்திய இடையிலணியும் மேக லையையும், தாங்கும் கொடி அன்னார் - சுமக்கும் கொடிகள் போன்ற தோழியர் பலர், தன் சேர் கோலத்து இன் எழில் காண - தன்னிடம் பொருந்திய அலங்காரத்தின் இனிய அழகை விரும்பி எவரும் காணும் படி, சத கோடி மின் சேவிக்க - நூறுகோடி மின்னல்கள் குற்றேவல் செய்ய, மின் அரசு என்னும்படி நின்றாள் - மின்னலின் அரசு என்று சொல்லும்படி நின்றாள்;

விசேட உரை:

சேர்தல் - கிடத்தல். கிங்கிணி – சதங்கை. ஆரம் – மாத ரணி வடம், புனை ஆரம் - ஒழுங்காயமைந்த மலர்மாலை; புனை தல் - ஒழுங்காயமைத்தல். கொன் - பெருமை. மேகலை - எழுகோ வையாயமைந்த மாதரிடை யணிகளுள் ஒன்று ''காஞ்சி மேகலை கலாபம் பருமம் விரிசிகை மாத ரிடையணி யெனப்படும்'' என் பது பிங்கல நிகண்டு. சதகோடி - நூறுகோடி. ஈற்றடி இல் பொருளுருவக அணி. மேலே ஓதுங்கி (நடந்து) பொலிந்தவள் ஈண்டு நின்றாள் என்க.

32. கொல்லும் வேலும் கூற்றமு மென்னும் மிவையெல்லாம்
வெல்லும் வெல்லும் மென்ன மதர்க்கும் விழிகொண்டாள்
சொல்லுந் தன்மைத் தன்றது குன்றுஞ் சுவருந்திண்
கல்லும் புல்லுங் கண்டுரு கப்பெண் கனிநின்றாள்.

பொழிப்புரை:

வேலையும் கூற்றையும் இவை போல்வன அனைத்தையும் வெல்லும் என மதர்த்த கண்களையுடைய பிராட்டியின் நிலை எத்திறம் படைத்தார்க் கும் சொல்லுந் தன்மையுடையதன்று. குன்றும், சுவரும், கல்லும், புல்லும் கண்டு மனம் நெகிழும்படி பெண்கனியான அவள் நின்றாள்.

பதவுரை:

கொல்லும் - கொல்லவல்ல, வேல் உம் - வேலையும், கூற்றம் உம் - யமனும், என்னும் இவை எல்லாம் – என்று சொல்லப்படும் (இவை போல்வன) அனைத்தும், வெல்லும் வெல்லும் என்ன - வென்றே விடும் என்று சொல்லுமாறு, மதர்க்கும் விழி கொண்டாள் – களிப் புடைய கண்களைக் கொண்டவள். (பிராட்டி) அது - அந்த அற்புத நிலை, சொல்லும் தன்மைத்து அன்று - எத்திறம் படைத்தார்க்கும் சொல்லும் இயல்பை உடையதன்று. குன்று உம், சுவர் உம், திண் கல் உம் புல் உம் கண்டு உருக - பெரிய மலையும் சிறிய சுவரும் வலிய

கல்லும் மிக மெல்லிய புல்லும் கண்டு மனம் நெகிழும்படி, பெண் கனி - பெண்மை கனிந்த கனியானவள் நின்றுள்.

விசேட உரை:

இவை எல்லாம் - இவை போல்வனவாய அனைத்தும். சொல் லுந் தன்மைத் தன்று - நம்போலியரால் சொல்லுந்தன்மை உடையதன்று என்றுமாம். குன்றுஞ் சுவரும் பெருமைக்கும் கல் லும் புல்லும் வன்மை மென்மைகளுக்கும் எடுத்துக்காட்டப்பட் டன. உருகுதல் - இரங்குதல். அசேதனங்களே உருக நின்று ளென்றது, அகத்தே ஒளிர்ந்த, சராசரங்களை ஊடுருவி நிற்கும் மகாசக்தியாகிய அவள் முழுமையையும் உணர்த்த என்க. முத லடி இரண்டும் புறக்கண் கொண்டு காணுவார்க்கும் ஈற்றடி யிரண்டும் அகக்கண் கொண்டு காணுவார்க்கும் அமைந்த காட்சி என்க. பெண்கனி - பெண்மை கனிந்த கனி. மேலே நடந்து பொலிந்தவள் நின்று நின்றுள் என்றார்.

வேறு

33. வெங்களி விழிக்கொரு விழவு மாயவர்
கண்களிற் காணவே களிப்பு நல்கலால்
மங்கையர்க் கினியதோர் மருந்து மாயவள்
எங்கணு யகற்கினி யாவ தாங்கொலோ.

பொழிப்புரை:

ஆடவர்களது பெருவிருப்போடு கூடிய களிக்கும் கண்களுக்குத் திரு விழாவே போல் பொலியும் மகளிர், தம் கண்களாற் பார்த்ததுமே பெரு மகிழ்ச்சியைத் தருதலால் அம்மகளிர்க்கு இனிமை தரும் ஒப்பற்ற அமுத மும் போன்ற பிராட்டி எங்கள் நாயகனை இராமபிரானுக்கு எத்தகைய பொருள் ஆவாளோ?

பதவுரை:

வெம் களி விழிக்கு - (ஆடவரது) பெருவிருப்போடு கூடிய களிக் கும் விழிகளுக்கு, ஒரு விழவு உம் ஆயவர் - ஒப்பற்ற திருவிழாவே போற் பொலிகின்ற மகளிர், கண்களின் காண ஏ - கண்களாற் கண்ட அளவிலே, களிப்பு நல்கலால் - பெருமகிழ்ச்சியைத் தருதலால், மங் கையர்க்கு இனியது ஓர் மருந்து உம் ஆயவள் - அம்மகளிருக்கு இனிமை தரும் ஒப்பற்ற அமுதமும் போன்ற பிராட்டி, இனி எங்கள் நாய கற்கு யாவது ஆம் கொல் ஓ - எங்களது தலைவனுகிய இராமபிரா னுக்கு எத்தகைய பொருள் ஆவளோ?

விசேட உரை:

'மங்கையர்க்கு இனியதோர் மருந்துமாயவள்' என்றது 'மங்கையரும் ஆண்மையை அவாவும் தேசினள்' என்பதை உணர்த்தியவாறு, இனி, மங்கையரை நெறியினுய்க்க வல்ல அழகினளு மென்பார் ''ஓர் மருந்து மாயவள்'' என்ருர். பெண்மைக்கே அவள் காட்சி இங்ஙனமாயின் இராமபிரானுக்கு அஃதெவ்வாருமோ என்ருர். வெம்மை – ஆசை (விருப்பு)

34. இழைகளுங் குழைகளு மின்ன முன்னமே
மழைபொரு கண்ணிணை மடந்தை மாரொடும்
பழகிய வெனினுமிப் பாவை தோன்றலால்
அழகெனு மவையுமோ ரழகு பெற்றவே.

பொழிப்புரை:

கழுத்து முதலியவற்றிற் பூணும் பேரணிகளும் காதணியாகிய குழைகளும் மிகப் பழங்காலந் தொட்டே மழை யொத்த கண்ணிணை யுடைய மகளிரொடு பழகி அழகினைத்தரப் போந்தனவெனினும் பிராட்டி அவதரித்தலால் அழகு தருவன என்ற அவ்வணிகள் யாவுமே புதியதோ ரழகினைப் பெற்றனவாயின.

பதவுரை:

இழைகள் உம் – கழுத்து முதலியவற்றி லணியும் பேரணிகளும், குழைகள் உம் – காதணிகளும், இன்ன – ஆகிய இவை போல்வனவும், முன்னம் ஏ – மிகப் பழங்காலத் தொட்டே, மழை பொரு கண் இணை மடந்தை மாரொடு உம் பழகிய எனின் உம் – மழையை ஒத்த கண்கள் இரண்டினை யுடைய மகளிருடனே பழகி அழகினைத்தரப் போந்தன வெனினும், இ பாவை தோன்றலால் – இப் பிராட்டி அவதரித்தமையால், அழகு எனும் அணி உம் ஓர் அழகு பெற்ற – அழகைத் தருவன என்று சொல்லப்படும் அவ் வாபரணங்களும் அழகினைப் பெற்றன வாயின.

விசேட உரை:

அணி – அணி செய்வன. பிற மகளிர்க்கெல்லாம் அழகினைத் தரும் அணிகள் பிராட்டியால் அணியப் பெற்றதும் அவைதாமே அழகைப் பெற்றன என்பது கருத்து. எனவே பிராட்டி அணியினுக் கணிசெய்யும் பேரழகி என்க. மழை பொருகண் – மழை யென உலகினை வாழ்விக்கும் கண். மழைபோலுங் குளிர்ச்சியுடைய கண் என்றுமாம். பாவை – உவமவாகு பெயர்.

35. எண்ணரு நலத்தினு ளினைய னின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை கவ்வி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெரு துணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினு ளவளு நோக்கினாள்.

பொழிப்புரை:

பேரழகினளாய பிராட்டி, இத்தன்மையளாய் நின்றபொழுது ஒருவர் கண்களோடு மற்றொருவர் கண்கள் கவர்ந்து பற்றி ஒன்றை யொன்று அனுபவிக்குமாறு உணர்வுகளும் நிலைத்திராது ஒன்றிக் கலக்க இராமபிரான் பிராட்டியைப் பார்த்தான். பிராட்டியும் இராமபிரானைப் பார்த்தாள்.

பதவுரை:

எண் அரு நலத்தினுள் - நினைத்தற்கரிய பேரழகினளான *பிராட்டி, இனையள் நின்றுழி* - இத்தன்மையளாய் நின்றபோது, *கண் ணொடு கண் இணை கவ்வி* - ஒருவர் கண்களோடு மற்றொருவர் கண்கள் கவர்ந்து பற்றி, *ஒன்றை ஒன்று உண்ண உம்* - ஒன்றை யொன்று சுவைத்து அனுபவிக்குமாறு, *உணர்வு உம்* - இருவர் அறிவும், *நிலை பெறுது* - (தத்தம் வசம்) நெறியாகிய நிலையில் நிற்றலைப் பெறாமல், *ஒன்றிட* - ஒருமை கூடிடவும், *அண்ணல் உம் நோக்கினன்* - பெருமை யிற் சிறந்தவனாகிய இராமபிரானும் பார்த்தான், *அவளும்* - அத் தகையினளாய பிராட்டியும், *நோக்கினள்* - பார்த்தனள்;

விசேட உரை:

முன்னர் இராமபிரானது நோக்கைக் கூறியவர் மீண்டு இருவர் தம் நோக்கையும் கூறினர். இருவர்தம் நோக்கும் காதலாலெய்திய நோக்காம். உள்ளங் கவர்ந்து தெழுந்து தோன்றி உணர்வையும் பற்றிப் பிடித்த நோக்காதலால் ''நிலைபெறு துணர்வு மொன்றிட'' என்றார். முதலில் அண்ணலும் பின் அவளும் நோக்குதலே மரபு. உம்மைகள் உயர்வு சிறப்பு. அண்ணல் - பெருமையிற் சிறந்தோனாகிய இராமபிரான். அவள் - அண்ணலின் தகையே பெற்ற பிராட்டி.

36. நோக்கிய நோக்கெனு நுதிகொள் வேலினை
ஆக்கிய மதுகையான் ரௌரி னுழ்ந்தன
வீக்கிய கணைகழல் வீரன் செங்கணும்
தாக்கணங் கினையவ டனத்திற் றைத்தவே.

பொழிப்புரை:

நோக்கிய (பிராட்டியின்) பார்வையாகிய வேலினைகள் இராமபிரானது தோள்களிலே பதிந்து ஆழ்ந்தன. வீரனான இராமபிரானது செங்கண்கள் மோகினியை ஒத்த பிராட்டியின் தனங்களிலே தைத்து முழ்கின.

பதவுரை:

நோக்கிய நோக்கு எனும் - பார்த்த (பிராட்டியின்) பார்வையாகிய, நுதிகொள் வேலினை - கூர்மையைக் கொண்ட இருவேல்கள், ஆக்கிய மது கையான் - ஆக்கம் பெற்ற வலிமையுடைய இராமபிரானது, தோளின் ஆழ்ந்தன - தோள்களிலே பதிந்து ஆழ்ந்தன. வீக்கிய கனைகழல் வீரன் செம் கண் உம் - கட்டப்பட்ட ஒலி செய்கின்ற கழல்களையுடைய வீரனான இராமபிரானது செம்மை நீங்காத கண்களும், தாக்கு அணங்கு அனையவள் தனத்தில் தைக்க - மதனத்தை ஊட்டும் தெய்வத்தை ஒத்தவளாகிய பிராட்டியின் தனங்களிலே பொருந்தி ஆழ்ந்தன.

விசேட உரை:

நோக்கிய நோக்கு - நிலைபெறு துணர்வு மொன்றிட அவள் நோக்கிய நோக்கு. தடைகளைப் பொருள் செய்யாது விரைந்து தோளி னுழ்ந்தன என்பதை உணர்த்த நோக்கினை நுதி கொள் வேலினை என்றார். செங்கண் - எஞ்ஞான்றும் செம்மை நீங்காத கண்கள்; செந்தாமரை போன்ற சிவந்த கண்கள் என்றுமாம். தாக்கணங்கு மதனத்தை ஊட்டும் தெய்வப்பெண். மதனம் - காமநோய். மதுகை - வலிமை. இதனால் இருவரும் ஒத்த காமத் தராயினர் என்பது உணர்த்தப்பட்டது.

57. பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்
தொருவரை யொருவர்த முள்ள மீர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்க ணங்கையும்
இருவரு மாறிப்புக் கிதய மெய்தினர்.

பொழிப்புரை:

விழுங்கி நிறை பார்வை யென்னும் பாசத்தாற் கட்டப் பெற்று ஒருவரை மற்றவர் மனம் இழுத்தலால் இராமபிரானும் பிராட்டியும் ஒருவர் மனத்துள் மற்றவர் என மாறிப் புகுந்து அடைந்தார்கள்.

பதவுரை:

பருகிய நோக்கு எனும் பாசத்தால் பிணித்து - விழுங்கிய பார்வை என்ற கயிற்றினாற் கட்டி, ஒருவரை ஒருவர் தம் உள்ளம்

ஈர்த்தலால் - ஒருவரை மற்றொருவர் மனம் இழுத்தலினால், வரிசிலை அண்ணல் உம் வாள் கண் நங்கை உம் இருவர் உம் - கட்டமைந்த சிலையினையுடையனான பெருமையிற் சிறந்தோனாகிய இராமபிரானும், வாள் போலும் கண்களையுடைய பெண்களிற் சிறந்தவளாகிய பிராட்டியும் என்னும் இருவரும், இதயம் மாறி புக்கு எய்தினர் - ஒருவர் மனத்தகத்தே மற்றவர் என மாறிப் புகுந்து அடைந்தனர்.

விசேட உரை:

பருகிய நோக்கு - முன்னர் உரைக்கப்பட்ட நோக்கு. அது வேட்கைப் பெருக்கினை ஊக்கிக் காமநோய் தருவது. இருவர் மனமும் மாறிப் புக்கன. எனவே இருவர்தம் நிலையும் ஒன்றுபினமை உணர்க. பாசம் - கட்டு; ஈண்டு கருவியை உணர்த்திற்று. ஈர்த்தல், நெறியிலீங்கா அண்ணலும் நங்கையும் ஆதலின் திருவருட்கருத்தால் நிகழ்ந்தது என்க.

38. மருங்கிலா நங்கையும் வசையி லையனும்
ஒருங்கிய விரண்டுடற் குயிரொன் றுயினர்
கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினும் பேசல் வேண்டுமோ?

பொழிப்புரை:

அயல் ஒப்பு இல்லாத நங்கையாகிய பிராட்டியும் குற்றமற்ற ஐயனாகிய இராமபிரானும் ஒற்றுமைப்பட்ட இரு உடம்புகளுக்கு உயிர் ஒன்றே என ஆயினர். பாற்கடலிலே ஆதிசேடனாகிய படுக்கையில் முன்னர் கூடியிருந்த கூட்டம் நீங்கினவர் மீண்டும் கூடினால் அவர்கள் நிலையைப் பேசுதல் வேண்டுமோ?

பதவுரை:

மருங்கு இலா நங்கை - (சில ஒக்கும் எனநோக்கி) அயல் வைத்துச் சொல்ல ஒருவர் இல்லாத உயர்வினாலும் பெண்களுட் சிறந்தவளாகிய பிராட்டியும், வசை இல் ஐயனும் - குற்றமற்றவனும் வணங்கப் படத்தக்கவனுமான இராமபிரானும், ஒருங்கிய உடற்கு உயிர் ஒன்று ஆயினர் - ஒரு தன்மைத்தான இரு உடம்புகளுக்கு உயிர் ஒன்றே என்னும்படி ஆனார்கள். கரும் கடல் பள்ளியில் - பெரிய பாற் கடலில் ஆதிசேடனை படுக்கையில், கலவி நீங்கி பிரிந்து போயவர் - கூட்டம் நீங்கி விட்டுப் பிரிந்தவர்கள். கூடினும் - மீண்டும் கூடுதல் நிகழுமானால், பேசல் வேண்டுமோ - அவர் நிலையைப் பேசுதலும் வேண்டுமோ? இல்லை என்றபடி.

விசேட உரை:

இராமபிரான் ''வசையில் ஐயன்'' என்றமையால் ''மருங்கிலா நங்கை'' என்பதற்கு இங்ஙனம் உரைக்கப்பட்டது. நுண்ணிய இடையுடைமை கருதி மருங்கில்லாத நங்கை என உரைத்தலுமாம். மனத்தால் சிறிதும் வேறுறுது முற்றுக ஒன்றினர் என்பதை வலியுறுத்தவே ''இரண்டுடற் குயி ரொன்றுயினூர்'' என்றார். கருங்கடல் - பெருமையுடைய திருப்பாற்கடல். (கருமை - பெருமை) திருமாலின் கரிய மேனியாற் கருமை யெய்திய கடலுமாம். போய் பிரிந்தவர் - பிரிந்து போயவர் என விகுதி பிரித்துக் கூட்டப்பட்டது.

நின்றவர் மறையப் போதல்

39 அந்தமி னோக்கிமை யாமை லாமையாற்
பைந்தொடி யோவியப் பாவை போன்றனள்
சிந்தையும் நிறையுமெய்ந் நலனும் பின்செல
மைந்தனு முனியொடு மறையப் போயினன்

பொழிப்புரை:

முடிவில்லையென நோக்கி நிலைத்த கண்கள் இமைக்காமையினாலே பசிய பொன்னாலாகிய தொடியை அணிந்த பிராட்டி சித்திரப் பாவையென அசைவற்று நின்றனள். (அவளது) மனமும் உறுதியும் அழிவற்ற அழகும் (தன்) பின்னே தொடர இராமபிரானும் விசுவாமித்திர முனிவனோடு கண்படு மெல்லை கழியச் சென்றனன்.

பதவுரை:

அந்தம் இல் நோக்கு - முடிவு இல்லையென (இராமபிரானை நோக்கி நிலைத்த) கண்கள், இமை அணங்கிலாமையால் - இமைத்தலிலாப் பொருந்தாமையால், பைந் தொடி - பசிய பொன்னாலாகிய தொடியையுடைய பிராட்டி, ஓவியம் பாவை போன்றனள் - சித்திரப் பதுமை யென அசைவற்று நின்றாள். சிந்தை உம் நிறை உம் மெய் நலன் உம் - அவளது மனமும் உறுதிப்பாடும் மெய்யின் அழிவற்ற அழகும், பின் செல - தன்பின்னே தொடர, மைந்தனும் முனியொடு - இராமபிரானும் விசுவாமித்திர முனிவனோடு, மறைய சென்றனன் - கண்படு மெல்லை கழியச் சென்றான்.

விசேட உரை:

அந்தமில் நோக்கு - நிறுத்துதலின்றித் தொடர்ந்து நோக்கிய நோக்கு; எண்ணமும் செயலும் நோக்குதல் ஒன்றையே

பற்றிநிற்க இமைத்தல் இயல்பாகவே நிகழாமை அறிக. செய லிறந்த அவள் நிலையை உணர்த்த 'ஓவியப் பாவை போன்ற னள்' என்றும், உணர்ச்சிகளை எடுத்துக்காட்டும் முகம் முதலிய வற்றின் மாறிய தோற்றங்களை உணர்த்த ''மெய் நலனும் பின் செல'' என்றும் கூறினர். சிந்தையும் என்றதனால் ஒன்றையே நினைத்தலும், நிறையும் என்றதனால் நாணுறுதலும், மெய் நல னும் என்றதனால் உடலிளைப்பு மென ஐங்குண யவத்தைகளிற் சில கூறப்பட்டன. உள்ளப் புணர்ச்சி நிகழ்ந்தவெல்லை முவரும் புறப்பட்டுப் போயினர் என்க.

விரகமுற்ற சானகியின் நிலை 40—45

40. பிறையெனு நுதலவள் பெண்மை யென்படும்
நறைகம முலங்கலா னயன கோசரம்
மறைதலு மனமெனு மத்த யானையின்
நிறையெனு மங்குச நிமிர்ந்து போயதே

பொழிப்புரை:

இராமபிரான் கண்களுக்குப் புலப்படுதல் மறைந்த அளவில் (சான கியினது) மனமெனும் மதயானையின் உறுதிப்பாடென்ற தோட்டி நிமிர்வு தாயிற்று, எனவே பிறை நுதலினளான அவள் பெண்மை என்ன நிலையை எய்தக் கூடும்.

பதவுரை:

நறை கமழ் அலங்கலான் - வாசனை வீசும் மலர் மாலையை யுடைய இராமபிரான், நயன கோசரம் மறைதலும் - கண்களுக்குப் புலனுதல் மறைந்த அளவில், (சானகியினது) மனம் எனும் மத்தம் யானையின் - மனம் என்கின்ற மத யானையின், நிறை எனும் அங்கு சம் - உறுதிப்பாடென்கின்ற தோட்டி, நிமிர்ந்து போயது - நிமிர்ந்து போயிற்று. (எனவே) பிறை எனும் நுதலவள் பெண்மை என்படும்- பாலசந்திரன் எனத்தக்க நெற்றியை யுடைய அவளது (நாண் முத லிய) பெண்மைப் பண்புகள் என்ன நிலையை எய்தக் கூடும்?

விசேட உரை:

சிந்தையும் நிறையும் மெய்நலனும் சிதைந்தவழி நிறை யென்னும் தோட்டியால் மனமென்னும் மத்தயானையை அடக்கப் பெண்மை நெறி நின்ற பிராட்டி பெரிதும் முயன்றும் தோட்டி நெகிழ்ந்து நிமிர்ந்ததே யன்றி யானை அடங்கிற்றில்லை என்ப காம்.

41. மாலுற வருதலு மனமு மெய்யுந்தன்
நூலுறு மருங்குல்போ னுடங்கு வாணெடுங்
காலுறு கண்வழிப் புகுந்த காதனோய்
பாலுறு பிரையெனப் பரந்த தெங்குமே.

பொழிப்புரை:

காமமயக்கம் மிகுந்து நோன்றுதலும் மனமும் மெய்யும் நுண்ணிய இடைபோலத் தளர்வாளாகிய சானகியின் கருமை நிறம கொண்ட கண்களின் வழியாகப் புகுந்த காதல் நோயானது, பாலிற் சேர்ந்த பிரை போல உடம்பு முழுவதும் பரந்தது.

பதவுரை:

மால் உற வருதலும் - காமமயக்கம் மிகுந்து தோன்றுதலும், மனம் உம் மெய் உம் - உள்ளமும் உடம்பும், தன் நூல் உறு மருங்குல் போல் - தனது நூலொத்த நுண்ணிய இடைபோல, நுடங்கு வாள் - துவண்டு தளர்பவளாகிய சானகியினது, கால் உறு நெடு கண் வழி புகுந்த காதல் நோய் - கருமை நிறங் கொண்ட நீண்ட கண்களின் வழியாகப் புகுந்த விரக வேதனையானது, பால் உறு பிரை என எங்கு உம் பரந்தது. பாலிற் சேர்ந்த பிரையினைப் போல உடம்பு முழுவதும் நீக்கமறப் பரந்தது.

விசேட உரை:

மனம் நுடங்க மெய் தானே நுடங்குமென்க. மனத்தின் தளர்வும் உடம்பின் மெலிவும் நுடங்கல் எனப்பட்டது. கண் வழிச் சென்ற விரகம் பாலிற் சேர்ந்த பிரையென நீக்கமற உடம்பைப் பற்றிப் பரந்தது என்க. காதல் நோய் - விரகம், கால் - கருமை. காலுறுகண் - கருமை பொருந்திய கண். பிரை - உறைமோர்.

42. நோமுறு நோய்நிலை நுவல கிற்றிலள்
ஊமரின் மனத்திடை யுன்னி விம்முவாள்
காமனு மொருசரங் கருத்தி லெய்தனன்
வேழெரி யதனிடை விறகிட் டென்னவே.

பொழிப்புரை:

நோவாள்; மிகும் நோயை எவரொடும் சொல்லாளாய், ஊமைகள் போல நினைந்து தேம்புவாள்; நெருப்பில் விறகினை இட்டதென்னக் காமனும் தன் பாணங்களுள் முதலாயதை அவள் சிந்தையில் எய்தனன்.

பதவுரை:

நோம் - வருந்துவாள்; உறும் நோய் நிலை நுவல கிற்றிலள் - (கணங்கணம்) மிகும் **விரகத்தின்** நிலையினை (எவர் மாட்டும்) சொல்லாதவளாய், **ஊமரின்** மனத்திடை உன்னி விம்முவாள் - ஊமைகள் போல **மனத்தி** னுள்ளேயே நினைந்து தேம்புவாள்; காமன் உம் - **மன்மதனும்**, ஒரு சரம் - ஓர் **அம்பினை**, வேம் எரி அதனிடை விறகு இட்டு என்ன கருத்தில் எய்தனன் - எரிகிற நெருப்பில் விறகினை **வைத்தாற் போல மனத்திலே** எய்தான்;

விசேட உரை:

நோய் - விரகம். விம்முதல் - பிறரறியாதபடி உள்ளே அழுதல். **ஒருசரம்** - முதற்கணையாகிய தர்மரை மலர். அது நினைப்பை மிகுவிப்பது. காமன் - காமத்தினை உண்டாக்குவோன்.

43. **நிழலிடு குண்டல மதனி னெய்விடா**
அழலிடா மிளிர்ந்திடு மயில்கொள் கண்ணினுள்
சுழலிடு கூந்தலுந் துகிலும் சோர்தரத்
தழலிடு வல்லியே போலச் சாம்பினுள்.

பொழிப்புரை:

ஒளி வீசும் குழைவரை சென்று, நெய்தடவாமலும் நெருப்பிலிடாமலும் விளங்கும் வேல் போன்ற கண்ணினளாகிய சானகி, பனிச்சையாக முடிக்கப்பட்ட கூந்தலும் துகிலும் நெகிழ தீயுள் போடப்பட்ட பூங்கொடியெனச் சோர்ந்து ஒடுங்கினள்.

பதவுரை:

நிழல் இடு குண்டலம் அதனின் - ஒளி தரும் குழை வரை (சென்று) நெய் விடா அழல் இடா மிளிர்ந்திடும் அயில் கொள் கண்ணினுள் - நெய் பூசப் பெறுமலும் நெருப்பில் சுடப்பெறுமலும் விளங்கும் ஒரு வேல் போன்ற கண்ணினை யுடையளாய சானகி, சுழல் இடு கூந்தல் உம் துகில் உம் சோர்தர - பனிச்சையாக முடிக்கப்பட்ட கூந்தலும் உடையும் நெகிழ, தழல் இடு வல்லி ஏ போல் சாம்பினுள் - தீயுள் போடப்பட்ட பூங்கொடியே போல வாடி ஒடுங்கினுள்.

விசேட உரை:

நிழல் - ஒளி. குண்டலம் - குழை. ''குண்ட மஞ்சிகை குழையெனலாகும்'' என்பது பிங்கல நிகண்டு. 'நெய்விடா அழலிடா மிளிர்ந்திடு மயில்' இல் பொருளுவமை. சுழலிடு கூந்தல் – பின்னிச் சுருட்டி முடிக்கப்பட்ட கூந்தல்; அது பனிச்சை. ஐம்பாலி

ஞென்று. சாம்புதல் - ஒடுங்குதல். ஈண்டு மாரனது இரண்டா வது கணையாகிய மாம்பூ உய்க்கும் அவத்தை கூறப்பட்டது.

44. தழங்கிய கலிகளு நிறையுஞ் சங்கமும்
மழுங்கிய வுள்ளமு மறிவு மாமையும்
இழந்தவ ளிமையவர் கடைய யாவையும்
வழங்கிய கடலென வறிய ளாயினள்.

பொழிப்புரை:

மேகலையையும், நிறையையும், வளைகளையும், தெளிவற்ற வுள்ளத்தை யும், அறிவையும், மேனியின் நிறத்தையும், விரகத்தால் இழந்து நின்ற சானகி, தேவர்கள் கடைய யாவையும் வழங்கிய கடலேபோலச் சிறந்தன ஒன்றுமில்லாதவளானாள்.

பதவுரை:

தழங்கிய கலிகள் உம் - ஒலிக்கின்ற மேகலைகளையும், நிறை உம் - மன உறுதிப்பாட்டையும், சங்கம் உம் - சங்க வளைகளையும், மழுங்கிய உள்ளம் உம் - தெளிவற்ற மனத்தையும், அறிவு உம் - அறிவையும், மாமை உம் - மேனியின் நிறத்தையும், இழந்தவள் - விரக வேதனையால் இழந்து நின்றவளான சானகி, இமையவர் கடைய யாவை உம் வழங்கிய கடல் என - தேவர்கள் கடைந்தபோது சிறந்த தன எல்லாவற்றையும் கொடுத்துவிட்ட பாற்கடலே போல, வறி யள் ஆயினள் - எந்தச் சிறந்த பொருளும் இல்லாதவளானாள்.

விசேட உரை:

புறத்தை அழகு செய்யும் மேகலை முதலியவற்றையும் அகத்தை அழகு செய்யும் நிறை முதலியவற்றையும் பிராட்டி இழந்தமை பற்றி 'வறியளாயினள்' என்றார். உடம்பின் மெலி வினால் மேகலை முதலியன கழன்றன. மேகலை - எழுகோவை மணியின் பெயர். ''எழு கோவைகளாற் சூழ்ந்த வெழின்மணி மேகலைப் பேர்'' என்பது சூடாமணி நிகண்டு. அதனாற் போலும் ''கலிகள்'' என்றார். சங்கம், கருவியாகு பெயர். இமையவர் - கண்ணிமையாதவர்.

45. கலங்குழைந் துகநெடு நாணுங் கண்ணற
நலங்குழை தரநகின் முகத்தி னேவுண்டு
மலங்குழை யெனவுயிர் வருந்திச் சோர்தரப்
பொலங்குழை மயிலைக்கொண் டரிதிற் போயினர்.

பொழிப்புரை:

அணிகள நெகிழ்ந்து விழவும், நாணம் ஒழியவும், உயிர்வு கலக்க மடையவும், முலைமுகத்தே மதன்கணை தைத்துளது என்பதால் அடிபட்டு வருந்தும மான் போல உயிரும் அழுங்கிச் சோர அழகு வாடுதலைப் பெற்ற மயிலைப் போன்ற சானகியைத் தோழியர் சிரமப்பட்டு அழைத்துச் சென்றனர்.

பதவுரை:

கலம் குழைந்து உக - அணிகள் நெகிழ்ந்து விழவும், நெடு நாண் உம் கண் அற - மிக்க நாணமும் ஒழியவும், நலம் குழைதர - மற்றும் உயர் பண்புகள் யாவும் கலக்க மடையவும், நகில் முகத்தில் ஏவு உண்டு - முலைமுகத்தில் மதன்கணை தைத்துளது என்பதால், மலங்கு உழை என - (அம்புபட்டு) வருந்தும் மான் போல, உயிர் வருந்தி சோர்தர - உயிரும் அழுங்கிச் சோர்வினை அடைய, பொலம் குழை மயிலை - அழகு வாடுதலைப் பெற்ற மயிலின் சாயலையுடைய சானகியை, அரிதில் கொண்டு போயினர் - சிரமப்பட்டு அழைத்துச் சென்றனர்.

விசேட உரை:

குழைந்து உக - நெகிழ்ந்து விழ. கண்ணறல் - நீங்கல். நலம் - உயர்வு. ஈண்டு அது பெண்மைக்குரித்தாய உயர்பண்புகளை உணர்த்துவதாயிற்று. குழைதரல் - கலக்கமடைதல். ஏவு - அம்பு. உண்டு - உளது. பொலம் - அழகு. பொலம் குழைதல் - அழகு வாட்டமடைதல். நகில் நலம் குழைதர முகத்தின் ஏ உண்டு மலங்கு உழை எனப் பிரித்து உரைத்தலுமாம். ஈண்டு மாரனது அசோகம் பூவாளி யுய்க்கும் அவத்தை பேசப்பட்டது.

சேடியர் பிராட்டியை மலரமளி சேர்த்தல்

46. காதொடுங் குழைபொரு கயற்க ணங்கையை
பாதமுங் கரங்களு மீன்ற பல்லவம்
தாதொடுங் குழையொடு மடுத்த தண்பனிச்
சீதநுண் டுளிமல ரமளிச் சேர்த்தினர்.

பொழிப்புரை:

காதுகளோடு குழைகளைப் பொருதுவனவும் கயல்போலப் பிறழ்வனவு மான கண்களையுடைய சானகியின் பாதங்களை, கரங்களை ஒத்த இளந்

தளிர்களைக் கொண்டதும், தாதொடும் இலைகளொடும் பொருந்திய குளிர்ந்த நுண் பனித்துளிகள் தெளிக்கப்பட்ட மலர்ப் படுக்கையில் (தேவியைத் தோழியர்) கொண்டுபோய்ச் சேர்த்தனர்.

பதவுரை:

காதொடும் குழைபொரு கயல் கண் - காதினோடு அதன் அணியான குழைகளையும் முட்டுவனவும், கயலைவப் பிறழ்வனவுமான கண்களையுடைய, நங்கைதன் - பெண்களிற் சிறந்தவளாய சானகியின், பாதம் உம் கைகள் உம் அனைய - பாதங்களையும் கைகளையும் ஒத்த, பல்லவம் - இளந் தளிர்களைக் கொண்டதும், தாதொடு உம் குழையொடு உம் - பூந்தாதுடனுன இலைகளோடு பொருந்தியதும், தண் சிதம் நுண் பனி துளி - மிக்க குளிர்ச்சியான பனி நீர்த்துளிகள் தெளிக்கப்பட்ட, மலர் அமளி சேர்த்தினுர் - மலர்ப் படுக்கையில் (தேவியை) சேர்த்தார்கள்.

விசேட உரை:

பல்லவம் - இளந்தளிர்; தளிர்களையும் பூந்தாதுடனுன இலைகளையும் பரப்பி அவற்றின்மீது குளிர்ந்த பனி நீர்த்துளிகள் தெளிக்கப்பட்ட மலர்களைப் பரப்பிய அமளி என்க.

அமளி நண்ணிய சானகி நிலை 47—50

47. நாளரு நறுமல ரமளி நண்ணினுள்
பூளைவீ புரைபனிப் புயற்குத் தேம்பிய
தாளதா மரைமலர் ததைந்த பொய்கையும்
வாளரா நுங்கிய மதியும் போலவே.

பொழிப்புரை:

பூளைப் பூவை யொத்த நுண்ணிய பனிமழைக்கு வாடிய தாள் கொண்ட தாமரைமலர் நெருங்கிய தடாகத்தையும் பாம்பால் விழுங்கப் பட்ட சந்திரனையும் போல அன்றலர்ந்த மலர்ப் படுக்கையிற் (சானகி) சேர்ந்தாள்.

பதவுரை:

பூளை வீ புரை பனி புயற்கு - பூளைப் பூவை யொத்த பனி மழைக்கு, தேம்பிய தாள தாமரை மலர் ததைந்த - வாடிய தாள்களையுடைய தாமரை மலர்கள் நெருங்கின, பொய்கை உம் - தடாகத்தையும், வாள் அரா நுங்கிய மதியும் போல - கொடிய பாம்பினுல் விழுங்கப்

பட்ட பூரண சந்திரனையும் போல, நாள் அரு நறுமலர் அமளி நண்ணினாள் - நாள் கழியாத வாசனை வீசும் மலர்கள் பரப்பப்பட்டுள்ள படுக்கையில் (சானகி) சேர்ந்தாள்.

விசேட உரை:

புயற்குத் தேம்பிய பொய்கையும், அரா நுங்கிய மதியும் எனப் பிராட்டியும் ஒளியிழந்தவளாயினாள் என்க. சந்திர கிரகணத்தின்போது சந்திரனை மறைக்கும் பூமியின் நிழலைப் பாம்புகளாகிய இராகு கேதுக்கள் எனப் புராணங்கள் கூறும். தாமரையன்றிப் பிறமலர்களும் பனியால் தாக்கப்படுதல் இயல்பு. வீ - மலர். ததைதல் - நெருங்குதல். வாள் - கொடுமை. நாளரு மலர் - அன்றலர்ந்த மலர்.

48. மலையிசைத் தடத்துகு மழைக்க ணுலிபோல்
முலைமுகட் டுதிர்ந்தீடு நெடுங்கண் முத்தினம்
சிலைநுதற் கடையுறை செறித்த வேற்கணுள்
உலைமுகப் புகைநிமி ருயிர்ப்பின் மாய்ந்தவே.

பொழிப்புரை:

நுதலின் ஓரமான சிலை போன்ற புருவ உறையிற் சொருகிய வேல் போன்ற கண்களை யுடைய சானகி, மலையின் மேலிடத்துச் சிந்தும் மழை நீர்த் துளிகளென, முலையின் உச்சியிலே உகுத்த முத்துப் போன்ற நீர்த் துளிகள உலைக்களத் தெழும் புகைபோலப் பெருமூச்சினுல் வறண்டு போயினை.

பதவுரை:

நுதல் கடை சிலை உறை செறித்த வேற்கணுள் - நெற்றியின் ஓரமான சிலை போன்ற புருவ உறையுட் சொருகிய வேலனைய கண்ணினளாகிய சானகி, மலை மிசை தடத்து - மலையின் மேலிடத்திலே, மழைக்கண் உகும் ஆலி போல் - மேகங்களிடமிருந்து சொரியும் நீர்த் துளிகளென, முலைமுகடு உதிர்ந்தன - முலைகளின் உச்சியிலே சிந்திய, நெடு கண் முத்து இனம் - நீண்ட விழிகளினின்றும் சிந்திய முத்தின் திரள், உலை முகம் புகை நிமிர் உயிர்ப்பின் - உலைக்களத் தெழுகிற புகை போல வெளிப்படும் பெருமூச்சினுல், மாய்ந்தது - வறண்டு போயிற்று.

விசேட உரை:

நுதற்கடை சிலையுறை என மாற்றுக. உகுதல் - சொரிதல். உதிர்தல் - சிந்துதல். மாய்ந்தது - வறண்டு போயிற்று; உடற் காங்கையால் காய்ந்தது. வறட்சி - உடற்காங்கை.

49. கம்பமில் கொடுமனக் கான வேடன்கை
அம்பொடு சோர்வதோர் மயிலு மன்னவள்
வெம்புறு மனத்தனல் வெதுப்ப மென்மலர்க்
கொம்பென வமளியிற் குழைந்து சாய்ந்தனள்.

பொழிப்புரை:

கொடிய மனத்தனை காட்டு வேடன் கையால் எய்த அம்புபட்டுச் சோர்ந்து விழுவதொரு மயிலையை பிராட்டி, வெப்பமுற்ற தன் மனத்துண்டான விரகத்தீ வாட்ட (வாடிய) மென்மலர்க் கொம்பென அம்மலர்ப் படுக்கையிற் சாய்ந்தாள்.

பதவுரை:

கம்பம் இல் கொடு மனம் கான வேடன் - கலங்குதல் இல்லாத கொடிய மனத்தையுடைய காட்டு வேடனது, கை அம்பினால் - கையால் எய்யப்பட்ட அம்பினால், சோர்வது ஓர் மயில் உம் - தளர்வதாகிய ஒரு மயிற் பறவையும், அன்னவள் - போன்ற பிராட்டி, வெம் புறு மனத்து அனல் வெதும்ப - புழுங்குகின்ற மனத்திற் பொருந்திய விரகத்தீ வாட்ட, மெய் மலர் கொம்பு என - (எரியிடைப்பட்ட) மென்மையான பூங் கொம்பு போல, அமளியில் குழைந்து சாய்ந்தனள் - அம் மலர்ப்படுக்கையில் வாடிச் சாய்ந்தாள்.

விசேட உரை:

கம்பம் - நடுக்கம். வெம்புதல் - புழுங்குதல். வெதுப்புதல் - வாட்டுதல். மனத்து அனல் - மனத்தகத்தே பொருந்திய விரகத்தீ. குழைதல் - வாடுதல். வேடன் அம்புபட்ட மயில்போல மாரன் கணை பட்டுப் பிராட்டி சாய்ந்தாள் என்க. மனத்து அனல் வெதுப்பவாடிய பிராட்டிக்கு எரியிடைப்பட்ட மென் மலர்க் கொம்பு உவமிக்கப்பட்டது.

50. சொரிந்தன நறுமலர் சுறுக்கொண் டேறின
பொரிந்தன கலவைகள் பொறியிற் சிந்தின
எரிந்தன கனல்சுட இழையில் கோத்தநூல்
பரிந்தன கரிந்தன பல்ல வங்களே.

பொழிப்புரை:

சொரிந்த நறுமலர்கள் தீய்ந்து உடலில் தைத்தன. பூசப்பட்ட கலவைச் சந்தனம் பொரிந்து தீப்பொறியெனச் சிந்தின. காமத்தீ சுடுதலால் அணியிற் சேர்க்கப்பட்ட நூல்கள் அற்று நீங்கின. (பாய்ப்பட்ட) இளந் தளிர்கள் கரிந்துபோயின.

பதவுரை:

சொரிந்தன நறுமலர் - பெய்யப்பட்ட வாசனை பொருந்திய மலர் கள், சுறுக்கொண்டு ஏறின - தீய்ந்து போய்த் தைத்தன. பொரிந்தன கலவைகள் - பொரிந்து போயினவாயின கலவைச் சந்தனக் குழம்பு கள், பொறியின் சிந்தின – தீப்பொறி போல உதிர்ந்தன. வெம் கனல் சுட இழையில் தோத்த நூல் எரிந்தன பரிந்தன - கொடிய காமத்தீ சுடுதலால் ஆபரணங்களில் சேர்க்கப்பட்ட நூல்கள் எரிந்து அற்று நீங்கின. கரிந்தன பல்லவங்கள் - இளந்தளிர்கள் கரிந்து போயின.

விசேட உரை:

சுறுக் கொள்ளுதல் - தீய்ந்து போதல். பரிதல் - அறுதல். இதுவும் அசோகமலர்ப் பிரயோகத்தால் எய்தும் சோகத்தின் தன்மை கூறியவாறு.

சானகி நிலைகண்ட செவிலியர் முதலியோர் செயல்

51. தாதியர் செவிலியர் தாயர் தவ்வையர்
மாதுய ருழந்துழந் தழுங்கி மாழ்கினர்,
யாதுகொ லிதுவென வெண்ண றேற்றலர்
போதுட னயினிநீர் சுழற்றிப் போற்றினர்.

பொழிப்புரை:

தோழியரும், செவிலித்தாயரும், தாய்மாரும், தமக்கை முறையாயி ஞேரும் பெருந்துயரை அனுபவித்து வருந்தி மயங்கினவர்களாகி இந் நோய் யாதோ என ஆலோசித்து அறியாதவர்களாகி மலர்களோடு கூடிய ஆலத்தி நீரைச்சுற்றிக் கண்ணூறு கழித்து வாழ்த்தினர்.

பதவுரை:

தாதியர் – தோழிமாரும், செவிலியர் - செவிலித்தாயரும், தாயர் - தாயரும், தவ்வையர் - தமக்கை முறையாயினேரும், மாதுயர் உழந்து உழந்து - பெருந்துன்பத்தை அனுபவித்து அனுபவித்து, அழுங்கி - வருந்தி, மாழ்கினர் - மயக்கத்தாற் கலங்கினராகி, இது யாது கொல் என எண்ணல் தேற்றலர் - இந்நோய் யாதோ என சிந்தித்து அறியமாட்டாதவராய், போதுடன் அயினி நீர் சுழற்றி போற்றினர் - மலர்களோடு கூடிய ஆலத்தி நீரைச் சுற்றி (கண்ணூறு கழித்து) வாழ்த்தினர்.

விசேட உரை:

தாதி முதலானேர் பிராட்டிக்குற்ற நோயை உணராதா ராய் கண்ணூறு போலும் எனக் கருதி ஆலத்திசுற்றிப் பரிகாரஞ்

செய்தார்களென்க. உழத்தல் – அனுபவித்தல். அழுங்கல் - வருந்துதல். மாழ்குதல் - மயங்குதல். தேற்றலர் - தெளிவு எய்தப் பெறுதார். அயினி நீர் - செஞ்சோறு கலந்த ஆலத்தி நீர். பாராட்டுந்தாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய் எனத் தாயர் ஐவகையினர். இவருள் செவிலித்தாயர் ஒழிந்த நால்வகையினரையே தாயர் என்றார். இவ் வைவகைத் தாயரின் மகளிராம் பிராட்டியின் மூப்புடையாரையே தவ்வையர் என்றார் போலும்.

சானகியின் மனநோய்

52. அருகினின் றசைதரு மால வட்டக்கால்
எரியினை மிகுத்திட விழையு மாலையும்
கரிகுவ தீகுவ கனல்வ காட்டலால்
உருகுபொற் பாவையு மொத்துத் தோன்றினாள்.

பொழிப்புரை:

பக்கத்தில் நின்று அசைக்கின்ற ஆலவட்டங்களின் காற்றானது காமத் தீயை வளர்க்க (சானகி அணிந்த) ஆபரணங்களும், மலர்மாலைகளும் கரிந்தும் தீய்ந்தும் எரிந்தும் போனமையால் உருகும் பொற்பாவை போன்றும் காணப்பட்டாள்.

பதவுரை:

அருகில் நின்று அசை தரும் - பக்கத்திலே நின்று (தோழியர்) வீசுகின்ற, ஆலவட்டம் கால் - ஆலவட்டங்களால் எழும் காற்றானது, எரியினை மிகுத்திட - காமத்தீயை வளர்க்க, இழை உம் மாலை உம் - (சானகி அணிந்த) ஆபரணங்களும் மலர்மாலைகளும், கரிகுவ - கரிந்து போவனவும், தீகுவ - தீய்ந்து போவனவும், கனல்வ – எரிவனவுமாக, காட்டலால் - ஆய்விடுதலால், (அவள்) உருகு பொன் பாவை உம் ஒத்து - (தீப்பட்டு) உருகுகின்ற பொன்னாலாகிய பிரதிமையையும் போன்று, தோன்றினாள் – காணப்பட்டாள்.

விசேட உரை:

ஆலவட்டம் - பெருவிசிறி. கரிதல் - கருநிறமெய்தல். தீதல் - வேகுதல்.

சானகி புலம்பல் 53–59

53. அல்லினை வகுத்ததோ ரலங்கற் காடெனும்
வல்லெழு வல்லவேன் மரக தப்பெருங்
கல்லெனு மிருபுயங் கமலங் கண்ணெனும்
வில்லொடு மிழிந்ததோர் மேக மென்னுமால்

பொழிப்புரை:

(இராமபிரான் குஞ்சி) இருளாலமைக்கப்பட்ட மாலை கூடிய காடு என் பாள், (அவனது) தோள்கள் வலிய தூண்களாம், இல்லையாயின் மரகத மலைகளே என்பாள், கண்கள் செந்தாமரை மலர்கள் என்பாள், (திருமேனி) இந்திர தனுவொடும் பூமியில் இறங்கிய தொரு மேகம் என்பாள்.

பதவுரை:

அல்லினை வகுத்தது ஓர் அலங்கல் காடு எனும் - (இராமபிரா னது குஞ்சி) இருள் கொண்டு அமைக்கப்பட்ட தொரு மாலையோடு கூடிய காடு என்பாள், இருபுயம் வல் எழு - அவனது இரண்டு புயங் களும் வலிய தூண்களாம், அல்ல ஏல் - அல்ல வாயின், மரகதம் பெருகல் - மரகதமயமான பெரிய மலைகளேயாம், எனும் - என் பாள், கண் கமலம் எனும் - கண்கள் செந்தாமரை மலர் என்பாள், (திருமேனி) வில்லொடு உம் இழிந்தது ஓர் மேகம் என்னும் - இந்திர தனுவொடும் பூமியில் இறங்கிய தொரு மேகம் என்பாள்.

விசேட உரை:

அலங்கற்காடு - மலர்மாலை கொண்ட காடு. எழு - இரும்புத் தூண். பெருங்கல் - மலை. இராமபிரான் கோதண்டத்தோடும் நின்றதை 'வில்லொடு மிழிந்ததோர் மேகம்' என்றாள்.

54. நெருக்கியுட் புகுந்தரு நிறையும் பெண்மையும்
உருக்கியென் னுயிரொடு முண்டு போனவன்
பொருப்புறழ் தோள்புணர் புண்ணி யத்தது
கருப்புவில் லன்றவன் காம னல்லனே.

பொழிப்புரை:

நெருக்கி மனத்துட் புகுந்து அழியாத மன உறுதியையும், பெண் மையையும் இளகச் செய்து அவற்றை உயிரொடுங் கவர்ந்து சென்றவ னது மலைபோன்ற தோள்களைச் சேரும் புண்ணியம் பெற்றது கருப்புவில் லன்று. (ஆதலால்) அவன் மதனன் அல்லனே.

பதவுரை:

நெருக்கி உள் புகுந்து - நெருக்கி மனத்துட் புகுந்து, அரு நிறை உம் - அரிதாகிய மன உறுதியையும், பெண்மை உம் - பெண் மைக்குளதாம் பண்புகளையும், உருக்கி - கரையுமாறு செய்து, என் உயிரொடும் உண்டு போனவன் - எனது உயிருடனே விழுங்கிச் சென்ற நம்பி, பொருப்பு உறழ் தோள் புணர் புண்ணியத்தது - மலை யனைய

தோளிற் சேர்தற்கான நல்வினைப் பயனது. கருப்பு வில் அன்று - கரும்பு வில்லே யல்ல. அவன் காமன் அல்லன் - ஆதலால் அவன் மன் மதனல்லன்.

விசேட உரை:

மதனனே இவன் என ஐயமுற்றவள் தோளிற் கிடந்த வில் கருப்பு வில் அன்று என்பதை நோக்கி ஐயந் தீர்ந்தாள் என்ப தாம். கோதண்டம் தோள்புணரப் பெற்ற புண்ணியம் பெற்றி லேனே என்பது குறிப்பு.

55. பெண்வழி நலனெடும் பிறந்த நாணெடும்
எண்வழி யுணர்வுநா னெங்கும் காண்கிலேன்
மண்வழி நடந்தடி வருந்தப் போனவன்
கண்வழி நுழையுமோர் கள்வ னேகொலாம்.

பொழிப்புரை:

பெண்களுக்குரிய ஒழுக்கம் நற்குணங்களோடும், தோன்றிய நாணத் தோடும், மனத்திலுள்ள அறிவையும நான எங்கும் காணவில்லை. திரு வடிகள் வருந்த நிலத்தில் நடந்துசென்ற நம்பி கண்களின் வழியாக உள்ளே செல்ல வல்லானெரு கள்வனே போலும்!

பதவுரை:

பெண்வழி - பெண்களுக்குரிய ஒழுக்கம், நலனெடும் - நற்குணங்க ளோடும், பிறந்த நாணெடும் - தோன்றிய நாணத்தோடும், எண் வழி உணர்வு உம் - மனத்திலுள்ள அறிவையும், நான் எங்கும் காண் கிலேன் - நான் எங்கு தேடியும் காணப் பெற்றிலேன், அடிவருந்த மண் வழி நடந்து போனவன் - திருவடிகள் வருந்த நிலத்திலே நடந்து சென்ற நம்பி, கண்வழி நுழையும் ஓர் கள்வன் ஏ கொல் ஆம் - கண்களின் வழியாக உள்ளே நுழைந்து செல்ல வல்லானெரு கள் வனே போலும்.

விசேட உரை:

பெண வழி - பெண்களிடத்து, என்றுமாம். நலன் - பெண் மைக் குணங்கள். அழகுமாம். சிறப்பு நோக்கி நாணைப் பிரித்துக் கூறினரென்க. நாணென்பது பெண்டிர்க்கு இயல்பாகவே உள்ள தொரு தன்மை. எனினும் ''பிறந்த நாண்'' என்றதனால் அது 'காமக் குறிப்பு நிகழ்ந்த வழிப்படுவதொரு மனவொடுக்கத் தையே' என்க. கள்வன் - பிறருடைமையை வஞ்சித்துக் கொள் வோன்.

56. இந்திர நீலமொத் திருண்ட குஞ்சியும்
சந்திர வதனமுந் தாழ்ந்த கைகளும்
சுந்தர மணிவரைத் தோளு மேயல
முந்தியென் னுயிரையம் முறுவ லுண்டதே.

பொழிப்புரை:

இந்திர நீலம் போன்ற கரிய கேசமும், சந்திரன் போன்ற முகமும் நீண்ட கைகளும், அழகிய நீல மணி மலையன்ன தோள்களுமே யல்ல என் உயிரை உண்டன. இவற்றிற்கு முன்னரே நம்பியின்) அந்தப் புன் முறுவலே உண்டுவிட்டது.

பதவுரை:

இந்திர நீலம் ஒத்து இருண்ட குஞ்சி உம் - இந்திரநீலம் என்னும் மணியைப் போன்று இருண்ட கேசமும், சந்திர வதனம் உம் - பூரண சந்திரனை யொத்த முகமும், தாழ்ந்த கைகள் உம் - தாழ்ந்த தடக் கைகளும், சுந்தர மணிவரைத் தோள் உம் ஏ அல - அழகிய நீலமணி மலையை யொத்த தோள்களுமே யல்ல. அ முறுவல் முந்தி என் உயிரை உண்டது - அந்தப் புன்முறுவலே இவற்றின் முன்னதாக என் உயிரைக் கவர்ந்தது.

விசேட உரை:

உயிர் என்றது பெண்மைக்கு உயிராய குணங்களை, பிராட்டி மனத்தகத்தே ஊன்றிப் பதிந்து அழிதலின்றி யமைந்திருந்த முறுவலென்பதை உணர்த்தவே 'அ முறுவல்' என்று சுட்டினர். முறுவலால் உண்ணப்பட்ட உயிர் உயிர்ப்பெய்த வெய்த மீண்டும் மீண்டும் குஞ்சி முதலியனவற்றுல் உண்ணப்பட்டது என்றறிக. தாழ்ந்தகை - முழங்கால்வரை தாழ்ந்த தடக்கைகள். மணி - நீலமணி. மணிவண்ணன் என்பதுபோல. அம் முறுவல் - அழகிய முறுவல் என்றுமாம்.

57. படர்ந்தொளி பரந்துயீர் பருகு மாகமும்
தடந்தரு தாமரைத் தாளு மேயல
கடந்தரு மாமதக் களிநல் யானைபோல்
நடந்தது கிடந்ததென் னுள்ள நண்ணியே.

பொழிப்புரை:

காணுவா ருயிரைப் பருகவல்ல அவன் திருமார்பும் செந்தாமரை போன்ற திருவடிகளும் என்னுயிரையே யல்ல; மதயானை போல நடந்த நடையழகு என்மனத்துட் புகுந்து கிடந்தது.

பதவுரை:

படர்ந்து ஒளி பரந்து உயிர் பருகும் ஆகம் உம் - விசாலித்து ஒளி பரந்து என் உயிரனைய நலன்களைப் பருகும் திருமார்பும், தடம் தரு தாமரை தாள் உம் - பெருமை கொண்ட செந்தாமரைமலர்த் திரு வடிகளு மென்னு மிவையே, அல - அல்ல; கடம் தரு மா மத களி நல் யானை போல் நடந்தது - கன்ன மத்தகங்களாற் பெருகும் பெருமதங் கொண்ட களிக்கும் பிறப்பினையுடைய யானை போல் நடந்த தடையழகு, என் உள்ளம் நண்ணி கிடந்தது - எனது மனத்தை யடைந்து கிடந்தது.

விசேட உரை:

படர்தல் – விசாலமடைதல். உயிர் - பெண்மை நலன்கள்: தடம் - பெருமை. கடம் - யானையின் கன்னம், மத்தகம். நடந்தது - நடந்த அழகு. கிடந்தல் - நீங்காதிருத்தல். நடக்கும் நடை கொண்டும் ஒருவர்தம் பண்பினை உய்த்துணர்வாராதலின் நம்பியின் நடையினை, பிராட்டி சிரத்தையோடு நோக்கி மகிழ்ந்தனள் என்பது இதனுற் கூறப்பட்டது.

58. உரைசெயிற் றேவர்த முலகு ளானலன்
விரைசெறி தாமரை யிமைக்கு மெய்ம்மையான்
வரிசிலைத் தடக்கையன் மார்பி னூலினன்
அரசிளங் குமரனே யாகல் வேண்டுமால்.

மொழிப்புரை:

(அவ்வாண்டகை) தேவருலகத்து உள்ளான் ஒருவனல்லன். செந் தாமரை மலர்க்கண்கள் இமைத்தல் செய்யுந் தன்மையை யுடையன். ஆதலால் வரிசிலையையும் தடக்கைகளையு முடையவனும், மார்பில் நூலினனு மாகிய அவன் அரசிளங்குமரன் ஆகல் வேண்டும.

பதவுரை:

உரை செயின் - (அவ்வாண்டகையை இன்னனென்று) சொல்லப் புகின், தேவர் தம் உலகு உளான் அலன் - தேவர்களது உலகத்தில் உள்ளானொரு தேவனல்லன்; விரை செறி தாமரை இமைக்கும் மெய்ம்மையான் - வாசனை மிக்க செந்தாமரை மலரன்ன திருக்கண் கள் இமைக்குந் தன்மை யுடையான், (ஆதலால்) வரி சிலை தட கையன் - கட்டமைந்த வில்லை யேந்திய பெரிய கையை யுடையவனும், மார்பில் நூலினன் - திருமார்பில் பூணூலையு முடையவனுமான அவன், அரசு இளம் குமரன் ஏ ஆகல் வேண்டும் - அரசிளங் குமர னாகவே இருப்பன் என்பது துணிபு.

விசேட உரை:

தேவனே வென ஐயுற்ற பிராட்டி கண்ணிமைத்தலால் ஐயம் நீங்கி வில்லும் பூணூலும் உடைமையால் அரசிளங் குமரனே யெனத் தெளிந்தன ளென்க. ஐயவணி.

59. பிறந்துடை நலநிறை பிணித்த வெந்திரம்
கறங்குபு திரியுமென் கன்னி மாமதில்
எறிந்தவக் குமரனே யின்னுங் கண்ணிற்கண்
டறிந்துயி ரிழக்கவு மாகு மேகொலாம்.

பொழிப்புரை:

(என்னுடன்) பிறந்து என் உடைமையான நலந்தரும் மனவுறுதி ஆகிய பொருத்தப்பட்ட யந்திரம் சுழன்று திரியும் என் அழிவின்மை யுடைய பெருமதிலை அழித்துச் சென்ற அந்தக் குமரனை இன்னமும் ஒரு கால் என் கண்களாற் கண்டு (அவனை) அறிந்து, பின் என் உயிரை இழக்க நேரிடினும் அது தக்கதே ஆகும்.

பதவுரை:

பிறந்த உடை (என்கூடவே) பிறந்த பேருடைமையாகிய, நலம் நிறை - நலந்தரும் மனவுறுதியாகிய, பிணித்த எந்திரம் - பொருத்தப்பட்ட யந்திரம், கறங்குபு திரியும் - சுழன்று திரிதற்கிடமான, என் கன்னி மா மதில் எறிந்த - என் அழிவின்மை பெற்ற (பெண்மைப் பண்புகளாகிய) பெருமதிலை அழித்துச் சென்ற, அ குமரனை - அந்தக் குமரனுகிய நம்பியை, இன்னமும் கண்ணின் கண்டு - இன்னும் ஒருகால் என் கண்ணினால் கண்டு, அறிந்து - (அவனை) உணர்ந்து கொண்டு, உயிர் இழக்க உம் ஆகும் ஏ கொல் ஆம் - (பின்) என் உயிரை இழக்க நேரினும் அது தக்கதே ஆகும் என்க.

விசேட உரை:

சுழன்று திரிந்து பகைவரை விரட்டும் மதிற் பொறிபோல அழிவின்மை பெற்ற பெண்மைப் பண்புகளாய பெருமதிலின் கண் சுழன்று திரியும் நலநிறையாகிய யந்திரம் பொருத்தப்பட்டிருந்த தென்று ளென்க. கன்னி - அழிவின்மை. கன்னி மாமதில் - கன்னிமையாகிய மாமதிலுமாம். கண்ணிற் கண்டறிந்தபின் உயிர் இழக்கவும் ஆகுமாம் என்க.

சானகி வேட்கைப் பெருக்கினைப் பிதற்றல்

60. என்றினவ வினையன விளம்பு மெல்லையின்
நின்றன னிவனெனு நீங்கி னனெனும்
கன்றிய மனத்துறு காம வேட்கையால்
ஒன்றல பலநினைந் துருகுங் காலையே.

பொழிப்புரை:

இவற்றையும் இவை போல்வனவற்றையும் பிராட்டி தன்னுள்ளே கூறுகிற பொழுதில் (நான் முன்பு கண்ட நம்பி) இதோ இங்கு நிற்கின்றான் என்பாள். (உடனே அவ்வுரு மறைதலால்) நீங்கினான் என்பாள். வெதும்

பிய மனத்து மிகுந்த காமவேட்கையால், ஒன்றல்ல, பலவற்றை எண்ணி யெண்ணி உருகும் பொழுதில்,—

பதவுரை:

என்று இவை - இவ்வாறுக இவற்றையும், *இனையன* - இவை போல்வனவற்றையும், *விளம்பும் எல்லையின்* - கூறும் பொழுதில், (அவ் வரசிளங் குமரனுகிய நம்பி எதிரில் தோன்றினனாக) *இவன் நின்ற னன்* - (நான் முன்பு கண்டவன்) இதோ இங்கு நிற்கின்றான், எனும் - என்பாள்; நீங்கினன் எனும் - (அவ்வாறு மறைதலால்) அவன் நீங்கி னனே என்பாள்; *கன்றிய மனத்து உறு காம வேட்கையால்* - வெதும் பிய மனத்தில் மிகுந்த வேட்கைப் பெருக்கத்தினால், *ஒன்று அல பல நினைந்து* - ஒன்றொழிந்த பலவற்றை எண்ணி, *உருகும் காலை* - மன முருகும் பொழுதில்,—

விசேட உரை:

காம வேட்கை - காமமாகிய வேட்கைப் பெருக்கம்; அது மத னம். 'கதிரவன் கடலுள் மூழ்கினன்' என மேற்கவியோடியை யும் குளகம் இது.

சூரியன் அத்தமித்தல்

61. **அன்னமென் நடையவட் கமைந்த காமத்தீத்**
தன்னையுஞ் சுடுவது தரிக்கி லானென
நன்னெடுங் கரங்களை நடுக்கி யோடிப்போய்
முன்னைவெங் கதிரவன் கடலில் மூழ்கினன்.

பொழிப்புரை:

அன்னம் போன்ற நடையினளாகிய பிராட்டிக்குப் பொருந்திய காம நெருப்பு, தன்னையுஞ் சுடுவதைப் பொறுக்காதவன் போல, கதிரவன் தன் நீண்ட கரங்கள் நடுங்கியவனுய் விரைந்து சென்று கடலில் மூழ்கினன்.

பதவுரை:

அன்னம் மெல் நடையவட்கு - அன்னத்தின் மெல்லிய நடையை யுடைய பிராட்டிக்கு, *அமைந்த காம தீ* - பொருந்திய காமநெருப்பு, *தன்னை உம் சுடுவது தரிக்கிலான் என* - தன்னையும் வந்து தகிப்பதைப் பொறுக்கமாட்டாதவன் போல, *முன்னை வெம் கதிரவன்* - பழமை யாகிய வெப்பத்தை உடையவனுகிய சூரியன், *நல் நெடு கரங்களை நடுக்கி* - சிறந்த நீண்ட கரங்களை நடுங்கச்செய்து, *ஓடி போய் கட லில் மூழ்கினன்* - விரைந்து சென்று மேல்கடலிலே அமிழ்ந்தான்.

விசேட உரை:

பிராட்டிக் கமைந்த காமத்தீ தன்னையுஞ் சுடுவது தரிக்கிலா னாய் கதிரவன் கடலில் மூழ்கினன் என்பது ஏதுத்தற்குறிப் பேற்ற வணி. காம நெருப்பின் வெம்மையை எடுத்துக்காட்டவே 'தன் னையும்' என்றார். முன்னை - தான் தோன்றிய கால வெல்லையி லிருந்து.

அந்தி மாலை 62—63

62. விரிமலர்த் தென்றலாம் வீசு பாசமும்
எரிநிறச் செக்கரு மிருளுங் காட்டலால்
அரியவெட் கனறரு மந்தி மாலையாங்
கருநிறச் செம்மயிர்க் காலன் றோன்றினன்.

பொழிப்புரை:

மலர்களின் மணங்கூடிய தென்றலாகிய வீசுவதற்கான பாசத்தை யும், தீயின் செந்நிறத்தையுடைய செவ்வானமாகிய செங்குஞ்சியையும், இருளாகிய கருநிறத்தையும் காட்டலால், அரியவளாய பிராட்டிக்குக் காமக்கனலை வளர்க்கும் அந்திக்கால மென்கின்ற கருநிறமும் செங்குஞ் சியுங் கொண்ட யமன் தோன்றலாயினன்.

பதவுரை:

விரி மலர் தென்றல் ஆம் - மலர்ந்த மலர்களின் மணங் கூடிய தென்றற் காற்றாகிய, வீசு பாசம் உம் - எறிவதற்கான பாசத்தை யும், எரி நிறம் செக்கர் உம் - தீயைப் போன்ற சிவந்த நிறத்தை யுடைய செவ்வானமாகிய செங்குஞ்சியையும், இருள் உம் - இருளா கிய கரிய நிறத்தையும், காட்டலால் - தெரியக் காண்பித்தலால், அந்தி மாலை ஆம் - அந்திக்கால மென்கிற, கரு நிறம் செம் மயிர் காலன் - கரிய நிறத்தையும் சிவந்த குஞ்சியையுமுடைய யமன், தோன்றினன் - தோன்றலானான்.

விசேட உரை:

விரகத்தீயால் புழுங்கிய பிரர்ட்டிக்கு அந்திப் பொழுது காலன் போல வந்ததென்க. செக்கரும் இருளும் வைத்த முறை மாறி கருநிறச் செம் மயிர் என வைக்கப்பட்டது எதிர் நிர நிறைப் பொருள் கோள். காலன் - வயசுகணிப்போன்; பாசத் தவனுமவனே. செக்கர் - பண்பாகு பெயர்.

63. மீதறை பறவையாம் பறையும் கீழ்விளி
ஓதமென் சிலம்பொடு முதிரச் செக்கரும்
பாதக விருள்செய் கஞ்சுகமும் பற்றலாற்
சாதக மென்னவும் தகைத்தம் மாலையே.

பொழிப்புரை:

மேலே ஒலிசெய்யும் பறவைகளாகிய பறைக்கருவியையும், கீழே ஒலிக்கின்ற கடலாகிய சிலம்பையும், செவ்வானமாகிய உதிரத்தையும், (விரகத்தால் வேதனைப்பட்டார்க்கு) பாதகஞ் செய்யும் இருளாற் செய்த சட்டையையும், கொண்டிருப்பதனால் இந்த மாலைப்பொழுது பூதம் என்று சொல்லுதற்கும் தகுதியுடையது.

பதவுரை:

மீது அறை பறவை ஆம் பறை உம் - மேலே (ஆகாயத்தில்) ஒலிக்கின்ற பறவைகளாகிய பறைக்கருவியையும், கீழ் விளி ஓதம் என் சிலம்பொடு உம் - கீழே (பூமியில்) ஒலிக்கின்ற கடலெனப்படும் சிலம்பையும், செக்கர் உதிரம் உம் - செவ்வானமாய இரத்தத்தையும், பாதகம் இருள் செய் - துன்பத்தை (இடையீடின்றிச்) செய்கின்ற இருளாற் செய்த, கஞ்சுகம் உம் - சட்டையையும், பற்றலால் - கொண்டிருத்தலால், இ மாலை - இந்த மாலைப் பொழுதானது, சாதகம் என்ன உம் தகைத்து - பூதவகையினென்று எனச் சொல்லுதற்குந் தகுதி யுடையது.

விசேட உரை:

விளி - ஒலி. பாதகம் - பெரும்பாவம்; அஃதாவது, அதன் பயனுய துன்பம் என்க. கஞ்சுகம் - சட்டை. சாதகம் - ஒருவகைப் பூதம். பறவை யொலியே பறை யொலியாகவும் கடலொலியே சிலம் பொலியாகவும் இருளாகிய சட்டையைத் தரித்துச் செக்கராகிய உதிரத்தை யேந்தி நிற்கும் பூதம் போன்றிருந்தது மாலைக் காலம் என்க. இஃது உருவகத் தற்குறிப்பேற்றம். 'சாதகம் என்னவும்', உம்மை இறந்தது தழுவிய எச்சம்.

சானகி வருந்திக் கூறுதல்

64. கயங்க ளென்னுங் கனரோய்ந்து
கடிநாண் மலரின் விடம்பூசி
இயங்கு தென்றன் மன்மதவே
ளெய்த புண்ணி னிடைநுழைய
உயங்கு முணர்வு நன்னலமு
முருகிச் சோர்வா ளுயிருண்ண
வயங்கு மாலை வானேக்கி
யிதுவோ கூற்றின் வடிவென்றாள்.

பொழிப்புரை:

பொய்கைக ளென்னும் அழலிற் படிந்து, புதிய மண மலரின் விடத் தைப் பூசிக்கொண்டு உலவும் தென்றல் மன்மதன் காம பாணங்களை எய்த புண்ணின் உள்ளே மேலும் நுழைய, குலையும் அறிவும் பெண்மை நலன்களும் அழிந்து சோர்பவளாகிய சானகி, தன்னுயிரைக் ,கவரவந்து தோற்றும் மாலைப் பொழுதோடு கூடிய வானை நோக்கி யமனது வடிவம் இதுவேயோ என அஞ்சினள்.

பதவுரை:

கயங்கள் என்னும் கனல் தோய்ந்து - பொய்கைகள் என்னும் அனலிற் படிந்து, கடி நாள் மலரின் விடம் பூசி - வாசனையுடைய புது மலர்களிலிருந்து எடுத்த விடத்தை மேலே பூசிக்கொண்டு, இயங்கு தென்றல் - உலவும் தென்றற் காற்றானது, மன்மத வேள் எய்த புண்ணின் இடை நுழைய - மன்மதன் எய்ததலைகளாகிய புண் வழி உட்செல்ல, உயங்கும் உணர்வு உம் நல் நலம் உம் உருகி சோர் வாள் - வருந்தும் அறிவும் சிறந்த பெண்மை நலன்களும் அழிந்து தளர்பவளாகிய சானகியானவள், உயிர் உண்ண - தன்னுயிரைக் கவரும் பொருட்டு, வயங்கும் மாலை - விளங்கும் மாலைப் பொழுதோடு கூடிய, வான் - வானை, நோக்கி கூற்றின் வடிவு இதுவோ என்றுள் - பார்த்து யமனது பயங்கர வடிவம் இதுவேயோ என அஞ்சினள்.

விசேட உரை:

கனல் - கோபித்தலுடையது. மன்மதவேள் - புத்தியை மயக்குவோனும் விருப்பத்திற் குரியோனுமாகிய மாரன். மார னது தேராகிய தென்றல் ஈண்டு புண்ணினிடை நுழையும் வேலாயிற்று. உயங்குதல் - வருந்துதல். வயங்குதல் - விளங்கு தல். கூற்று - உயிர்களை உடம்புகளினின்றும் பிரிப்போன்.

அந்திமாலை வந்தமை

65. கடலோ மழையோ முழுநீலக்
கல்லோ காயா நறும்போதோ
படர்பூங் குவளை நறுமலரோ
நீலோற் பலமோ பானலோ
இடர்சேர் மடவா குயிருண்ப
தியாதோ வென்று தளர்வாண்முன்
அடல்சே ரகுரர் நிறம்போலு
மந்தி மாலை வந்ததுவே.

பொழிப்புரை:

கருங்கடலோ, காளமேகமோ, நீலமலையோ, காயா மலரோ, கருங் குவளை மலரோ, நீலோற்பல மலரோ, கருநெய்தல் மலரோ, விரகத் துன் பம் வந்துற்ற இளம் பெண்களது உயிரைக் கவர்வது இவற்றுள் எதுவோ எனத் தளர்வாளாய சானகியின எதிரில் கொலைத் தொழில் பொருந்திய அசுரரின் நிறத்தை யொத்த அந்திமாலை வந்தது.

பதவுரை:

கடல் ஓ - கரிய கடலோ, மழை ஓ - கருமுகிலோ, முழு நீலம் கல் ஓ - முழுதும் நீலமான மலையோ, காயா நறு போது ஓ - காயா மரத்தின் மணம் நிறைந்த மலரோ, படர் பூ குவளை நறு மலர் ஓ - படர்ந்த அழகிய கருங்குவளையினது வாசனை நிறைந்த மலரோ, நீலோற்பலம் ஓ - நீலோற்பல மலரோ, பானல் ஓ - கருநெய்தல் மலரோ, இடர் சேர் மடவார் உயிர் உண்பது யாது ஓ - விரகம் ஆகிய துன்பம் வந்தடைந்த மங்கைப் பருவத்தினரது உயிரைக் கவர் வது இவற்றுள் எதுவோ?, என்று தளர்வாள் முன் - என நினைந்து சோர்பவளாகிய சானகியின் எதிரிலே, அடல் சேர் அசுரர் நிறம் போலும் அந்திமாலை வந்தது - கொலைத்தொழில் பொருந்திய அசு ரரின் நிறம் போலும் அந்தி மாலையாகிய காலம் வந்தது.

விரோட உரை:

கடல் முதல் பானலீருனவை இராமபிரான் திருமேனியை ஒத்த நிறத்தன. ஆதலால் தனக்குற்ற இடரை விரக மயக்கத் தால் 'மடவார்' எனப் பொதுப்படச் சொன்னாள் என்க. ''இடர் சேர் மடவார்'' என்பதற்கு பலவன்கத் துன்பங்கள் வந்தடை தற் கிடமாய மங்கையர் என உரைக்கலாமோ வெனின், இட ருக் கெல்லாம் அறிவின்மையன்றே மூலம்? அறிவுடைமையால் உலகை நிலைநிறுத்த உதவினருள் மகளிர் ஆடவருக்கு எவ்வாற் றானும் தாழ்வு பெற்றிலர். அன்றியும் சானகியின் பருவத்து மகளிரே 'இடர்சேர்தற் கிடமானர்' என்பதும் பொருந்தா தென்க. அந்தி மாலை - பகற்காலக்கழிவும் மாலைக்கு முன்னுமாய அக்காலம். இது கவிக்கூற்று.

மாலைகண் டிரங்கல்

66. மைவா னிறத்து மீனெயிற்று
வாடை யுயிர்ப்பின் வளர்செக்கர்
பைவா யந்திப் படவரவே
யென்னை வளைத்துப் பகைத்தியால்
எய்வா னொருவன் கையோயா
னுயிரு மொன்றே யினியில்லை
உய்வா றுறவிப் பழிபூணு
வுஞ்ஞே டெனக்குப் பகையுண்டோ.

பொழிப்புரை:

வானிற் பரவிய இருளாகிய கருநிறத்தையும், விண்மீன்களாகிய விடப் பற்களையும், தென்றலாகிய உயிர்ப்பையும், செக்கராகிய விடப்பையுடைய வாயையும், அந்திப் பொழுதாகிய படத்தையுமுடைய நாகமே, எக்காரணத்தால் நாவை வளைத்து என்னைப் பற்றிப் பகைத்தனை ஆயினை? மலர்ப்பாணங்களை என்மீது எய்தலே தொழிலாக வுடையன் ஒருவன் (மதன்) கைகள் தளர்கின்றனவில்லை. எனக்கோ உயிர் ஒன்றே (அவன் அதைக் கவர்ந்தால்) வேறோர் உயிர் என்னிடமில்லை. (அவனிடமிருந்து) உய்ய விரும்புகிறேன். (அதற்குள் பெண்ணுகிய என்னை கொலலும) பெரும்பழியைப் பூணுதற்கு உனக்கு என்னிடம் ஏதாவது விரோதம் உண்டா?

பதவுரை:

வான் - வானிற் பரவிய, மை நிறத்து - கருமை நிறத்தையும், மீன் எயிற்று - விண்மீன்களாய விடப் பற்களையும், வாடை உயிர்ப் பினையும் - தென்றலாகிய பெருமூச்சையும், வளர் செக்கர் பை வாய் - பரவிய செவ்வானமாய விடப்பையுடைய வாயையுமுடைய, அந்தி பட அரவே - அந்திப் பொழுதாய படத்தையுடைய கொடிய நாகமே! என் - எக்காரணத்தால், நா வளைத்து பகைத்தி - நாவை வளைத்து என்னைப் பற்றிப் பகைத்தனை ஆயினை?, எய்வான் ஒருவன் கை ஓயான் - மலர்ப் பாணங்களை என்மீது எய்யுந் தொழிலையே தொழிலாக வுடையனை ஒருவன் (மதனன்) கைகள் தளர்கின்றனவில்லை. உயிர் உம் ஒன்றே - எனக்கோ உயிர் ஒன்றேதான்; இனி இல்லை - (அவன் அதைக் கவர்வதாயின்) வேறோர் உயிர் இல்லை. உய்வான் உற (அவனிடமிருந்து) தப்பிப் பிழைக்க நான் முயலுகிறபோது, இப் பழி பூண என்னோடு உனக்கு பகை உண்டு ஓ - இந்தப் பெண் கொலையாகிய பெரும்பழியை ஏற்பதற்கு உனக்கு என்னிடம் ஏதாவது விரோதம் உண்டா?

விசேட உரை:

வாடை - காற்று; தென்றல். முன்னடிகள் இரண்டும் உருவக அணி. எய்வான் ஒருவன் என்றது மலர்க் கணைகளை எய்யுந் தொழிலையுடைய ஒருவனுகிய மதனனை; உய்வான் உற – உய்தல் சம்பவிக்க.

இருளை நோக்கிப் புலம்பல்

67. ஆல முலகிற் பரந்ததுவோ
வாழி கிளர்ந்த தோவர்த்தம்
நீல நிறத்தை யெல்லோரு
நினைக்க வதுவாய் நிரம்பியதோ
கால னிறத்தை யஞ்சனத்திற்
கலந்து குழைத்துக் காயத்தின்
மேலு நிலத்து மெழுகியதோ
வினைக்கு மிருளாய் வினைந்ததுவே.

பொழிப்புரை:

(என்னைப் போன்றவருக்கு வேதனையை) உண்டாக்கும் இருளாய் விளைந்தது, ஆலகால விடம் உலகில் பரந்ததுதானே? சமுத்திரம் பொங்கிவந்ததோ? (என் கண்களுக்கு விருந்தாக்ய) நம்பியின் நீல வண்ணத்தை எல்லோரும் நினைக்க அந்நிறமேயாகி எங்கும் நிரம்பியதோ? யமனது நிறத்தை மையிற் கலந்து ஆகாயம் பூமி இரண்டிடத்தும் பூசியதுதானே?

பதவுரை:

விளைக்கும் இருளாய் விளைந்தது - (என்போன்றவர்க்கு வேதனையை) உண்டாக்கும் இருளுருவாய் விளைவெய்தியுள்ளது, ஆலம் உலகில் பரந்தது ஓ - ஆலகால விடம் உலகுமுற்றும் பரந்ததுதானே? ஆழி கிளர்ந்தது ஓ – கரிய சமுத்திரம் பொங்கியதுதானே? அவர்தம் நீல நிறத்தை எல்லோரும் நினைக்க அது ஆய் நிரம்பியது ஓ - (என் கண்களுக்கு விருந்தாகிய) நம்பியின் நீல வண்ணத்தை எல்லோரும் சிந்திக்க அந்நிறமேயாகி எங்கும் நிரம்பியதோ? காலன் நிறத்தை அஞ்சனத்தில் கலந்து குழைத்து - யமனது கரிய நிறத்தை மையோடு கலந்து குழைத்து, காயத்தின் மேலும் நிலத்து உம் மெழுகியதோ – ஆகாயத்தினிடத்தும் பூமியின்மீதும் பூசியதுதானே?

விசேட உரை:

காயம் – ஆகாயம். இருள், அச்சம், காமநோய் இரண்டையும் ஒருசேரத் தருவதாக அமைந்திருந்தது என்பதை உணர்த்தவே ஆலம் முதலியவற்றின் நிறங்களைக் கூறினரென்க. இருளை இங்ஙனம் விகற்பித்துச் சொல்லப்படுவது தற்குறிப்பேற்றம்.

அன்றிலை நோக்கி இரங்கியது

68. வெளிநின் றவரோ போய்மறைந்தார்
விலக்க வொருவர் தமைக்காணேன்
எளியன் பெண்ணென் றிரங்காதே
யெல்லி யாமத் திருளுடே
ஒளியம் பெய்யு மன்மதனு
முனக்கிம் மாய முரைத்தாரோ
அளியென் செய்த தீவினையோ
யன்றி லாகி வந்தாயோ

பொழிப்புரை:

(என் கண்முனே) வெளிப்பட்டு நின்றவராய நம்பியோ சென்று மறைந்துவிட்டார்; போகாமல் தடுத்து நிறுத்தவல்லார் எவரையும் கண்

டிலேன்; எளிமையுடையள் என்று கருதாமல் இரவின் இருளிலே மறைந்து நின்று அம்புகளை எய்கின்ற காமனுர், உனக்கு இந்த வஞ்சனைச் செயலைச் சொல்லிக் கொடுத்தாரோ? எளியேன் முன்செய்த பாவம்போலும் நீ அன்றில் உருக்கொண்டு வந்தனை?

பதவுரை:

வெளி நின்றவர் ஓ - (என் கண்முன்னே) வெளிப்பட்டு நின்றவராய நம்பியோ, போய் மறைந்தார் - (இப்போது) சென்று மறைந்து விட்டார், விலக்க ஒருவர் தமைகாணேன் - போகாமல் தடுத்து நிறுத்த ஒருவரையும் காணப்பெற்றிலேன். எளியள் பெண் என்று இரங்காது ஏ - கதியற்ற எளிமை யுடையள் ஒருத்தி எனக் கருணை கொள்ளாமலே, எல்லி யாமத்து இருளூடு - இராக்காலத்து இருளினூடாக, ஒளி அம்பு எய்யும் மன்மதனுர் - ஒளிந்து நின்று அம்புகளை (என்மீது) எய்யும் காமனுர், உனக்கு இ மாயம் உரைத்தார் ஓ - உனக்கு இந்த வஞ்சனையைச் சொல்லிக் கொடுத்தாரோ? அளியென் செய்த தீவினையோ - எளியேன் முன்பிறவியிற் செய்த கொடிய பாவமே போலும், அன்றில் ஆகி வந்தது ஓ - அன்றிலின் உருவு கொண்டு வந்தாய்.

விசேட உரை:

இரவில் துணையைப் பிரிந்து கூவும் அன்றிலின் தீனக் குரல் காதன் மகளிர்தம் காமநோயை மேலும் வளர்க்கும் என்பது கவி மரபு. சேடியரும் பிறரும் உற்ற நோயை உணராமலே கூடியிருந்தனர். ஒரோவழி அவர் உணரப்பெறினும் நம்பியைத் தடுத்து நிறுத்துந் தகையினரல்லர் என்பது கருதியே 'விலக்க வொருவர் தமைக்காணேன்' என்முளென்க. எளியன் - வலியற்ற தனிமையுடையேன். அளியன் - எளியேன்: யாமம் - பொழுது. ஒளி அம்பு - ஒளித்துநின்று எய்யும் அம்பு. ஒளி - ஒளித்து என்னும் வினையெச்ச விகாரம். மாயம் - வஞ்சனை.

தோழியர் உபசரித்தல்

69. ஆண்டங் கணையா ரினையநினைந்
தழுங்கு மேல்வை யகலிவானம்
தீண்ட நிமிர்ந்த பெருங்கோயிற்
சீத மணியின் வேதிகைவாய்
நீண்ட சோதி நெய்விளக்கம்
வெய்ய வென்றங் கவைநீக்கித்
தூண்டல் செய்யா மணிவிளக்கின்
கூடா லிரவைப் பகல்செய்தார்.

பொழிப்புரை:

அவ்விடத்தே சானகி இவை, இவைபோல்வன நினைந்து வருந்தும் போது. வானமுட்ட நிமிர்ந்த கன்னி மாடத்தில், சந்திரகாந்தக் கல்லா லிழைத்த மேடையிலே வெப்பந்தரும் நெய்விளக்குகளை நீக்கி, தூண்டாத மணிவிளக்குகளின் ஒளியால் இரவைப் பகலாகும்படி (தோழியர்) செய் தார்கள்.

பதவுரை:

ஆண்டு – அவ்விடத்தே, அனையாள் இனைய நினைந்து - (அன்றிற் பேட்டினை) ஒத்தவளாகிய சானகி இவையும் இவைபோல்வன பல வும் எண்ணி, அங்கு அழுங்கும் ஏல்வை - அவ்விடத்தே துன்புறும் போது, அகல் வானம் தீண்ட நிமிர்ந்த பெருங் கோயில் - அகன்ற வானுலகைத் தொடும்படி உயர்ந்த பெரிய கன்னி மாடத்து, சீதம் மணியின் வேதிகை வாய் - குளிர்ந்த சந்திரகாந்தக் கல்லினாற் செய்த மேடையிலே, நீண்ட சோதி நெய் விளக்கம் - மிகுந்த ஒளிதரும் நெய் விளக்குகள், வெய்ய என்று அங்கு அவை நீக்கி - வெப்பந்தரு வன என அவற்றை ஒழித்துவிட்டு, தூண்டல் செய்யா மணி விளக் கின் சுடரால் – தூண்டுதல் செய்தல் வேண்டாத இரத்தின தீபங் களின் ஒளியால், இரவை பகல் செய்தார் - இரவைப் பகலாமாறு ஒளியுண்டாகும்படி (தோழியர்) செய்தார்கள்.

விசேட உரை:

அனையாள் - அன்றிற்பேட்டினை ஒத்தவள். ஏல்வை - பொழுது. பெருங்கோயில் - அவளிருந்த கன்னிமாடம். அகல் வானம் - தன்னை யொழிந்த நான்கு பூதங்களும் விரிதற்கு இட மும் காரணமுமான வானம். சீதமணி - சந்திரகாந்தக் கல். வேதிகை – மேடை. இரவைப் பகல் செய்தல் - பேரொளி உண் டாக்குதல்.

சந்திரோதயம் 70—71

70. பெருந்திண் ணெடுமால் வரைநிறுவிப்
பிணித்த பாம்பின் மணித்தாம்பின்
விரிந்த திவலை பொதிந்தமணி
விசும்பின் மீனின் மேல்விளங்க
அருந்த வமரர் கலக்கியநாள்
அமுதம் நிறைந்த பொன்கலசம்
இருந்த திடைவந் தெழுந்ததென
வெழுந்த தாழி வெண்டிங்கள்.

பொழிப்புரை:

வலியோனாய் உலகினைக் கடந்து நீண்ட திருமால் மந்தரகிரியை நாட்டி வாசுகியாகிய பாம்புக் கடைகயிற்றால் தேவர்கள் உண்ணும்படி பாற்கடலைக் கடைந்தபோது பரவிய நீர்த்துளிகளும் இரத்தினங்களும் விண்மீன்களினும் ஒளிர்ந்து விளங்க அக்கடினமுதம் நிறைந்த அழகிய கலசம் எழுந்து தோன்றியதுபோலச் சந்திரன் சமுத்திரத்தினின்றும் உதித்தது.

பதவுரை:

பெரும் திண் நெடு மால் - மிக்க வலியோனாய் உலகினைக் கடந்து நீண்டு வளர்ந்த திருமால், வரை நிறுவி - மந்தரமலையை (மத்தாக) நாட்டி, பிணித்த பாம்பின் மணி தாம்பின் - கட்டப்பட்ட வாசுகி என்ற பாம்பாகிய அழகிய கடை கயிற்றால், அமரர் அருந்த கலக்கிய நாள் - தேவர்கள் உண்ணுவதற்காக (திருப்பாற்கடலை) கடைந்த அந்நாளில், விரிந்த திவலை - பரவிய பாலின் துளிகளும், உதிர்ந்த மணி - சிதறின இரத்தினங்களும், மீனின் மேல் விளங்க - விண்மீன்களினும் ஒளிர்ந்து விளங்க, இடை இருந்த அமுதும் நிறைந்த பொன் கலசம் வந்து எழுந்தது என - அப்பாற்கடலிடையே இருந்த அமுதம் நிறைந்த அழகிய கலசமானது மேலேழுந்து தோன்றியதென, வெண் திங்கள் ஆழி எழுந்தது - வெண்ணிறப் பூரண சந்திரன் சமுத்திரத்தின் நடு நின்று உதித்தது.

விசேட உரை:

பால்வடிய எழுந்த அழகிய அமுதகலசத்தை நிலாவைப் பரப்பி எழுந்த பூரண சந்திரனுக்கு உவமித்தது தற்குறிப் பேற்ற வணி. நிலா சமுத்திரத்தையும் பாற்கடலாக்கிய தென்க; பெருந்திண் நெடுமால், வரைக்கு அடையாகக் கொள்ளினுமமையும். பாம்பின் மணித்தாம்பு - வாசுகியின் சிரோரத்தினங்களால் ஒளிபெற்ற கடை கயிறு என்றுமாம். ஆழி வெண்டிங்கள் - வட்டவடிவமான பூரண சந்திரன் என்றுமாம்.

71. வண்டா யனனின் மறைபாட
மலர்ந்த தொருதா மரைப்போது
பண்டா லிலையின் மிசைக்கிடந்து
பாரு நீரும் பசித்தான்போல்
உண்டா னுந்திக் கடல்பூத்த
தோதக் கடலுந் தான்வேரோர்
வெண்டா மரையின் மலர்பூத்த
தொத்த தாழி வெண்டிங்கள்.

பொழிப்புரை:

(பிரளய காலக் கடல் நடுவே) ஆலிலை மேற் பள்ளிகொண்டு பசித்தான் போல உலகங்களையும் சமுத்திரங்களையும் உண்ட திருமாலின் நாபியாகிய கடல், பிரமன் வண்டென மேலிருந்து நான்மறைகளையும் பாட மலர்ந்ததாகிய ஒரு தாமரைப் பூவை மலர்வித்தது. அதனை நோக்கி அலைக் கடலும் தான் வேறொரு வெண்டாமரை மலரைப் பூத்ததை ஒத்திருந்தது, ஆழியிடத் தெழுந்த வெண்டிங்கள்.

பதவுரை:

பண்டு ஆல் இலையின் மிசை கிடந்து - (பிரளய காலக் கடல் நடுவே) முற்காலத்திலே ஆலிலை மேற் பள்ளிகொண்டு, பசித்தான் போல் பார் உம் நீர் உம் உண்டான் - பசித்தவன் போல உலகங்களையும் சமுத்திரங்களையும் உண்டவனுகிய திருமாலினது, உந்தி கடல் - நாபியாகிய கடலானது, அயன் வண்டு ஆய் நால் மறை பாட - பிரமன் வண்டே போல (மேலே வீற்றிருந்து) இருக்கு முதலிய நான்கு வேதங்களையும் பாடினனுக, மலர்ந்தது ஒரு தாமரை போது பூத்தது - மலர்ந்ததாகிய ஒரு தாமரைப் பூவை மலர்வித்தது. (அதனை நோக்கி) ஓதம் கடல் உம் - அலையாகிய பெருக்கினையுடைய கடலும், தான் வேறு ஓர் வெள் தாமரையின் மலர் பூத்தது ஒத்தது - தானும் வேறொரு வெண்டாமரை மலரை மலர்வித்ததை ஒத்திருந்தது, ஆழி வெண் திங்கள் - கடலிடத் தெழுந்த வெண்மையாகிய பூரணசந்திரன்.

விசேட உரை:

தாமரை நீரிற் பிறப்பதால் உந்தியைக் கடலென்றார். உந்திக் கடல் தாமரை பூத்தது கண்டு கடல் தானுமொரு வெண்டாமரை பூத்தது என ஆழியிற் சந்திரனெழுந்த தென்பது தற்குறிப்பேற்ற வணி. திருமாலின் உந்திக்கமலத்தின் பெருமையை விளக்க அயனை வண்டென்றும், திருமால் பசியில்லாதான் என்பதை உணர்த்த 'பசித்தான் போல்' என்றும் கூறினார்.

நிலா பரவுதல் 72 - 74

72. புள்ளிக் குறியிட் டெனவொண்மீன்
பூத்த வானம் பொலிகங்குல்
நள்ளிற் செறிந்த விருட்பிழம்பை
நக்கி நிமிர்ந்த நிலாக்கற்றை
கிள்ளைக் கிளவிக் கென்னுங்கொல்
கீழ்பாற் றிசையின் மிசைவைத்த
வெள்ளிக் கும்பத் தீளங்கமுகின்
பாளை போன்று விரிந்துளதால்.

பொழிப்புரை:

புள்ளிகளைக் குறிகளாக இட்டாற்போல விண்மீன்கள் பூத்த வானிடத்தே விளங்கும் நடுநிசியில், இருட்கற்றையை உண்டு வளர்ந்த நிலாவின் தொகுதி, கிழக்கே மேலே வைக்கப்பட்ட வெள்ளிக் கும்பத்தில் வைத்த இளங்கமுகின் பாளையை ஒத்திருந்தது. இது கிள்ளை மொழியினளாய சானகிக்கு எத்தகையதாகுமோ?

பதவுரை:

புள்ளி குறி இட்டு என - புள்ளிகளைக் குறிகளாக இட்டாற் போல, *ஒள் மீன் பூத்த வானம்* - ஒளிபொருந்திய விண்மீன்கள் மலர்ந்த வானத்திடத்தே, *பொலி கங்குல் நள்ளில்* - விளங்கும் இரவின் நடுப்பொழுதிலே, *செறிந்த இருள் பிழம்பை* - திரண்டு பரவிய இருளின் கூட்டத்தை, நக்கி நிமிரும் நிலாக் கற்றை - உண்டு வளர்ந்த நிலாவின் தொகுதியானது, *கீழ் பால் திசையின் மிசைவைத்த* - கிழக்குத் திசையில் மேலிடமாக வைத்த, *வெள்ளி கும்பத்து* - வெண்மையான தொரு பூரண கும்பத்தினிடத்தே *யுள்ள*, இளங்கமுகின் பாளை போன்று - இளங் கமுகமரத்தின் பாளையை யொத்து, விரிந்து *உளது* - பரவியிருந்தது. கிள்ளை கிளவிக்கு (இது) என் ஆம் கொல்? - கிள்ளையின் மொழியினளாய சானகிக்கு இது எத்தகையதாகுமோ?

விசேட உரை:

சந்திரனது நிலாக்கற்றை வெள்ளிக்கும்பத்து இளங்கமுகின் பாளை போன்றது என்பது தற்குறிப்பேற்ற வணி. நடுநிசியின் இருட்செறிவை விளக்க, புள்ளிக் குறியிட்டென மீன்பூத்த வானம் என்றும், துன்பமே விளைப்பன என்பார் 'என்னுங் கொல்'? என்றும் கூறினர் என்க. கிள்ளைக் கிளவி - உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

73. வண்ண மாலைக் கைபரப்பி
யுலகை வளைந்த விருளெலிலாம்
உண்ண வெண்ணிற் றண்மதியத்
துதயத் தெழுந்த நிலாக்கற்றை
விண்ணு மண்ணுந் திசையனைத்தும்
விழுங்கிக் கொண்ட விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணெய்ச் சடையன்றன்
புகழ்போ லெங்கும் பரந்துளதால்.

பொழிப்புரை:

நிறங்கள் கலந்த மாலையாகிய கைகளை விரித்து உலகை வளைந்த இருள் முழுவதையும் விழுங்க விரும்பிச் சந்திரோதயத்தின்போது எழுந்த நிலாவின் தொகுதியானது விண்ணையும் மண்ணையும் திசைகளையும் விழுங்கிய சடையப்ப வள்ளலின் புகழ்போல எங்கும் பரந்தது.

பதவுரை:

வண்ணம் மாலை கைபரப்பி - செம்மையிற் கலந்த கரிய நிறமுள்ள மாலைக்காலமாகிய கைகளை விரித்து நீட்டி, உலகை வளைந்த இருள் எல்லாம் - உலகினைச் சூழ்ந்த இருள் முழுவதையும், உண்ண எண்ணி - விழுங்கிவிட விரும்பி, தண் மதியத்து உதயத்து எழுந்த நிலாக் கற்றை - குளிர்ந்த பூரண சந்திரனது உதயத்தின்போது வெளியே புறப்பட்ட நிலாவின் தொகுதியானது, விண் உம் மண் உம் திசை அனைத்து உம் விழுங்கிக் கொண்ட - விண்ணுலகம், மண்ணுலகம் எல்லாத் திசைகளிலுமுள்ள மற்று உலகங்கள் முழுவதையும் விழுங்கி விட்ட, விரி நல் நீர் பண்ணை வெண்ணெய் சடையன்தன் - விரிந்த நல்ல நீர்வளமுள்ள சுழனிகளை யுடைய திருவெண்ணெய் நல்லூரில் வாழும் சடையப்ப வள்ளலின், புகழ்போல் எங்கும் பரந்து உளது - புகழினைப் போல எங்கும் நீக்கமறப் பரவியது.

விசேட உரை:

தம்மை யாதரித்த சடையப்ப வள்ளலின் புகழ்போல நிலாக் கற்றை நீக்கமற எங்கும் பரந்தது எனக் கவி தமது நன்றியறிதலைக் காட்டினரென்க. உவமையணி. வண்ண மாலை - செக்கர் வானத்தின் செம்மையிற் கலந்த இருள் வண்ணம் கொண்ட மாலை.

74. நீத்த மதனின் முளைத்தெழுந்த
நெடுவெண் டிங்க ளெனுந்தச்சன்
மீத்தன் கரங்க ளெவைபரப்பி
மிகுவெண் ணிலவாம் வெஞ்சுதையால்
காத்த கண்ணன் மணியுந்திக்
கமல நாளத் திடைப்பண்டு
பூத்த வண்டம் பழையதெனப்
புதுக்கு வானும் போன்றுளதால்.

பொழிப்புரை:

கடலின் வெள்ள நடுவே யுதித் தெழுந்த வெண்ணிறச் சந்திரனுகிய தச்சன், திருமாலின் உந்திக்கமலத்திடமாக முளைத் தெழுந்த நாளத்தில்

பண்டை நாளிற் றோன்றிய உலகமானது மிகப் பழையதாயிற்று என, தன்கதிர்க் கைகளைப் பரப்பி வெண்ணிலாவாகிய சாந்தினால் அதனைப் புதுப்பிப்பவனும் போன்று இருந்தது (பரந்த நிலாக்கற்றை)

பதவுரை:

நீத்தம் அதனில் முளைத்து எழுந்த - கடலின் வெள்ள நடுவே உதித்து மேலே எழுந்த, நெடு வெண் திங்கள் எனும் தச்சன் - மிக்க வெண்ணிறமுள்ள சந்திரனுகிய தச்சன், காத்த கண்ணன் மணி உந்தி கமலம் நாளத்திடை - காத்தலாகிய தொழிலைச் செய்கின்ற திருமாலினது அழகிய நாபியாகிய தாமரையின் நாளத்தினிடமாக, பண்டு முளைத்து எழுந்த - மிகப் பழங்காலத்தில் தோன்றிய, அண்டம் - உலகமாகிய வீடு, பழையது என்று - மிகப் பழமை ஏய்திற்று என்று, தன் கரங்கள் அவை மீ பரப்பி - தன் கதிர்களாகிய கைகளை மேலே பரவச் செய்து, மிகு வெள் நிலவு ஆம் வெள் சுதையால் - மிக்க வெண்மையாகிய வெண்ணிறச் சாந்தினால், புதுக்குவான் உம் போன்று உளது - புதுப்பித்தலைச் செய்வானும் போல இருந்தது (எங்கும் பரந்த நிலாக்கற்றை)

விசேட உரை:

வெண் சாந்து பூசிப் புதுப்பித்தல் தச்சன் தொழிலாயிற்று. எதிர்வரும் மங்கலகாரியங்களுக் கமைய உலகு புதுப்பிக்கப்பட்டது போலும். பழையதைச் தச்சன் வெண்சுதை கொண்டு புதுக்குவான் என நிலாக்கற்றை எங்கும் பரந்தது என்பது தற்குறிப் பேற்ற வணி. புதுக்குவான் - எதிர்கால வினையெச்சம். கரம் - கை; கிரணம். சிலேடை. கண்ணன் - திருமால். மற்றோரவதார நாமம்.

தாமரை குவிய ஆம்பல் மலர்தல்

75. விரைசெய் கமலப் பெரும்போது
விரும்பிப் புகுந்த திருவினெடும்
குரைசெய் வண்டின் குழாமிரியக்
கூம்பிச் சாம்பிக் குவிந்துளதால்
உரைசெய் திகிரி தனையுகுட்டி
யோருகோ லோச்சி யுலகாண்ட
அரச னெதுங்கத் தலைவெடுத்த
குறும்பு போன்ற தரக்காம்பல்.

பொழிப்புரை:

மணங்கமழும் தாமரைமலர் திருமகளோடு வண்டினமும் விட்டு நீங்கும்படி குவிந்து வாடி மூடிக்கொண்டது. ஆணையை எங்கும் சுழலவிட்டு

செங்கோலோச்சி உலகை ஆண்ட பேரரசன் ஒழிந்ததும் தலையெடுத்த குறுநில மன்னனேபோல ஆம்பல் மலர்ந்தது.

பதவுரை:

விரை செய் பெரு கமலம் போது - நறுமணத்தை வீசும் சிறந்த தாமரை மலரானது, விரும்பிப் புகுந்த திருவினொடு உம் - விரும்பி வந்து வீற்றிருக்கும் திருமகளுடனே, குரை செய் வண்டின் குழாம் இரிய - ஒலிசெய்யும் வண்டினமும் நீங்கிப் போகும்படி, கும்பி சாம்பி குவிந்துளது - குவிந்து வாட்டமடைந்து மூடிக்கொண்டது. அரக்கு ஆம்பல் - சேதாம்பல் மலரானது, உரை செய் திகிரிதனை உருட்டி ஒரு கோல் ஒச்சி - புகழப்படும் ஆணையாகிய சக்கரத்தை எங்கும் சுழலச் செய்து ஒப்பற்ற செங்கோலைச் செலுத்தி, அரசு ஆண்ட அரசன் ஒதுங்க - அரசனை நடாத்திவந்த பேரரசன் ஒழிந்த அளவில், தலை எடுத்த குறும்பு போன்றது - தலை தூக்கிய குறுநில மன்னனைப் போன்று மலர்ந்தது.

விசேட உரை:

சூரியன் அத்தமித்ததும் தாமரை குவிதலும் ஆம்பல் மலர்தலும் இயல்பு. தாமரையாகிய பேரரசன் ஒதுங்க, சேதாம்பலாகிய குறும்பு தலையெடுத்த தென்க. குறும்பு - சிறுமை. ஈண்டு அஃது ஆணை முதலியவற்றுற் சிறுமையையுடைய மன்னன் மேனின்றது.

சந்திரனைப் பழித்தல் 76—77

76. நீங்கா மாயை யவர்தமக்கு
நிறமே தோற்றுப் புறமேபோய்
ஏங்காக் கிடக்கு மெறிகடற்கு
மெனக்குங் கொடியை யானுயே
ஓங்கா நின்ற விருளாய்வந்
துலகை விழுங்கி மேன்மேலும்
வீங்கா நின்ற கருநெருப்பி
னிடையே யெழுந்த வெண்ணெருப்பே.

பொழிப்புரை:

வளரும் இருள் என வந்து உலகை விழுங்கி மேன்மேலும் வளரும் கரிய நெருப்பினிடையே தோன்றும் வெண்ணெருப்பே, ஒழிவின்றி மாயையைச் செய்துவரும் அந்த நமபிக்கு நிறத்தால் தோற்றுப் புறமே போய் ஏங்கும் கடலுக்கும் எனக்கும் கொடுந்தனமை உடையை ஆயினையே.

பதவுரை:

ஓங்கா நின்ற இருள் ஆய் வந்து - வளர்கின்ற இருளின் வடிவ மாய் வந்து, உலகை விழுங்கி மேல் மேல் உம் வீங்காநின்ற - உலகு முழுவதையும் விழுங்கியதெனப் பற்றி மூடி மேலும் மேலும் விருத்தி யடைகிற, கரு நெருப்பின் இடையே எழுந்த வெள் நெருப்பே - கருநிற நெருப்பினிடையிலே தோன்றிய வெண்ணிற முள்ளதொரு நெருப்பே, நீங்கா மாண்ய அவர் தமக்கு - நீங்காத மாயையைச் செய்துவரும் அந்த நம்பிக்கு, நிறம் ஏ தோற்று புறம் ஏ போய் - நிறத்தினுல் தோல்வியெய்திப் புறத்தே சென்று, ஏங்காக் கிடக்கும் - ஏங்கிக் கிடக்கின்ற, எறிகடற்கு உம் - அலைவீசும் கடலுக்கும், எனக்கு உம் - வேதனைப்படுகிற எனக்கும், கொடியை ஆனுய் ஏ - கொடு மையை உடையை ஆயினையே!

விசேட உரை:

விரகவேதனையை மேலும் வளர்த்து வெதும்பச் செய்யும் இருளையும் நிலாவைத்தரும் சந்திரனையும் சானகி கருநெருப்பு வெண்ணெருப்பு என்றும், சந்திரன் விரகவேதனையையும் கடலை யும் பொங்கச் செய்வதால் 'கடலுக்கும் எனக்கும் கொடியை ஆனுய்' என்றும், எதிர் நின்றபோதும் மறைந்தபின்னும் தன்னை வருத்துவதால் 'நீங்கா மாயை யவர்' என்றும் கூறினுளென்க; 'அவர்' என்றது, இத்தனை வேதனைக்கும் மூலகாரணனுகிய, முனியொடுந் தம்பியொடும் வந்து காண நின்று மறைந்த நம் பியை.

வேறு

77. கொடியை யல்லீ யாரையுங் கொல்கிலாய்
வடுவி லின்னமு தத்தொடும் வந்தனை
பிடியின் மென்னடைப் பெண்ணெனென் ருலெனைச்
சுடுதி யோகடற் ருேன்றிய தீங்களே.

பொழிப்புரை:

கடலிற் ருேன்றிய சந்திரனே, நீ கொடியவனில்லை; எவரையும் கொல்பவனு மில்லை; இனிய அமுதோடும் பிடி நடையினளான திருமக ளோடும் பிறந்தவன்; எனில் என்னைச் சுடுதல் உனக்குத் தக்கதோ?

பதவுரை:

கடல் தோன்றிய திங்களே - குளிர்ந்த கடலிடத்துத் தோன் றிய சந்திரனே, நீ கொடியை அல்லை - நீ கொடுமை உடையவ னில்லை, யாரையும் கொல்கிலாய் - உலகில் எவரையும் கொன்றவனு

மில்லை: வடு இல் இன் அமுதத்தொடு உம், பிடியின் மெல் நடை பெண்ணொடு (உம்) வந்தனை - குற்றமற்ற இனிய அமுதத்தோடும் பெண் யானையின் மெல்லிய நடையை உடையாளாகிய திருமகளோடும் உடன் பிறந்தாய், என்றுல் எனை சுடுதியோ? - என்பனை உண்மையாயின் என்னைச் சுடுதல் உனக்குத் தக்கதோ?

விசேட உரை:

சந்திரனே, நீ தோற்றிய இடமோ தண்கடல், கொடியையல்லை; கொன்றிலை; அமுதொடும் பெண்ணொடுந் தோன்றினை எனின் என்னைச்சுடுதல் எவ்வாறு உனக்குத் தகும்? ஆயின் சுடுகின்றனையே. எனவே மேற் சொன்னவை பொய்யே போலும் என்றவாறு.

காம வேதனை 78—81

78. மீது மொய்த்தெழு வெண்ணில வின்கதிர்
மோது மத்திகை மென்முலை மேற்பட
வோதி மப்பெடை வெங்கன லுற்றெனப்
போது மொய்த்தம ளிப்புரண் டாளரோ.

பொழிப்புரை:

நிலாக் கதிர்களாய சம்மட்டி தன் தனங்களிற் பட, பெண்ணன்னம் போல்வாளாய சானகி வெய்ய நெருப்பிடைப் புகுந்தாள் போல மலர்ப் படுக்கையில் விழுந்து புரண்டாள்.

பதவுரை:

மீது மொய்த்து எழு வெண் நிலவின் கதிர் - ஆகாயத்தின் மேலிருந்து நெருங்கி எழுகிற வெள்ளிய சந்திரனது கிரணங்களாகிய, மோது மத்திகை மெல் முலை மேல் பட - அடித்தற்கமைத்த சம்மட்டியினடி மென்மையான தனங்களின் மேலே படுதலும், ஓதிமப் பெடை - பெண்ணன்னம் போன்றவளாகிய சானகி, வெம் கனல் உற்று எனை - வெம்மை நிறைந்த பெரு நெருப்புள் புகுந்தவாறு போல, போது மொய்த்த அமளி புரண்டாள் - மலர்கள் நிறைந்த படுக்கையில் விழுந்து துடித்துப் புரண்டாள்.

விசேட உரை:

பெடையன்னம் வெங்கனல் வாய்ப்பட்டவாறு என்று உரைப்பினுமாம். மத்திகை - சம்மட்டி. மத்திகை .. பட - சம்மட்டியின் அடி பட;

79. நீக்க மின்றி நிமிர்ந்த நிலாக்கதிர்
தாக்க வெந்து தளர்ந்து சரிந்தனள்
சேக்கை யாகி யலர்ந்த செந்தாமரைப்
பூக்கள் பட்டதப் பூவையும் பட்டனள்.

பொழிப்புரை:

இடையிடின்றிப் பரந்த நிலாக்கதிர்கள் தாக்க, திருமகளுக்குத் தங்கு மிடமாகிய மலர்தலைப் பெற்ற செந்தாமரை மலர்கள் அடைந்த நிலையை (நிலாக்கதிர் தாக்க) அந்த நாகணவாய் போன்ற சானகியும் அடைந்தன ளாகி வெதும்பிச் சேக்கையிற் சரிந்தாள்.

பதவுரை:

நீக்கம் இன்றி – இடையீடின்றி, நிமிர்ந்த நிலாக்கதிர் தாக்க - பரவிய சந்திரகிரணம் மேலே மோதுவதால், சேக்கை ஆகி அலர்ந்த செம் தாமரைப் பூக்கள் பட்டது - முன்பும் அவள் தங்குமிடமாகி இன்றும் தங்குமிடமாகி மலர்தலைப் பெற்ற செந்தாமரை மலர்கள் அடைந்த நிலையை, அ பூவையும் பட்டனள் வெந்து தளர்ந்து சரிந் தாள் - அந்த நாகணவாய் போன்ற சானகியும் அடைந்தாளாகி வெதும்பிச் சோர்ந்து சாய்ந்தாள்.

விசேட உரை:

கதிர் தாக்க பூக்கள் பட்டது, பூவையும் பட்டனள், சரிந் தனள் எனமுடிக்க. திருமகளுக்குத் தங்குமிடம் ஆயதும் சான கிக்கு அமளி ஆயதும் செந்தாமரை மலரே யாதலால் சேக்கை யாகி எனப் பொதுப்படக் கூறினர். பூவை - நாகணவாய்ப் புள். மொழிக்கு உவமை.

80. வாச மென்கல வைக்களி வாரிமேல்
பூசப் பூசப் புலர்ந்து புழுங்கினள்
வீச வீச வெதும்பினள் மென்முலை
ஆசை நோய்க்கு மருந்துமுண் டாங்கொலோ.

பொழிப்புரை:

மிருதுவான தனங்களையுடைய சானகி, நறிய மென்மையான கல வைச்சாந்தின் குழம்பைத் தோழியர் அள்ளித் தன்மேற் பூசும் தோறும் வெந்து தவித்தாள். (ஆலவட்டம் விசிறி முதலியவற்றால்) வீசுந்தோறும் வெதும்பினாள். விரகம் தரும் வேதனைக்கு உலகில் மருந்தும் உண்டோ?

பதவுரை:

மெல் முலை - மென்மையான தனங்களையுடைய சானகி, வாசம் மெல் கலவை களி - நறுமணத்தன சேர்ந்த மென்மையான கலவைச் சாந்தின் குழம்பினை, வாரி மேல் பூச பூச - அள்ளி யள்ளி (தோழி யர்) தன்மேற் பூசுந்தோறும், புலர்ந்து புழுங்கினள் - காய்ந்து வெதும் பித் தவித்தாள். வீச வீச வெதும்பினள் - (விசிறி ஆலவட்டம் முதலி யன கொண்டு) வீசுந்தோறும் வெப்பமடைந்தாள். ஆசை நோய்க்கு மருந்து உம் உண்டு ஆம் கொல் ஓ - விரகந்தரும் வேதனையாகிய வாதைக்கு உலகில் மருந்தும் உண்டோ?

விசேட உரை:

மென்முலை, அன்மொழித் தொகை. ஆசைநோய் = விரகம், அது தரும் வேதனை வாதையாகும். வாதை - கொல்லாது வருத் தும் நோய். முன்மூன்றடிகளும் பிறிதாராய்ச்சியணியும் ஈற்றடி வேற்றுப் பொருள் வைப்பணியுமாம்.

81. தாய ரிற்பரி சேடியர் தாதுகு
வீய ரித்தளிர் மெல்லணை மேனியிற்
காயெ ரிக்கரி யக்கரி யக்கொணர்ந்
தாயி ரத்தி னிரட்டி யடுக்கினர்.

பொழிப்புரை:

சானகியின் மேனியிலே காய்கின்ற காம நெருப்பினால் தாது சிந் தும் மலர்களைக் கொண்டும், மென் தளிர்களைக் கொண்டும், அமைத்த மெல் லணைகள் கருகக் கருகத் தாயரிலும் பரிவுகொண்ட பாங்கியர் இரண்டா யிரத்துக்கு மதிகமான மெல்லணைகளை மாற்றி அமைத்தார்கள்.

பதவுரை:

மேனியில் (சானகியின்) திருமேனியிலே, காய் எரி - காய்கின்ற காம நெருப்பினால், தாது உகுவீ - மகரந்தம் சிந்தும் மலர்கள் கொண்டும், அரி தளிர் - மென் தளிர்கள் கொண்டும் (அமைக்கப் பட்ட), மெல் அணை - மென்மையான படுக்கைகள், கரிய கரிய - கரு கின கருகின (ஆயினபோது), தாயரின் பரி சேடியர் - தாயரிலும் மிக்க அன்புகொண்ட பாங்கியர், இரட்டி ஆயிரத்தின் கொணர்ந்து அடுக்கினர் - இரண்டாயிரத்தின் அதிக அணைகளைக் கொண்டுவந்து மாற்றி மாற்றி அமைத்தார்கள்.

விசேட உரை:

மிகப்பல என்பதை உணர்த்த 'ஆயிரத்தினிரட்டி' என்றார். தாயரின் பரிவு - வேண்டிச் சுமந்து பெற்று வளர்த்ததாலாய உரி

மையும் சேர்ந்த அன்பு. அரி தளிர் - செந்நிறமும், பொன்னிற மும் கொண்ட தளிருமாம்.

கவிக்கூற்று

82. கன்னி நன்னக ரிற்கமழ் சேக்கையுள்
அன்ன மின்னண மாயினள் ளாயவள்
மின்னின் மின்னிய மேனிகண் டானெனச்
சொன்ன வண்ணலுக் குற்றது சொல்லுவாம்.

பொழிப்புரை:

கன்னி நன் மாடத்தின்கண்ணே மணங்கமழும் மலர்ப் படுக்கைமீது அன்னப்பேடு போன்ற சானகி இவ்வாறு விரகவேதனை அடையலானாள். அவளது மின்னலினும் மின்னிய அழகைக் கண்டா னெனச் சொன்ன இராமபிரானுக்கு உற்றவைகளை இனிச் சொல்லத் தொடங்குவோம்.

பதவுரை:

கன்னி நல் நகரில் - கன்னி நன் மாடத்தின் கண்ணே, கமழ் சேக் கையுள் - நறுமணம் வீசுகின்ற மலர்ப் படுக்கையின் மீது, அன்னம் இன்னணம் ஆயினள் - அன்னப் பேடு போன்ற சானகி இவ்வாறு விரகவேதனையை அடையலானாள். ஆயவள் மின்னின் மின்னிய மேனி கண்டான் என - அவளது மின்னலினும் ஒளிசெய்த அழகைப் பார்த் தான் என்று, சொன்ன அண்ணலுக்கு - முன் சொல்லப்பட்ட பெரு மையிற் சிறந்தோனாகிய இராமபிரானுக்கு, உற்றது சொல்லுவாம் - எய்தியவைகளை இனிச் சொல்லத் தொடங்குவோம்.

விசேட உரை:

இது கவிக்கூற்று. நகர் - மண்டபம்; அது கன்னிமாடத்து மேல் மண்டபத்தை. மின், பேரொளிகூடிய அழகினது அன்றி, உணர்வுடையாரை இருளிடத்தே நெறியினுய்ப்பதும் மூடரை மயக்கினுய்ப்பதுமாம். பிராட்டியிடத்து உள்ளும் புறமும் நிறைந்து ஒளிரும் பேரழகும் அங்ஙனமே மேலோரை நெறி செய்து வீடுய்ப்பதும், கீழோரை மயக்கஞ் செய்து அளறுவாய்ப் படுத்துவதுமாதலின் மின்னின் மின்னிய மேனி என்ரு ரென்க. மேனி - அகத்தும் புறத்தும் நிறைந்தொளிரும் பேரழகு. மின் னலைப் போல் மின்னியதால் அத்திசைக்கண் அவள் திருமேனியை நோக்கினன் எனிலோ பிராட்டியிடத்து ஒளிர்ந்த தெய்வீகத்தை உணராத இழிநிலை சூழுமென்க.

மூவரும் சனகன் எதிர்கொளச் சென்று தங்குதல்

83. ஏகி மன்னனைக் கண்டெதிர் கொண்டவன்
ஓகை யோடு மினிதுகொண் டுய்த்திடப்
போக பூமியிற் பொன்னக ரன்னதோர்
மாக மாடத் தனையவர் வைகினர்.

பொழிப்புரை:

விசுவாமித்திரன் முதலிய மூவரும் சென்று சனகனைக் கண்டு, அவன் மகிழ்ந்து எதிரில் வந்து இனிது அழைத்துப் போய் போக பூமியின் அமராவதிப் பட்டணத்துப் பொன்மாடம் போன்ற வானம் முட்டிய மாளிகையிலே சேர்ப்பிக்க அங்கே தங்கினர்கள்.

பதவுரை:

அனையவர் – அவர்கள் (விசுவாமித்திரன் முதலிய மூவரும்), ஏகி - (அரண்மனையுள்) சென்று, மன்னனைக் கண்டு - சனகமகாராசனைப் பார்த்து, அவன் ஓகையோடு உம் எதிர் கொண்டு இனிது கொண்டு – அவன் மகிழ்ச்சியோடும் எதிரில் வந்து உபசரித்து இனிது அழைத்துக் கொண்டுபோய், போக பூமியில் பொன் நகர் அன்னது - போக பூமியாகிய தேவலோகத்தின் பொன் மாடத்தை ஒத்ததாகிய, ஓர் மாக மாடத்து உய்த்திட வைகினர் - ஒப்பற்ற வானை முட்டும் மாளிகையிலே சேர்ப்பிக்கத் தங்கினர்கள்.

விசேட உரை:

ஓகை - உவகை. உய்த்திடல் - சேர்ப்பித்தல். போகபூமி - நல்வினைப்பயனை நுகர அமைந்த தேவருலகம். பொன் நகர் - பொன் மாளிகை.

சதானந்தர் வருதல்

84. வைகு மவ்வழி மாதவம் யாவுமோர்
செய்கை கொண்டு நடந்தெனத் தீதறு
மொய்கொள் வீரன் முளரியந் தாளினன்
மெய்கொண் மங்கை யருண்முனி மேவினன்.

பொழிப்புரை:

அவர்கள் தங்கிய அந்த மாளிகையிடத்தே தவம் முழுவதும் ஒழுக்கமாகிய ஒருருக்கொண்டு நடந்துவந்ததென, இராமனது கழற்றுகள் கதுவச் சத்தியமாகிய ஞானவடிவினைப் பெற்ற அகலிகை பெற்ற சதானந்த முனிவன் வந்து சேர்ந்தான.

பதவுரை:

வைகும் அ உழி - அவர்கள் தங்கியிருந்த அந்த மாளிகை யிடத்தே, மாதவம் யா உம் ஓர் செய்கை கொண்டு நடந்தது என - சிறந்த பெருந்தவம் முழுவதும் ஒப்பற்ற ஒழுக்கத்தின் உருவம் கொண்டு நடந்து வந்தது என, தீது அறு மொய் கொள் வீரன் - குற்றமற்ற வலிமை கொண்ட வீரனை இராமபிரானது, முளரி அம் தாளினுல் - தாமரை மலர்போன்ற கழற்றுகள் கதுவ, மெய் கொள் மங்கை - சத்தியவடிவமான ஞானவடிவு கொண்ட அகலிகை, அருள் முனி மேவினுன் - பெற்று அருளிய சதானந்த முனிவன் வந்து சேர்ந்தான்.

விசேட உரை:

சதானந்தன் - கௌதமனுக்கும் அகலிகைக்கும் மகன்; சனக குலப் புரோகிதன். செய்கை - ஒழுக்கம். ஆகுபெயர். ''இராம பிரான் கழற்றுகள் கதுவ பண்டை வண்ணமாய்'' நின்றவள் அகலிகை. இதனையே தாளினுல் மெய்கொள் மங்கை எனக் கூறினு ரென்க. மாதவம் யாவுமோர் செய்கை கொண்டு நடந்தென முனி மேவினுன் என்பது இல்பொருளுவமையணி.

சதானந்த முனிவன் இராமபிரானை வாழ்த்திக் கௌசிக முனிவன் பக்கம் சார்தல்

85. வந்தெ திர்ந்த முனிவனை வள்ளலும்
சிந்தை யார வணங்கலுஞ் சென்றெதிர்
அந்த மில்குணத் தானெடி தாசிகள்
தந்து கோசிகன் றன்மருங் கெய்தினுன்.

பொழிப்புரை:

வந்து தோன்றிய சதானந்தமுனிவனை வள்ளலாகிய இராமபிரானும் மன நிறைவோடு வீழ்ந்து வணங்குதலும், மிக நற்குணத்தினையுடைய சதானந்த முனிவனும் ஆசிமொழிகளைக் கூறி, நடந்து எதிர்கொண்ட விசுவாமித்திரன் பக்கம் சார்ந்தான்.

பதவுரை:

வந்து எதிர்ந்த முனிவனை - வந்து தோன்றிய சதானந்த முனிவனை, வள்ளல் உம் சிந்தை ஆர வணங்கலும் - வரையாது கொடுக்கும் அருட்கடலாய இராமபிரானும் மனநிறைவு கூட வீழ்ந்து வணங்குதலும், அந்தம் இல் குணத்தான் நெடிது ஆசிகள் தந்து - எல்லை சொல்லரிய நற்குணங்களை யுடைய சதானந்த முனிவனும்

ஆசிகளை மிகுதியும் கூறி, சென்று எதிர் கோசிகன் தன் மருங்கு - நடந்து எதிர்கொண்ட விசுவாமித்திர முனிவனது பக்கம், எய்தினன் - சார்ந்தான்.

விசேட உரை:

முனி, இருமை வகை தெரிந்து ஈண்டறம் பூண்டவன். வள்ளல் - வேண்டுவார் வேண்டுவன அருளும் பெருங்கருணை உடையான். அந்தமில் குணம் என்றது உளத்தூய்மை முதலிய தெய்வ சம்பத்துக்களையுடைய எல்லை சொல்லரிய நற்குணத்தை.

சதானந்தன் கூறுதல்

86. கோத மன்றரு கோமுனி கோசிக
மாத வன்றலை மாமுக நோக்கியிப்
போது நீயிவட் போதவிப் பூதலம்
ஏது செய்த தவமென் றியம்பினன்.

பொழிப்புரை:

கௌதமன் பெற்ற சதானந்தன், பெருந் தவத்தினனான விசுவாமித்திரன் முகத்தைப் பார்த்து, தாங்கள் எழுந்தருள இந்த மிதிலை என்ன தவம் செய்ததோ என உபசார வார்த்தைகளைக் கூறினன்.

பதவுரை:

கோதமன் தரு கோமுனி - கௌதமமுனிவன் பெற்ற முனிசிரேட்டனாகிய சதானந்தன், மாதவன் கோசிகன்தன்னை மா முகம் நோக்கி - பெருந்தவத்தினனாகிய கௌசிகமுனிவனது பெருமை விளங்கும் முகத்தைப் பார்த்து, இபோது நீ இவண் போத - இப்போது தாங்கள் இவ்விடம் வரும்படி, இ பூதலம் செய்த தவம் ஏது - இந்த விதேக நாடு செய்த பெருந்தவம் யாதோ?, என்று இயம்பினன் - என்று கூறினன்.

விசேட உரை:

கோமுனி - முனிக்கரசு; முனிசிரேட்டன். மா முகம் - பெருமை விளங்கும் முகம். தவத்தின் அருமை பெருமைகளை நன்குணர்ந்தானாதலின் சதானந்தன் இங்ஙனம் கூறினனென்க.

விசுவாமித்திரன் கூறுதல்

87. பூந்தண் சேக்கைப் புனிதனை யேபொரு
வேய்ந்த கேண்மைச் சதானந்த னென்றுரை
வாய்ந்த மாதவன் மாமுக நோக்கினால்
தோய்ந்த சிந்தைக் கௌசிகன் சொல்லுவான்.

பொழிப்புரை:

குளிர்ந்த தாமரை மலர் ஆசனத்தவனும் பிரமனை ஒத்தவனும், கண் ணேட்டம் உடையவனும் சதானந்தன் எனப் புகழ் பெற்றவனுமாகிய தவ முனிவனது அழகிய முகத்தைப் பார்த்துச் சாத்திரங்களில் முழுகிய மனத் தினனை விசுவாமித்திரன் சொல்வானாயினன்.

பதவுரை:

தண் பூ சேக்கை புனிதனை ஏ பொருவு ஏய்ந்த - குளிர்ந்த தாமரை மலர் ஆசனத்தினனும் பரிசுத்தனும் ஆன பிரமனையே உவமையாகப் பொருந்திய, *கேண்மை சதானந்தன் என்று* உரைவாய்ந்த - கண் ணேட்ட முடையவனும் சதானந்தன் என்று புகழ் பெற்றவனுமா கிய, *மாதவன் மா முகம் நோக்கி* - பெருந்தவத்தினனை முனிவனது அழகிய முகத்தைப் பார்த்து, *நூல் தோய்ந்த சிந்தையன் கௌசி கன் சொல்லுவான்* – சாத்திரங்களில் முழுகிய மனத்தையுடைய னாகிய விசுவாமித்திர முனிவன் சொல்வானாயினன்.

விசேட உரை:

சேக்கை புனிதன் - சேக்கையை இருக்கையாகக் கொண்ட புனிதன். *கேண்மை* - கண்ணேட்டம்; நட்புமாம். கண்ணேட் டம் - கடாட்சம். *சதானந்தன்* - நித்தியானந்தன். ஆனந்தம் - பேரின்பம். *நூல் தோய்ந்த சிந்தை* - சகல சாத்திரங்களிலும் முழுகி நெறிப்பட்ட சிந்தை.

இராமனது பெருமை கூறுதல்

88. வடித்த மாதவ கேட்டியீவ் வள்ளலுன்
இடித்த வெங்குரற் ருடகை யாக்கையும்
அடுத்தென் வேள்வியு நின்னன்னை சாபமும்
முடித்தென் நெஞ்சத் திடர்முடித் தானென்ருன்.

பொழிப்புரை:

தெளிவு செய்த பெருந்தவத்தோனே, கேட்பாயாக! இந்த வள்ளலா கிய இராமபிரானே இடியின குரலினளான தாடகையின் உடலையும், எனது யாகத்தையும், நின்தாயான அகலிகையின் சாபத்தையும் முற்று றச் செய்து என் நெஞ்சிற் கிடந்த துயரங்களையும் தீர்த்து வைத்தவன ஆவான் என்ருன்.

பதவுரை:

வடித்த மா தவ கேட்டி - தெளிவு செய்த பெருந்தவத்தோனே! கேட்பாயாக!. *இ வள்ளல் தான்* - இந்த வரையாத பேரருளினனை

இராமபிரானே, இடித்த வெம் குரல் தாடகை யாக்கை உம் - இடியை யொத்த பயங்கரத் தொனியை உடைய தாடகை என்ற அரக்கியின் உடம்பையும், என் வேள்வி உம் - எனது யாகத்தையும், நின் அன்னை சாபம் உம் - உனது தாயாகிய அகலிகையின் சாபத்தையும், முடித்து - முற்றுறச் செய்து. என் நெஞ்சத்து இடர் முடித்தான் - என் மனத்தினது துயரை ஒழித்தவன், என்றான் - என்று சொன்னான்.

விசேட உரை:

வடித்த மாதவன் – தானே சோதித்துக் குற்றங் களைந்து தெளிவு செய்த மாதவத்தினன். இடித்த வெங்குரல் – ''வானோர் இடங்களும், நெடுந்திசையும் ஏழுலகும் எங்கும் அடங்கலும் நடுங்க உரும் அஞ்ச'' எழுப்புங்குரல். சாபம் - தவத்தோர் வெகுண்டு சொல்லுஞ் சொல். என் நெஞ்சத்து இடர் – அறத்தை வேரொடுங் கல்லியே அழிக்கும் 'பாவந் தோன்றிய காலத்துத் தோன்றிய பழையோ'ராகிய அரக்கரை நாசஞ் செய்ய வேண்டுமே என்ற இடர். முடித்தல், கொன்றொழித்தல், முற்றுவித்தல், நீங்கச் செய்தல் என வேறு வேறு பொருள் தர நின்றது. நெஞ்சத்து இடர் முடித்தல், தாடகையில் ஆரம்பமாகி வேள்வியில் தொடர்வதாயிற்று. இன்னும் 'பெரியகாரியம் உள' என்றனெனினும் அகலிகை சாபவிமோசனம் கண்டதும் நிச்சயம் நோக்கி 'முடித்தான்' என எதிர்காலத்தை இறந்தகாலத்திற் கூறினன் என்க.

சதானந்த முனிவன் கோசிகனைப் பாராட்டுதல்

89. என்று கோசிகன் கூறிட வீறிலா
வன்ற போதனன் மாதவ நின்னருள்
இன்று தானுள தேலரி தியாதிந்த
வென்றி வீரர்க் கெனவும் விளம்பினான்,

பொழிப்புரை:

இவ்வாறு விசுவாமித்திரன் சொல்ல, ஏல்லையற்ற தவத்தினனான சதானந்தன், மாதவனே, நினது கருணை இவர்களுக்கு உளதானால் இந்த வெற்றி வீரர்களுக்குச் செய்யமுடியாதது யாதுளது என்று கூறி மேலும்'

பதவுரை:

என்று கோசிகன் கூறிட - இவ்வாறு விசுவாமித்திரன் சொல்ல, ஈறு இலா வல் தபோதனன் - எல்லையற்ற உறுதியான தவச் செல்வத்தை உடையவனான சதானந்த முனிவன், மாதவ - பெருமை பொருந்திய தவமுடையவனே, நின் அருள் இன்று உளது ஏல் – உனது கருணை இப்பொழுது (இவர்களுக்கு) உளது ஆனால், வென்றி

வீரர்க்கு அரிது யாது - வெற்றியை யுடைய வீரராக இவர்களுக்குச் செய்தற்கரியது என்ன இருக்கிறது?, என உம் விளம்பி - என்றும் சொல்லி, மேல் - பின்பும்.

விசேட உரை:

தபோதனன் - தவத்தையே தனமாக மதித்து வாழ்பவன். இது குளகம்.

இராமபிரானை நோக்கி விசுவாமித்திரன் வரலாறு கூறுதல்

90. எள்ளில் பூவையு மிந்திர நீலமும்
அள்ளல் வேலையு மம்புத சாலமும்
விள்ளும் வீயுடைப் பானலு மேவுமெய்
வள்ள றன்னை மதிமுகம் நோக்கியே,

பொழிப்புரை:

பழிப்பற்ற காயாமலரையும், இந்திர நீலத்தையும், கடலையும், மேகக் கூட்டத்தையும், மலரும் மலர்களையுடைய நீலோற்பலத்தையும் பொருந்துகிற திருமேனியை யுடைய இராமபிரானை, பூரண சந்திரன் போன்ற முகத்தைப் பார்த்து,

பதவுரை:

எள் இல் பூவை உம் - பழிப்பற்ற சிறப்பினையுடைய காயா மலரையும், இந்திர நீலம் உம் - இந்திர நீல இரத்தினத்தையும், அள்ளல் வேலையும் - சேறுள்ள கடலையும், அம்புத சாலம் உம் - மேகக் கூட்டத்தையும், விள்ளும் வீ உடை பானலும் - மலரும் மலர்களை யுடைய நீலோற்பலத்தையும், மேவும் மெய் வள்ளல் தன்னை - பொருந்தும் வள்ளலாகிய இராமபிரானை, மதி முகம் நோக்கி - பூரண சந்திரனை ஒத்த திருமுகத்தைப் பார்த்து,

விசேட உரை:

எள்ளில் பூ என்றது காயாம்பூவை. அள்ளல் - சேறு. அம்புதம் - மேகம்; முகில். சாலம் - கூட்டம். இதுவும் குளகம்.

இனி 46 கவிகள் விசுவாமித்திரன் வரலாறு.

அரசாளுதல்

91. நறும லர்த்தொடை நாயக னானுலக்
கறிவு றுத்துவென் கேளிவ் வருந்தவன்
இறைபெ னப்புவிக் கீறில்பல் லாண்டெலாம்
முறையி னிற்புரந் தேயருண் மூற்றினன்.

பொழிப்புரை:

மணமலர் மாலையணிந்த தலைவனே! யான் உனக்கு ஒன்று தெரிவிக்கிறேன் கேட்பாயாக! இந்தத் தவமுனிவன், உலகிற்கு அரசனுகி எல்லையற்ற பல ஆண்டுகள் அரச நீதிப்படி பாதுகாத்து உயிர்களிடம் கருணை நிரம்பியவனுகி யிருந்தான.

பதவுரை:

நறு மலர் தொடை நாயக - வாசனை பொருந்திய மலர்மாலை யணிந்த தலைவனே, நான் உனக்கு அறிவுறுத்து வென் கேள் - நான் உனக்கு (ஒன்று) தெரிவிப்பேன் கேட்பாயாக!, இ அருந்தவன் - இந்த, யாராலும் செய்தற்கரிய தவத்தினனுகிய கௌசிகமுனிவன், புவிக்கு இறை என - பூமிக்கு ஓர் அரசனுகி, ஈறு இல் பல் ஆண்டு எலாம் - எல்லையற்ற பல வருட காலமளவும், முறையினில் புரந்து - நீதி முறை தவறுது காத்து, அருள் முற்றினன் - (உயிர்கள் மாட்டுக்) கருணை நிரம்பியவனுகி யிருந்தான்.

விசேட உரை:

குருவின் பெருமையைச் சிடன் உணரவேண்டியது இன்றியமையாமையால் சதானந்தன் கௌசிகன் வரலாற்றைக் கூறினனென்க. ஈறில் பல்லாண்டென்றது நீண்ட பலவாகிய வருடங்களே. முறை - நீதியொழுங்கு.

விசுவாமித்திரன் வசிட்டனுச்சிரமத்தை அடைதல்

92. அரசின் வைகி யறனி னமைந்துழி
விரசு கானிடைச் சென்றனன் வேட்டைமேல்
உரைசெய் மாதவத் தோங்கு வசிட்டனும்
பரசு வானவன் பாலணைந் தானரோ.

பொழிப்புரை:

அரசாட்சியில் மனம் பதிந்திருந்து தரும நெறியிலே பொருந்தி ஆண்டுவரு நாளிலே, வேட்டை நிமித்தம் காட்டினிடையே சென்று, புகழ் பெற்ற பெருந் தவத்தா லுயர்ந்து விளங்தும் துதிக்கப்படுந் தேவவிருடியிடத்து வந்து சேர்ந்தான்.

பதவுரை:

அரசின் வைகி - அரசாட்சியிலே மனம் பதிந்திருந்து, அறனின் அமைந்த உழி - தரும நெறிப்படி இருந்த பொழுது, (ஒருசமயம்) வேட்டை மேல் - வேட்டை நிமித்தம், விரசு கானிடை சென்றனன் -

நெருங்கிய காட்டினிடத்தே சென்றானாய், உரை செய் மாதவத்து ஓங்கு வசிட்டன் ஆம் பரசு வானவன் பால் - சிறப்பித்து உரைக்கப் படுகின்ற பெருமை பொருந்திய தவத்தில் உயர்ந்து விளங்கும் வசிட்ட னாகிய, (யாவராலும்) துதிக்கப்படுகின்ற தேவவிருடியிடத்து, அணைந் தான் - சேர்ந்தான்.

விசேட உரை:

அரசின் வைகுதல் - அரசாட்சியே யன்றி மற்றெதனினும் சிறிதளவேனும் மனம் புகாதபடி மூழ்கியிருத்தல். பரசுதல் - துதித்தல். பரசுவான் அவன்பால் எனப் பிரித்துப் பொருள் கொள்ளலுமாம்.

வசிட்டனுணையால் காமதேனு விருந்தளித்தல்

93. அருந்ததீ கணவன் வேந்தற் கருங்கடன் முறையி னாற்றி
இருந்தரு டருதி யென்ன விருந்துழி யினிது நீற்கு
விருந்தினி யமைப்பெ னென்னச் சுரபியை விளித்து நீயே
சுரந்தரு ளமிர்த மென்ன வருண்முறை சுரந்த தன்றே.

பொழிப்புரை:

வசிட்டனை அணைந்த காதிமைந்தன், அரசற்கு அமைந்த முறையில் வழுவாது அரிய வழிபாடுகளைச் செய்து அருள் தருக என வேண்டி இருந்தபோது, இனி நினக்கு இனிதாய விருந்தினைத் தந்து உபசரிப்பேன் என்று கூறித் தன்னுடன் இருந்த சுரபியை விளித்து நீயே அமுதமான உணவைச் சுரந்தளிப்பாயாக என்று நியமிக்க (அத்தெய்வப் பசு) அப் போதே அங்ஙனமே சுரந்தது.

பதவுரை:

(வசிட்டனை அணைந்த காதிமைந்தனாகிய கௌசிகன்) வேந்தற்கு முறையின் அரும் கடன் ஆற்றி - அரசற்கு அமைந்த முறையில் அரிய வழிபாடுகளைச் செய்து முடித்து, இருந்து அருள் தருதி என்ன இருந் துழி - திருவருள் செய்க என வேண்டி இருந்தவிடத்து, அருந்ததி கண வன் - அருந்ததியின் கணவனாகிய வசிட்டன், இனி நிற்கு விருந்து இனிது அமைப்பென் என்ன - இனி உனக்கு விருந்தினை இனிதாமாறு செய் விப்பேன் என்று கூறி, இருந்த சுரபியை விளித்து - தானாகவே வந்து தன்னுடன் வசித்திருந்த காமதேனுவை அழைத்து, நீ ஏ அமிர்தம் சுரந்து அருள் என்ன - நீயே அமுதத்துக் கொப்பான உணவினை மிகக் கொடுப்பாயாக என்று கூற, அன்றே அருள் முறை சுரந் தது - அப்பொழுதே முனிவன் அருளிய முறைப்படி மிகுதியாக அது கொடுத்தது.

விசேட உரை:

அருந்ததி கணவன் - வசிட்டமுனிவன். அருந்ததி - கற்பிற் சிறந்தவள். கௌசிகன், 'முறையின் கடனுற்றி அருள் தருதி என இருந்துழி, கணவன், சுரபியை விளித்து சுரந்தருளென்ன சுரந்தது' என முடிக்க. வசிட்டனே, வேந்தனுய கௌசிகனுக்கு அருங்கடன் முறையினுற்றி இருந்தருள் தருதி யென வேண்டினன் எனிலோ அது தேவ இருடியாகிய வசிட்ட முனிவனின் பெருமைக்கு இழுக்காதலி உணர்க. விருந்து - புதிதாக வந்தோருக்கு உபசரித்துக் கொடுக்கும் உணவு: சுரத்தல் - மிகக் கொடுத்தல். பாற்கடலிற் ரோன்றிய பொருள்களுள் காமதேனுவும் ஒன்று. அது தானுகவே வசிட்டனிடம் வந்தது.

சுரபியின் விருந்தைக் கௌசிகன் சேனையோடும் பெறுதல்

94. அறுசுவைத் தாய வுண்டி யரசநின் னளிகத் தோடும்
பெறுகென வளித்து வேந்தோ டியாவரும் துய்த்த பின்னர்
நறுமலர்த் தாரும் வாசக் கலவையும் நல்க லோடும்
உறுதுயர் தணிந்து மன்ன னுய்த்துணர்ந் துரைக்க லுற்ருன்.

பொழிப்புரை:

அரசனே, அறுசுவையோடு கூடிய உணவினை நின் சேனைகளுடனே பெற்று உண்பாயாக என்று சொல்லிக் கொடுத்து, கௌசிகனும் படையினரும் உண்டபின்பு நறுமண மலர்மாலைகளையும், வாசனையுடைய கலவைச் சந்தனத்தையும் கொடுத்தலோடும், கௌசிகன் சிரமந்தீர்ந்து நன்கு ஆலோசித்து (வசிட்டனை நோக்கி) சொல்லத் தொடங்கினன்.

பதவுரை:

அரச! அறு சுவைத்து ஆய உண்டி - அரசனே, அறுவகைச் சுவைகளோடும் கூடிய இந்த உணவினை, நின் அளிகத்தோடு உம் பெறுக - உனது சேனையிலுள்ளவர்களோடும் பெற்று உண்பாயாக, என அளித்து - என்று கூறிக் கொடுத்து, வேந்தோடு யாவர் உம் துய்த்த பின்னர் - வேந்தனுகிய கௌசிகனோடு எல்லோரும் உண்டபின்பு, நறுமலர் தார் உம் வாசம் கலவையும் நல்கலோடு உம் - நறுமணங் கமழும் மலர்களாலான மாலைகளையும், வாசனை பொருந்திய கலவைச் சந்தனத்தையும், கொடுத்து உதவின அளவிலே, மன்னன் - காதி ஸமந்தனுகிய கௌசிகன், உறு துயர் தணிந்து - மிக்கிருந்த சிரமங்கள் தீரப்பெற்று, உய்த்து உணர்ந்து உரைக்கல் உற்ருன் - நன்கு ஆலோசித்துச் சொல்லத் தொடங்கினன்.

விசேட உரை:

சுரபிதர, வசிட்டன் நல்கலோடும், துயர் தணிந்து உய்த் துணர்ந்து உரைக்கலுற்றான் எனினும், சுரபி நல்கலோடும் தணிந்து உரைக்கலுற்றான் எனினும் அமையும்.

கௌசிகன் சுரபியைத் தருக என வசிட்டன் கூறுதல் 95 — 96

95. மாதவ வெழுந்தீ லாய்நீ வயப்பெரும் படைகட் கெல்லாம்
கோதறு மிர்தம் மிக்கோ வுதவிய கொள்கை தன்னால்
தீதறு குணத்தான் மிக்க செழுமறை தெரிந்த நூலோர்
மேதகு பொருள்கள் யாவும் வேந்தருக் கென்கை தன்னால்.

பொழிப்புரை:

பெருந்தவத்தோய்! நீ ஆசனத்தைவிட் டெழுந்தாயுமல்லை. இப் பசு வானது குற்றமற்ற உணவுகளைப் பெரிய சேனைக்கும் கொடுத்துதவிய சிறப்புடைமையாலும், குற்றமற்ற குணங்களாலுயர்ந்த வேதங்களை யுணர்ந்த மேலோர் மேன்மையுடைய பொருள்கள் அரசர்க்கே உரியன என்று சொல்வதாலும்.

பதவுரை:

மாதவ - பெருந் தவத்தையுடையோய்! நீ எழுந்திலாய் — நீ எழுந்திருந்தாயுமில்லை. இ கோ கோது அறும் அமிர்தம் - இந்தத் தெய்வப் பசுவானது குற்றமற்ற நல்லுணவினை, வயம் பெரும் படை கட்கு எல்லாம் உதவிய கொள்கை தன்னால் - வெற்றியையுடைய பக்க இடமெல்லாம் பரந்த சேனைக்கெல்லாம் உதவிய சிறந்த இயல் புடைமையாலும், தீது அறு குணத்தால் மிக்க செழுமறை தெரிந்த நூலோர் - குற்றம் நீங்கிய சிறந்த குணங்களால் உயர்ந்த மாட்சிமை யுடைய வேதங்களின் உண்மைப் பொருளை அறிந்த மேலோர்கள், மேதகு பொருள்கள் யா உம் வேந்தருக்கு என்கை தன்னால் - மேன்மை பொருந்திய எல்லாப் பொருள்களுமே அரசருக்கு உரியன வென்று சொல்லுவதினாலும்,

விசேட உரை:

இது முதல் மூன்று கவிகள் குளகம். அமிர்தம் - சுவையுள்ள உணவு. கொள்கை - செய்கை. செழுமை - மாட்சிமை. தெரி தல் - உண்மைப் பொருளை உணர்தல்.

96. நிற்கிது தருவ தன்று னீடருஞ் சுரபி தன்னை
எற்கரு ளென்ற லோடு மியம்பலன் யாதும் பின்னர்
வற்கலை யுடையென் யானே வழங்கலென் வருவ தாகில்
கொற்கொள்வே லுழவ நீயே கொண்டகல் கென்று கூற,

பொழிப்புரை:

உனக்கு இப்பசு தகுதி உடையது அன்று, ஒளிதரும் இந்தக் காம தேனுவை எனக்குக் கொடுத்தருள்வாயாக எனக் கூறிய அளவில் வசிட்டன் சிறிதுபொழுது மௌனமாயிருந்து பின்பு, அரசனே! யானே மரவுரியே உடையாகக் கொண்ட துறவி; யாது காரணத்தாலும் வழங்கவல்லேனல்லேன்; அப்பசு நின்பால் வருமாயின் நீயே கொண்டு செல்வாயாக என்ற அளவில்,

பதவுரை:

நிற்கு இது தகுவது அன்று - உனக்கு இப்பசு தகுதியுடையது அல்ல. *ஆல்* - ஆதலால், *நீள் தரும் சுரபி தன்னை* - ஒளி தருவதாய இந்தக் காமதேனுவை, *எற்கு அருள்* - எனக்குத் தருவாயாக, *என்ற* லோடும் - என்ற அளவிலே, *யாது உம் இயம்பலன்* - (வசிட்டன்) ஒன்றையும் சொல்லாத மௌன நிலையினனாகி இருந்து, *பின்னர்* - பின்பு, *கொன் கொள் வேல் உழவ* - அச்சந் தரும் வேற்படையை உடைய வீரனே, *யானே வற்கலை உடையென் வழங்கலென்* - நானே மரவுரி அணிந்த துறவி; (*யாது காரணத்தானும்*) வழங்க வல்லேனல்லன், *வருவது ஆயின்* - (அது உன்பால்) வரும் எனின், *நீ ஏ கொண்டு அகல்க* – நீயே அழைத்து நீங்குவாயாக, *என்று கூற* - என்று சொல்ல,

விசேட உரை:

'*நிற்கு தகுவது அன்று; எற்கு அருள்*' என்றது பேராசையால். கௌசிகன் பேராசை இருந்தபடி யென்னே என்பதைச் சிந்தித செய்ததால் வசிட்டன் '*யாதும் இயம்பலன்*' ஆகி இருந்தனனென்க. '*முற்றுந் துறந்தவன் என எண்ணித் தானே வந்ததைக் கொடுக்கு முரிமையு மில்லேன்*' என்பதை யுணர்த்தவே '*வற்கலை யுடையென் வழங்கலென்*' என்று னென்க. முனிவர்க்கு அரசரே பசு முதலியவற்றைக் கொடுப்பதன்றி அரசர்க்கு முனிவர் கொடுத்தலில்லையே என்பதும் குறிப்பு. கொல் கொள் வேல் என்றுமாம். கொன் - அச்சம். உழவ - வீரனே. உழவ என்றது அறத்தினீங்கிய நின் வீரத்தால் யாது பயன் என்றுற்போல அமைந்தவிளி. ஆல் - ஆதலால் என்பதன் விகாரம்.

கௌசிகன் காமதேனுவைப் பிணித்துப் பெயர அது வசிட்டனை வினவுதல்.

97. பணித்தது புரிவெ னென்னப் பார்த்திப னெழுந்து பொங்கிப்
பிணித்தனன் சுரபி தன்னைப் பெயர்வுழிப் பிணியை வீட்டி
மணித்தடந் தோளி னுற்குக் கொடுத்தியோ மறைகள் யாவும்
கணித்தவெம் பெருமை வென்னக் கலிமகற முனிவன் சொல்வான்.

மி. கா. ப. 11

பொழிப்புரை:

கௌசிகன் வசிட்டன் கட்டளைப்படியே செய்வேன் என எழுந்து மனக்கிளர்ச்சியோடு சென்று காமதேனுவைப் பிணித்துப் புறப்பட்ட போது, அப்பசு அக்கட்டை அறுத்துவிட்டு வசிட்டனை நோக்கி, எப்பெரு மானே! கௌசிகனுக்கு என்னைக் கொடுத்து விட்டனையோ? என வினவ, கலை மறை முனிவனை வசிட்டன் சொல்வானுயினன்.

பதவுரை:

பார்த்திபன் - கௌசிகனுகிய அரசன், *பணித்தது புரிவென்* என்னு எழுந்து - வசிட்டமுனிவன் சொன்னபடி செய்வேன் என்று எழுந்து, *பொங்கி சுரபி தன்னை பிணித்தனன் பெயர்வுழி* - மனங் கிளர்ந்து அந்தக் காமதேனுவைக் கட்டிக்கொண்டு புறப்பட்டபோது, *பிணியை வீட்டி* - கட்டினை அறுத்துவிட்டு (வசிட்டனை அடைந்து நோக்கி), *மறைகள் யாவும் கணித்த எம் பெருமை* - வேதங்கள் முழுவதையுமே ஆராய்ந்தறிந்த எம்பெருமானே!, *மணி தட* தோளினுற்கு கொடுத்தி ஒ - அழகிய விசாலமான தோள்களையுடைய கௌசிக மன்னனுக்கு என்னைக் கொடுத்தனையோ?, *என்ன* - என்று வினவ, *கலைமறை முனிவன் சொல்வான்* - சகல கலைகளையும் வேதங்களையும் நன்குணர்ந்த முனிவன் சொல்வானுயினன்.

விசேட உரை:

''மறைகள் யாவும் கணித்த வெம் பெருமை! தடந் தோளினுற்குக் கொடுத்தியோ'' என்றது எதிர்மறைப் பொருள் தர உரைக்கப்பட்டது; விட்டுதல் - விடுவித்தல். கலை மறை – சகல கலைகளையும் அடக்கிய மறைகள் என்றுமாம்.

வசிட்டன் கூறியது கேட்ட காமதேனு சினங்கொள்ளல்

98. **கொடுத்திலென் யானே மற்றக் குடைகெழு வேந்தன் குலை**
பிடித்தகல் வுற்ற தென்னைப் பெருஞ்சினங் கதுவு நெஞ்சோ
டிடித்தெழு முரச வேந்தன் சேனையை யானே யின்று
முடிக்குவென் காண்டி யென்னு மொய்ம்மயிர் சிலிர்த்த தன்றே.

பொழிப்புரை:

யான் கௌசிகனுக்குக் கொடுத்தேனல்லன். அவ்வேந்தனே உன்னைப் பிடித்து அகல்வதாய செயல் இது என்று வசிட்டன் கூற, (கேட்ட சுரபி) பெருங் கோபங்கொண்ட மனத்தோடு, அரசன் சேனையை இன்று அழித்துவிடுவேன் காண்பாயாக என்று தன்மேனியிற் செறிந்த மயிர் களைச் சிலிர்த்தது.

பதவுரை:

யான் கொடுத்திலென் - யான் (உன்னை) கொடுத்தேனல்லன். *அ குடை கெழு வேந்தன் தான் ஏ பிடித்து அகல் வுற்றது* - அந்த, வெற்றிக்குடை விளங்குகிற கௌசிக மன்னன் தானே (உன்னைப்) பிடித்துச் சென்ற செயல் இது, *என்ன* - என்று வசிட்டன் சொல்ல, (கேட்ட சுரபி) பெரு சினம் கதுவு நெஞ்சோடு - மிக்க கோபம் சுவீய மனத்தோடு, இடித்து எழும் முரசம் வேந்தன் சேனையை யான் ஏ இன்று முடிக்குவென் காண்டி என்னு - இடியென ஒலியெழும் பேரிகைகளையுடைய இம் மன்னனது சேனைகள் முழுவதையும் நானே இப்பொழுது அழித்துவிடுவேன் காணுக என்று, அன்றே மொய் மயிர் சிலிர்த்தது - அப்பொழுதே தன் மேனியிற் செறிந்த மயிர் களைச் சிலிர்த்தது;

விசேட உரை:

ஏகாரம் ஈற்றசை. மற்று - அசை; குடை - வெற்றிக்குடை. பெருஞ் சினம் கதுவு நெஞ்சு - எழுந் தோங்குசினம் கவர்ந்த நெஞ்சு. யானே முடிக்குவென் என்றது, முடித்தற்குப் பிறர் எவர் துணையும் எனக்கு வேண்டியதில்லை என்பதை உணர்த்த.

கௌசிகன் சேனை அழிதலும் புதல்வர் வெருவுதலும்

99. **பப்பர ரெயினர் சீனர் சோனகர் முதல பல்லோர்**
கைப்படை யதனி னுேடுங் கபிலைமாட் டுதித்து வேந்தன்
துப்புடைச் சேனை யாவுந் தொலைவுறத் துணித்த லோடும்
வெப்புடைக் கொடிய மன்னன் மனயர்கள் வெகுண்டு மிக்கார்.

பொழிப்புரை:

பப்பரரும் வேடரும், சீனரும் சோனகரும் முதலாய மிலேச்ச வீரர் பலர் ஆயுதங்களுடன் அந்தக் காமதேனுவினிடத்தே தோன்றிக் கௌசிக னது சேனைகள் முழுவதையும் அழியும்படி துணித்த வளவிலே மனத்துயர் கொண்ட கௌசிகமன்னன் குமாரர்கள் கோபித்து நிறைந்தார்கள்.

பதவுரை:

(காமதேனு மயிர் சிலிர்த்ததும்) பப்பரர் - பப்பரர்களும், எயினர் - வேடர்களும், சீனர் - சீனர்களும், சோனகர் - சோனகர்களும், முதல பல்லோர் - முதலாய மிலேச்ச வீரர் பலர், கை படை அதனினுேடு உம் - தத்தம் கைகளிடத்துக் கொண்ட ஆயுதங்களுடனே, கபிலை மாட்டு உதித்து - அக் காமதேனுவிடத்தே தோன்றி, வேந்தன் துப்பு உடை சேனை யா உம் - கௌசிக மன்னனது வலிமை

பொருந்திய சேனைகள் முழுவதையும், தொலைவு உற துணித்த லோடு உம் - அழியும்படி வெட்டி யெறிந்த வளவிலே, வெப்பு உடை மன்னன் கொடிய தனயர்கள் - மனத்துயர் கொண்ட கௌசிக மன்னனது கொடிய குமாரர்கள், வெகுண்டு மிக்கார் - கோபித்து நிறைந்தார்கள்.

விசேட உரை:

பப்பரர் - பப்பர தேசத்தவர்; சினர் - சின தேசத்தவர்; சோனகர் - சோனக தேசத்தவர்; யவனரு மென்பர். இவர் வேற்று நாட்டவர். துப்பு - வலிமை. வெப்பு - மனத்துயர்.

வசிட்டனை எதிர்த்த கௌசிகன் மைந்தர் இறத்தல்

100. சுரபியின் வலியி தன்ரும் சுருதிநூ லுணர வல்ல
வரமுனி வஞ்ச மென்னு மற்றவன் சிரத்தை யின்னே
அரிகுவ மென்னப் பொங்கி யடர்த்தன ரடர வன்னன்
எரியெழ விழித்த லோடு மிறந்தனர் குமர ரெல்லாம்.

பொழிப்புரை:

(வெகுண் டெழுந்த கௌசிகன் குமாரர்கள்) இங்ஙனம் படை யழிந் தது காமதேனுவின் வலியாலன்று; வசிட்டன் செய்த மாயையாகும் என்று அவன் தலையை இப்போதே அரிவேம் என்று சினந்தெழுந்து எதிர்த்து நெருங்கினர்கள். (அவர்கள் அவ்வாறு) நெருங்க வசிட்டன் தீயெழ விழித்த அளவிலே எல்லோரும் இறந்தொழிந்தார்கள்.

பதவுரை:

இது - இங்ஙனம் மிலேச்ச வீரர்கள் தோன்றியதும் நமது படை கள் நாசமடைந்ததுமாகிய நிகழ்ச்சி, சுரபியின் வலி அன்று - காம தேனுவின் வலிமை யன்று. சுருதி நூல் உணர வல்ல வரன் முனி வஞ்சம் என்னு - வேதசாத்திரங்களை அறியு முறையா னறிய வல்லவ னும் சிறந்தவனுமான வசிட்டமுனிவனது மாயமே என்று முடிவு செய்து, அவன் சிரத்தை இன்னே அரிகுவம் என்ன பொங்கி - அவ னது தலையை இப்பொழுதே அரிந்திடுவோம் என்று சினந்து, அடர்த் தனர் - நெருங்கினர். அடர - அவ்வாறு அவர்கள் நெருங்க, அன் னன் - மேற்குறித்த வசிட்டமுனிவன், எரி எழ விழித்தலோடும் - தீ சுக்குமாறு விழித்துப் பார்த்த அளவில், குமரர் எல்லாம் இறந்தனர் - கௌசிக புத்திரர்கள் எல்லோரும் இறந்தொழிந்தார்கள்.

விசேட உரை:

வஞ்சம் - மாயம்; கபடம், அழிவு என்றுமாம்; அடர்தல் - நெருங்குதல், பொருதலுமாம்.

கௌசிகன் அம்பெய்ய வசிட்டன் தண்டினை
எதிர்க்க என ஏவுதல்.

101. ஐயிரு பதின்மர் மைந்த ரவிந்தமை யரசன் காணு
நெய்பொழி கனலிற் பொங்கி நெடுங்கொடித் தேர்க டாவிக்
கைதொடர் கணையி னேடுங் கார்முகம் வளைய வாங்கி
எய்தனன் முனியுந் தன்கைத் தண்டினை யெதிர்க வென்றான்.

பொழிப்புரை:

(அப்பொழுது) கௌசிக மன்னன் தன் புதல்வர் நூற்றுவரும் அவிந் தமை கண்டு நெருப்பெனச் சீறியெழுந்து நெடுங் கொடியுடைய தேரி னைச் செலுத்தி வில்லை வளைத்துக் கையினுல் தொடர்ந்து விடப்படும் அம் புகளால் எய்தனன். வசிட்டனும் தன்கையிலுள்ள யோக தண்டத்தை நோக்கி ஏற்றிடுவாய் என்று நியமித்தான்.

பதவுரை:

(அப்பொழுது) அரசன் ஐ இரு பதின்மர் மைந்தர் அவிந்தமை காணு - கௌசிகமன்னன் (தனது) புத்திரர் நூற்றுவர் வெந்து சாம்பரானதைக் கண்டு, நெய் பொழி கனலின் பொங்கி - நெய் சொரிந்த நெருப்பே போலச் சீறி எழுந்து, நெடு கொடி தேர் கடாவி - உயர்ந்த கொடியினையுடைய தேரினை (வசிட்ட னெதிரில்) செலுத்தி, கார் முகம் வளைய வாங்கி - வில்லினை நன்றாக வளைத்து, கை தொடர் கணையினோடு உம் எய்தனன் - கையால் தொடர்ந்து விடப்படுகிற அம்புகளால் எய்யத் தொடங்கினன். முனி உம் - வசிட்டமுனிவ னும், தன் கை தண்டினை எதிர்க என்றான் - தன் கையிலே யுள்ள யோக தண்டத்தை நோக்கி நீ ஏற்றிடுவாய் என்று நியமித்தான்.

விசேட உரை:

அவிந்தமை - வெந்து சாம்பராயினமை. தண்டம் - யோக தண்டம். அது யோக முத்திரைக் கோல். எதிர்க - ஏற்றிடுக.

கௌசிகன் சிவனிடம் படைபெறுதல்

102. கடவுளர் படைக ளீருக் கற்றன படைகள் யாவும்
விடவிட முனிவன் றண்டம் விழுங்கிமேல் விளங்கல் காணு
வடவரை வில்லி தன்னை வணங்கினன் வழுத்த லோடும்
அடலுறு படையொன் றீயா வன்னவ னகன்று னன்றே.

பொழிப்புரை:

தேவர்கள் கொடுத்த சிறந்த அஸ்திரங்கள் முடிவெய்தின எனத் தான் அறிந்த ஆயுதங்கள் எல்லாவற்றையும் எய்து கொண்டேயிருக்க வசிட்ட

னது யோகதண்டமானது அவற்றை விழுங்கி மேலும் பிரகாசித்தலைப் பார்த்து, மேருவை வில்லாகக் கொண்ட உருத்திர மூர்த்தியை வணங்கித் துதித்த அளவில், அவனும் வலிமை மிக்க படைக்கலம் ஒன்றினைக் கொடுத்து அப்பொழுதே நீங்கினன்.

பதவுரை:

கடவுளர் படைகள் ஈறு ஆ - தேவர்கள் கொடுத்த சிறந்த அஸ்திரங்கள் முடிவெய்தின எனும்படி, கற்றன படைகள் யா உம் - தான் அறிந்த ஆயுதங்கள் எல்லாவற்றையும், விடவிட முனிவன் தண்டம் விழுங்கி மேல் விளங்கல் காணூ - எய்துகொண்டேயிருக்க வசிட்டனது யோகதண்டமானது அவற்றை உட்கொண்டு மேலும் பிரகாசித்தலைப் பார்த்து, வட வரை வில்லி தன்னை - வடக்கின்கணுள்ள மகாமேருமலையை வில்லாகக் கொண்ட உருத்திர மூர்த்தியை, வணங்கினன் வழுத்தலோடு உம் - வணங்கித் துதித்த அளவில், அன்னவன் - அந்த உருத்திரமூர்த்தி, அடல் உறு படை ஒன்று ஈயா அன்று ஏ அகன்றனன் - வலிமை மிக்க படைக்கலம் ஒன்றினைக் கொடுத்தருளி அப்பொழுதே நீங்கினன்.

விசேட உரை:

கடவுளர் - தேவர். விழுங்கல் - உட்கொள்ளல்; 'ஓடி மீள்கென ஆடல் பார்த்திருப்பவன்' சிவன் ஆதலால் 'கேட்டாற்கு ஈந்து நீங்கினன்' என்க.

கௌசிகன் உருத்திரன் தந்த படையை ஏவ வசிட்டன் அதனை உண்டு விழுங்குதல்

103. விட்டனன் படையை வேந்தன் விண்ணுளோ ருலகை யெல்லாஞ்
சுட்டன னென்ன வஞ்சித் துளங்கினர் முனியுந் தோன்றிக்
கிட்டிய படையை யுண்டு கிளர்ந்தனன் கிளரு மேனி
முட்டவெம் பொறிகள் சிந்தப் பொருபடை முரண தீற்றே.

பொழிப்புரை:

கௌசிகன் அப்படையை வசிட்டன்மீது ஏவினன். தேவர்கள், 'இந்தப் படையாற் சகல உலகங்களையும் இவன் எரித்தவனுவான்' என்று அஞ்சி நடுங்கினர். வசிட்டமுனிவனும் எதிர்வந்து நெருங்கிய அப்படையை உட்கொண்டு, பிரகாசித்த அவன் மேனியிலிருந்து முழு வெப்பமான தீப் பொறிகள் சொரிய விளங்கினன். பொருது அழிக்கும் அப்படையினது வலிமை, அத்தன்மை உடையதாயிற்று.

பதவுரை:

வேந்தன் படையை விட்டனன் – கௌசிகன் அந்த அஸ்திரத்தை (வசிட்டன் மேல்) பிரயோகித்தான், விண்ணுலோர் உலகை எல்லாம் சுட்டனன் என்ன - தேவர்களும் 'இப்படையால் சகல உலகங்களையும் அழித்தவன் ஆவான் இவன்' என்று, அஞ்சி துளங்கினர் - பயந்து நடுங்கினர்கள், முனி உம் - வசிட்டமுனிவனும், தோன்றி கிட்டிய படையை உண்டு - எதிரே தோன்றிச் சமீபித்து வந்த அஸ்திரத்தை உட்கொண்டு, இளரும் மேனி முட்ட வெம் பொறிகள் சிந்த கிளர்ந்தனன் - விளங்குகின்ற தனது உடம்பு முழுவதிலுமிருந்து வெப்பமான தீப்பொறிகள் சொரிய மிக விளங்கினன். பொரு படை முரண் அது இற்று - பொருது எவரையும் அழிக்கவல்ல அந்த அஸ்திரத்தின் வலிமை அத்தன்மை உடையதாயிற்று.

விசேட உரை:

சுட்டனன், தெளிவுபற்றிய காலவழுவமைதி. இற்று, குறிப்பு விகுதிமுற்று. இனிச் செயவெனெச்சமாக 'இற' எனக் கொண்டு 'முரணது இற உண்டு கிளர்ந்தனன்' என உரைப்பினுமமையும்.

கௌசிகன் தவத்திற்குச் செல்லுதல்

104. கண்டன னரசன் காணாக் கலிமறை முனிவர்க் கல்லால்
திண்டிறல் வலியுந் தேசு முளவெனல் சீரி தன்றுல்
மண்டல முழுதுங் காக்கு மொய்ம்பொரு வலியன் றென்னு
ஒண்டவம் புரிய வெண்ணி யும்பர்கோன் றிசையை யுற்றான்.

பொழிப்புரை:

(தெய்வப்படை செயலற்றதை) கௌசிகமன்னன் நேராகவே கண்டனன், யாண்டும் யார்மாட்டுங் காணுதை பலம் பொருந்திய போர் வலியும், ஒளியும் முனிவர்க்கல்லது பிறருக்கு முள்ளன என்று கருதுதல் நேர்மை யல்ல, உலகம் முழுவதையுங் காக்கும் வலிமை ஒரு வலிமை யன்று என நிச்சயித்துச் சீரிய தவத்தைச் செய்ய நினைந்து இந்திரனுக்குரிய கீழ் திசையை அடைந்தான்.

பதவுரை:

(உருத்திர மூர்த்தி அருளிய தெய்வப்படை செயலற்றதை) அரசன் கண்டனன் - கௌசிக மன்னன் நேருக்கு நேராகக் கண்டான், காண் ஆ திண் திறல் வலி உம் - யாண்டும் யார் மாட்டும் காணுதலில்லாத பலம் பொருந்திய போர் வலிமையும், தேசு உம் - ஒளியும்,

கலை மறை முனிவர்க்கு அல்லால் உள எனல் – சகல கலைகளையும் வேதங்களையும் நன்குணர்ந்த முனிவர்களுக்கு உள்ளனவே யன்றிப் பிற ருக்கும் உள்ளன என்று கருதுதல், சீரிது அன்று - நேர்மையுடையது அல்ல, மண்டலம் முழுதும் காக்கும் மொய்ம்பு ஒரு வலி அன்று - உலகம் முழுவதையும் ஆளுகிற வலிமை ஒரு வலிமை என்று கருதத் தக்கதன்று, என்ன ஒள் தவம் புரிய எண்ணி - என நிச்சயித்துச் சீரிய தவத்தைச் செய்ய நினைந்து, உம்பர் கோன் திசையை உற்றான் - தேவர்கட் கரசனுகிய இந்திரனுக்குரிய கிழக்குத் திசையை அடைந் தான்.

விசேட உரை:

காணு திண்டிறல் வலியுந் தேசும் எனப் பொருளுரைக்க. காணு - ஈற்றுயிர்மெய் கெட்டு வந்த எதிர்மறைத் தெரிநிலை வினைப் பெயரெச்சம். திண் - பலம், திறல் - போர். வலி - வலிமை. திண், திறல், வலி என்பவற்றிற்கு வலியென்றே பொருள் கொண்டு மிக்க அதிக வலிமை என உரைப்பினு மமையும். தேசு - மகத் துவமுமாம். சீரிது - நேர்மையுடையது. இந்திரன் திசை கிழக்கு.

கௌசிகன் தவத்தைச் சிதைக்கத் திலோத்தமையை இந்திரன் ஏவுதல்

105. மாண்டமா தவத்தோன் செய்த வலனேயே மனத்தி னெண்ணிப்
பூண்டமா தவத்த னுகி யரசர்கோன் பொலியு நீர்மை
காண்டலு மமரர் வேந்தன் துணுக்குறு கருத்தி னுேடும்
தூண்டினன் எரம்மை மாருட் டிலோத்தமை யெனுஞ்சொன் மானே.

பொழிப்புரை:

அரசர்க்கரசனுகிய கௌசிகன் வசிட்டன் செய்த வெற்றிச் செய லேயே சிந்தித்துப் பூண்ட பெருந்தவம் திகழுந் தன்மையைக் காணுதலும் இந்திரன் கலங்கிய கருத்தினனுய் தெய்வமாதருள் திலோத்தமை என்ற புகழ் கொண்ட மான் போன்றவளை (கௌசிகன்பாற் சென்று தவத்தைக் கெடுக்குமாறு) தூண்டினன்.

பதவுரை:

அரசர் கோன் - அரசர்க்கரசனுகிய கௌசிகன், மாண்ட மா தவத்தோன் செய்த வலனே ஏ - மாட்சிமையுடைய பெருந்தவத்தோ னுகிய வசிட்டமுனிவன் பெற்ற வெற்றிச் செயலையே, மனத்தின் எண்ணி - மனத்தில் இடைவிடாது சிந்தித்து, பூண்ட மா தவத்தன் ஆகி - பொருந்திய மேலான தவச் செயலை யுடையவனுகி, பொலி

யும் நீர்மை காண்டலும் - விளங்குகின்ற தன்மையைக் கண்ட அள விலே, அமரர் வேந்தன் துணுக்குறு கருத்திலேடு உம் - தேவர்களது அரசனுகிய இந்திரன் அச்சம் மிக்க கருத்துடனே, அரம்பைமாருள் திலோத்தமை எனும் சொல் மானே - தெய்வப் பெண்களுள் திலோத் தமை என்ற புகழ் பெற்ற மான் போல்வாளை, (கௌசிகன்பாற் சென்று தவத்தைக் கெடுக்குமாறு) தூண்டினன் - தூண்டினன்.

விசேட உரை:

வலன் - வெற்றி. செய்தவலன் - செய்த வெற்றிக்குக் காரண மான செயல். துணுக்குறுதல் - அச்சங் கொள்ளுதல். பெருந் தவத்தோர் கபாலத்தினின்றும் எழும் ஒருவகைத் தீ மேலுல கையும் அழிக்கும் என்பது கருதிய அச்சமே இந்திரனுக்கு உண் டாயிற் றென்க. அரம்பை - விருப்பங் கொடுப்பவள். சொல் - புகழ்.

கௌசிகன் சிற்றின்பத்தில் மூழ்கிப் பின்பு வெறுத்தல்

106. அன்னவண் மேனி காணு வனங்கவேள் சரங்கள் பாயத்
தன்னுணர் வழிந்து காதற் சலதியி னழுந்தி வேந்தன்
பன்னரும் பகுதி முற்றப் பரிணதர் தெரிந்த நூலின்
நன்னய முணர்ந்தோ னுகி நஞ்செனக் கனன்று நக்கான்.

பொழிப்புரை:

கௌசிகன் அந்தத் திலோத்தமையின் அழகைக் கண்டு, மன்மத பாணங்கள் பாய்ந்து தைக்கத் தன்னறிவு அழிந்து காம சமுத்திரத்திலே மூழ்கி, பலகாலம் கழியப் பெற்றவனுய், அறிஞர் ஆராய்ந்து செய்த சாத திரங்களை உணர்ந்தவனுகி விடத்தை உண்டது போலாயிற்றே எனத் தன னேயே கோபித்து இகழ்ந்த சிரிப்பினனுனன்.

பதவுரை:

வேந்தன் - கௌசிகன், அன்னவள் மேனி காணு - அந்தத் திலோத்தமையின் பேரழகினைக் கண்டு, அனங்கவேள் சரங்கள் பாய - மன்மதனது காம சரங்கள் பாய்ந்து தைக்க, தன் உணர்வு அழிந்து - தனது நல்லறிவு முற்றுக நீங்கப் பெற, காதல் சலதியில் அழுந்தி - காம சமுத்திரத்திலே மூழ்கி, பன்ன அரு பகல் தீர்வுற்று - சொல்லு தற்கு அரிய பலகாலம் கழியப் பெற்று, பரிணதர் தெரிந்த நூலின் நல் நயம் உணர்ந்தோன் ஆகி - அறிவு கனிந்தோர் ஆராய்ந்து செய்த சாத்திரங்களின் செம்பொருளை உணர்ந்தவனுகி, நஞ்சு என - விடத்தை உண்டது போலாயிற்றே என, கனன்று நக்கான் - தன் னையே கோபித்தவனுகி இகழ்ந்த சிரிப்பினனுனன்.

விசேட உரை:

அனங்கன் – உருவமில்லாதவன்; பாய - பாய்ந்து தைக்க. காதற் சலதி – காமக்கவியாகிய சமுத்திரம். பகல் – காலம், நாளுமாம். பரிணதம் - கனிவு; பரிணதர் - அறிவு கனிந்தவர். தெரிந்த நூல் - ஆராய்ந்து செய்த சாத்திரங்கள். நஞ்சு என - இத்தனை காலமும் அனுபவித்த காமசுகம் விடத்தை உண்டது போலாயிற்றே என. தவறு செய்தவன் தானேயாதலின் தன்னையே கனன்று நக்கா னென்க.

கௌசிகன் திலோத்தமையை நீக்கித் தவம்புரியத் தென்றிசை சார்தல்

107. விண்முழு தாளி செய்த வினையென வெகுண்டு நீபோய்
மண்மக ளாதி யென்று மடவர லன்னை யேவிக்
கண்மலர் சிவப்ப வுள்ளங் கறுப்புறக் கடிதி னேகி
எண்மரில் வலிய னுய வெமன்றிசை தன்னை யுற்றான்.

பொழிப்புரை:

விண் முழுவதையும் ஆளும் இந்திரனது வஞ்சனைச் செயலாகுமென அறிந்து, (அச்செயலுக்குக் கருவியாகிய) நீ, உலகில் மானுடப் பெண்ணாகப் பிறப்பாயாக என்று அவளைச் சபித்துக் கண்கள் சிவக்கவும் மனங் கோபங் கொள்ளவும் அங்கு நின்றும் விரைந்து சென்று எண்திசைக் காவலருள் வலியனாய யமனது திக்காய தென்றிசையை அடைந்தான்.

பதவுரை:

விண் முழுது ஆளி செய்த வினை என - விண்ணுலகம் முழுவதையும் ஆளும் இந்திரன் செய்த வஞ்சனைச் செயலாகும் என்று அறிந்து, வெகுண்டு - கோபங்கொண்டு, நீ போய் மண் மகள் ஆதி என்று மடவரல் தன்னை ஏவி - (அச்செயலுக்குக் கருவியாகிய) நீ பூமியிற் சென்று, மானுடப் பெண்ணாகப் பிறப்பாயாக என்று சொல்லித் திலோத்தமையைச் சபித்துவிட்டு, கண் மலர் சிவப்ப உள்ளம் கறுப்பு உற - கண்களாகிய மலர்கள் சிவப்பு நிறம் பொருந்தவும் மனமானது கோபங் கொள்ளவும், கடிதின் ஏகி - அங்கு நின்றும் விரைந்து சென்று, எண்மரின் வலியன் ஆய எமன் திசை தன்னை உற்றான் - எட்டுத்திசைகளின் காவலர்களுள் வலிமையுடையோனாகிய யமனது தென்றிசை தன்னை அடைந்தான்.

விசேட உரை:

செய்தவினை - செய்த வஞ்சனைச் செய்கை. மடவரல் – இளமையின் வருகையை உடையவள்; அன்மொழித் தொகை. கறுப்பு – கோபம். எண்மர் - அட்டதிக்குப்பாலகர். கிழக்கு இந்திரனுக்கும், தென்கிழக்கு அக்கினிக்கும், தெற்கு யமனுக்கும், தென்மேற்கு நிருதிக்கும், மேற்கு வருணனுக்கும், வடமேற்கு வாயுவுக்கும், வடக்கு குபேரனுக்கும், வடகிழக்கு ஈசானனுக்கும் உரிய திசைகள் என அறிக.

திரிசங்கு இச்சரீரத்தோடு சுவர்க்கஞ் செல்ல அருளுக என வசிட்டனை வேண்ட அவன் மறுத்தல்

108. **தென்றிசை யதனை நண்ணிச் செய்தவஞ் செய்யுஞ் செவ்வி**
வன்றிற லயோத்தி வாழு மன்றிரி சங்கு வென்பான்
தன்றுணைக் குருவை நண்ணித் தனுவொடுந் துறக்க மெய்த
இன்றெனக் கருளு கென்ன யானறிந் திலன தென்றான்.

பொழிப்புரை:

தென் திசையதனை அடைந்து தான் செய்யவேண்டிய தவத்தைச் செய்யும்பொழுதில் அயோத்தியில் வாழும் திரிசங்கு என்பவன் தன் குரு வாகிய வசிட்டனை அணுகி இந்த உடலோடு சுவர்க்கத்தை யடைய இப் பொழுது எனக்கு அருளுக என்று வேண்ட, அங்ஙனம் சுவர்க்கம் சேர்க்கும் செயலை யான் அறியேன் என்று (வசிட்டன்) மறுத்துக் கூறினன்.

பதவுரை:

தென் திசையதனை நண்ணி - தெற்குத் திக்கை அடைந்து, செய் தவம் செய்யும் செவ்வி - செய்யக் கருதிய தவத்தை (கௌசிகன்) செய்யும் பொழுதில், அயோத்தி வாழும் வல் திறல் மன் திரிசங்கு - அயோத்தியில் வாழும் மிக்க வலியுடைய மன்னனாகிய திரிசங்கு என்பான், தன்துணைக் குருவை நண்ணி – தனது ஆன்ம துணைவனும் குருவுமாகிய வசிட்டனை அடைந்து, தனுவொடு உம் துறக்கம் எய்த இன்று எனக்கு அருளுக என்ன - எனது இந்தப் பூத சரீரத்துடனேயே சுவர்க்கம் புக இப்போதே எனக்குக் கிருபை செய்வாயாக என்று பிரார்த்திக்க, யான் அது அறிந்திலேன் என்றான் - யான், பூத சரீரத்தோடும் சுவர்க்கம் சேர்க்கும் செயலை அறிந்தேனல்லன் என்று (வசிட்டன்) மறுத்துக் கூறினன்.

விசேட உரை:

செவ்வி - காலம். துணை - உயிர்த்துணை. தனு - பூதசரீரம். அது - அச்செயல். திரிசங்கு - இவன், தந்தையின் சொல்லைக்

கடந்து மறையவர் கன்னியைக் கவர்ந்தது, வசிட்டன் பசுவைக் கொன்றது, பரிசுத்தமாக்கப்படாத மாமிசத்தை உண்டது என மூன்று குற்றங்களை உடையன் என்பதால் திரிசங்கு என அழைக்கப்பட்டான். திரி சங்கு - மூன்றினது ஒன்றிப்பு. இவன் சூரிய வம்ஸத்தவன். தந்தை, திரிபந்தனன், அரிச்சந்திரன் இவன் மகன். இவனே திரையாருணன் குமாரன் சத்தியவதனன் என்றும், இவன் செய்த மூன்று குற்றத்திற்காகவும் வசிட்டன் அவன் தலையில் சங்கடிக்க இயற் பெயர் திரிசங்காயிற்று என்றும் கூறுவர். சங்கு - முள்.

திரிசங்குவை வசிட்டன் சபித்தல்

109. நினக்கொலா தாகி னேய நீணிலத் தியாவ ரேனும்
மனக்கினி யாரை நாடி வகுப்பலியான் வேள்வி யென்னச்
சினக்கொடுந் திறலோய் முன்னர்த் தேசிகற் பிழைத்து வேறோர்
நினக்கித மூடி நின்றாய் நீசனாய் விடுதி யென்றான்.

பொழிப்புரை:

ஐயனே உனக்கு இது முடியாததாயின் இவ்வுலகில் எவராயினும் என் மனத்துக் கினியவரைத் தேடி அவரைக் கொண்டு எண்ணிய வேள்வியை முடிப்பேன் என்று (திரிசங்கு) கூற, (வசிட்டன் அவனை நோக்கி) சினமும் வலியும் உடையவனே! பழமையான ஆசாரியனுக்குப் பிழைத்தலைச் செய்து நினக்கு இதமான வேறொரு குருவை நாடி நின்றாய், (ஆதலால்) நீ புலையனாதாக என்று சபித்தான்.

பதவுரை:

(அது கேட்ட திரிசங்கு வசிட்டனை நோக்கி) ஐய, நினக்கு ஒலாது ஆகின் - ஐயனே, (இச்செய்கை) உனக்கு முடியாததாயின், நீள் நிலத்து யாவர் ஏன் உம் மனக்கு இனியாரை நாடி - பெரிய இந்த உலகில் யாவராயினும் என்மனத்துக்கு இனியவரைத் தேடி, யான் வேள்வி வகுப்பல் - நான் யாகத்தைச் செய்வேன், என்ன - என்று சொல்ல, (வசிட்டன் அவனை நோக்கி) சினம் கொடு திறலோய் - சினத்தையும் கொடுமையாகிய வலியையும் உடையவனே, முன்னர் தேசிகன் பிழைத்து - பழமையாகிய ஆசாரியனுக்குப் பிழைத்தலைச் செய்து, வேறு ஓர் நினக்கு இதன் நாடி நின்றாய் - வேறொரு நினக்கு இதமானவனான குருவை அடைய நின்றாயாயினை; நீசனாய் விடுதி - நீ புலையனாய் விடுவாயாக, என்றான் - என்று சபித்தான்.

விசேட உரை:

ஒலாது - முடியாதது. மனக்கினியார் - மனத்துக்கு இனிமை செய்வான் இசைந்தவர். முன்னர் - பழமையான, நினக்கு இதன் - உனக்கு இதம் செய்வானுகிய இஷ்டன். நீசன் – சண்டாளன்; புலையன்;

திரிசங்கு சண்டாளனுதல்

110. மலருளோன் மைந்தன் மைந்த வழங்கிய சாபந் தன்னுல்
அலரியோன் ருனு நாணும் வடிவிழந் தரசர் கோமான்
புலரியங் கமலம் போலும் பொலிவொரீஇ வதனம் பூவில்
பலருமாங் கிகழ்தற் கொத்த படிவம்வந் துற்ற தன்றே.

பொழிப்புரை:

வலிமையுடையவனே! பிரமதேவன் புத்திரனுகிய வசிட்டன் இட்ட சாபத்தால், திரிசங்கு மகாராசனுக்குச் சூரியன் தானும் நாணும்படியான அரசவடிவு நீங்கி உதயகாலத்துத் தாமரை மலர் போன்ற முகப் பொலிவு கெட, உலகினர் யாவரும் இகழுதற்குரிய சண்டாள வடிவம் ஆங்கு அப் பொழுதே பொருந்தியது.

பதவுரை:

மைந்த - வலிமை யுடையவனே! மலருளோன் மைந்தன் - தாமரை மலரில் வாழும் பிரமதேவன் புத்திரனுகிய வசிட்டன், வழங்கிய சாபம் தன்னுல் - இட்ட சாபத்தினுல், அரசர் கோமான் - அரசர்க் கரசனுகிய திரிசங்குவுக்கு, அலரியோன் தான் உம் நாணும் வடிவு இழந்து – சூரியனும் நாணுதற்குக் காரணமான அழகிய வடிவம் நீங்கி, புலரி அம் கமலம் போலும் வதனம் பொலிவு ஒரீஇ - புலரிக்காலத்து மலரும் அழகிய தாமரை மலர் போலும் முகத்தின் அழகு கெட, பூவில் பலர் உம் இகழ்தற்கு ஒத்த படிவம் - பூமியில் யாவரும் இகழ்தற்குரிய சண்டாளவடிவம், ஆங்கு அன்று ஏ வந்து உற்றது அன்றே - அவ்விடத்தே அப்பொழுதே வந்து பொருந்தியது.

விசேட உரை:

மைந்தன் - வலிமையுடையோன். வசிட்டன் பிரமனுக்கு மானஸ புத்திரன் என்பர். அலரியோன் - கிரணங்களாற் பரப்பவன்; அலர்த்துபவன் என்றுமாம். இழந்து ஒரீஇ - இகழ்தற்கு உற்றது என முடிக்க.

திரிசங்கு யாவராலும் இகழப்படுதல்

111. காசொடு முடியும் பூணுங் கரியதாங் கனகம் போன்றும்
தூசொடு மணியு முந்நூ லேறருந் தோற்றம் போன்றும்
மாசொடு கருகி மேனி வனப்பழிந் தீடலூர் வந்தான்
சீசியென் றியாரு மெள்ளத் திகைப்பொடு பழுவஞ் சேர்ந்தான்.

பொழிப்புரை:

மணிமாலைகளும் அருங்கலமும் மற்றைய ஆபரணங்களும் கரும் பொன்னுகிய இரும்பை யொத்தும், ஆடைகளும் முப்புரிநூலும் தோலினு லாகிய தன்மையை ஒத்தும், உடலானது அழுக்கோடு கூடிக் கறுத்து அழகு அழிந்திடவும் அயோத்தி நகருள் பிரவேசித்தானை எல்லோரும் சீசீ என்று இகழ, கலக்கத்தோடும் காட்டினை அடைந்தான்.

பதவுரை:

காசொடு முடி உம் பூண் உம் – மணிமாலைகளும் அருங்கலமும் மற்றைய ஆபரணங்களும், கரியது ஆம் கனகம் போன்று உம் - கரும் பொன்னுகிய இரும்பை ஒத்தும், தூசொடு உம் அணியும் முந் நூல் - ஆடைகளும் தரித்திருந்த முப்புரிநூலும், தோல் தரு தோற் றம் போன்று உம் - தோலினுலான தன்மையை ஒத்தும், மேனி மாசொடு கருகி - உடம்பானது அழுக்குடன் கூடியதாய்க் கறுத்து, வனப்பு அழிந்திட - அழகு அழிந்திடவும், ஊர் வந்தான் - அயோத்தி நகருள் பிரவேசித்தானை, சீ சி என்று யார் உம் இகழ - சீ சீ யென எல்லோரும் இகழ, திகைப்பொடு பழுவம் சேர்ந்தான் - கலக்கத் தோடும் காட்டினை அடைந்தான்;

விசேட உரை:

காசு - மணி; ஆகுபெயர். மதாணி வடமுமாம். தூசு - ஆடை. கரியது ஆம் கனகம் - கரும்பொன். அஃது இரும்பு. பழு வம் – காடு. திரிசங்கு வசிட்ட சாபத்தா னெய்திய சண்டாள உருவினுக்கேற்ப அணிந்திருந்த காசு முதலியவைகளும் உருமா றின என்பதாம்.

திரிசங்கு கௌசிகன் பால் தன் செய்தி சொல்லல்

112. கானிடைச் சிறிது வைகல் கழித்தொர்நாட் கௌசிகப் போக்
கோனினி துறையுஞ் சோலை குறுகினன் குறுக வன்னன்
ஈனனீ யாவ னென்னை நேர்ந்ததிவ் விடையீ னென்ன
மேனிகற் பொருள்க ளெல்லாம் விளம்பினன் வணங்கி வேந்தன்.

பொழிப்புரை:

காட்டிலே சில நாட்களைக் கழித்து, ஒருநாள் கௌசிகன் என நாமம் பூண்ட அரசன் உறையும் சோலையை அணுகினான். அணுகியதும் அக் கௌசிகன் ஈனனாகிய நீ யார்? வந்த காரணம் யாது? என்று வினவ, அத்திரிசங்காகிய வேந்தன் முன் நிகழ்ந்தவற்றை யெல்லாம் சொன்னான்.

பதவுரை:

கானிடை - காட்டினிடத்தே சில நாட்களைக் கழித்து, ஓர் நாள் கௌசிகன் பேர் கோன் இனிது உறையும் சோலை குறுகினன் - ஒருதினம் கௌசிகன் என்ற நாமம் பூண்ட அரசன் இனிதாக வசிக்கின்ற சோலையை அணுகினான். குறுக - அணுகிய அளவில், அன்னான் 'ஈனன் நீ யாவன்? இ இடையின் நேர்ந்தது என்னை' - அக்கௌசிகன் ''சண்டாளனாகிய நீ யார்? இந்த இடத்திற்கு வந்த காரணம் யாது?'', என்ன - என்று வினவ, வேந்தன் - அரசனாகிய திரிசங்கு, வணங்கி மேல் நிகழ் பொருள்கள் எல்லாம் விளம்பினன் - வணங்கி முன் நிகழ்ந்த செய்திகள் எல்லாவற்றையும் சொன்னான்.

விசேட உரை:

வைகல் - நாள். மேல் நிகழ்பொருள் - வசிட்ட சாபம் முதலியன.

திரிசங்கு விரும்பியவாறு செய்யக் கௌசிகன் இசைந்து முனிவர்களை அழைத்தலும் வசிட்ட குமாரர் மறுக்கச் சபித்து வேள்வி தொடங்கலும் 113 — 114

113. **இற்றிதோ வெனநக் கன்னன் யானிரு வேள்வி முற்றி**
மற்றுல களிப்பெ னென்னு மாதவர் தம்மைக் கூவச்
சுற்றுறு முனிவர் யாருந் தொக்கனர் வசிட்டன் மைந்தர்
கற்றில மரசன் வேள்வி கனற்றுறை புகுவயற் கீவான்.

பொழிப்புரை:

இது கேட்ட கௌசிகன், இவ்வளவுதானா என்று சிரித்து, யான் பெரியதொரு யாகஞ் செய்து முடிததுத் தேவலோகத்தை (உன்னுடலோடு சேருமாறு) தருவேன் என்று சொல்லிப் பெருந்தவத்தோர் யாவரையும் அழைக்கச் சூழவிருந்த தவத்தோர் எல்லோரும் வந்து கூடினர். அப்போது வசிட்டகுமாரர்கள், அரசனொருவன் சண்டாளனுக்கு வேள்வியை அக்கினியினிடமாகச் செய்தலை எந்நூலினும் நாம் படித்தோ மில்லை,

பதவுரை:

அன்னன் – கௌசிகப் பேரினனாகிய அவன், இற்றிது ஓ என நக்கு – இவ்வளவுதானா என அலட்சியமாகச் சொல்லிச் சிரித்து, யான் இரு வேள்வி முற்றி மற்று உலகு அளிப்பென் என்னா - யான் மிகப் பெரியதொரு யாகத்தைச் செய்து முடித்துத் தேவலோகத்தை (உன் உடலோடு சேருமாறு உனக்கு) தருவேன் என்று சொல்லி, மாதவர் தம்மைக் கூவ - பெருந்தவத்தோர்களை அழைக்க, சுற்றுறு முனிவர் யார் உம் - சுற்றுப்புறங்களிலிருந்த முனிவர்கள் எல்லோரும், தொக்கனர் - வந்தார்கள், வசிட்டன் மைந்தர் - வசிட்ட குமாரர்கள், அரசன் புலையற்கு - அரச வம்சத்தான் ஒருவன் சண்டாளனுக்காக, வேள்வி கனல் துறை ஈவான் - யாகத்தை அக்கினியினிடமாகச் செய்து தருதலை, கற்றிலம் - எந்நூலினும் படித்தோமில்லை,

விசேட உரை:

இது குளகம். இற்றிதோ - இவ்வளவேயோ. யாக காரியத்திற்கு அரசன் புரோகிதனாகச் சண்டாளன் யசமானனாக அமைதல் எந்நூலுக்கும் ஒவ்வாமையால் வசிட்ட குமாரர் கௌசிகன் அழைப்பை நிராகரித்தனரென்க. மற்று உலகு - வேருகிய உலகம். சுவர்க்கம்.

114. என்றுரைத் தியாங்க ளொல்லோ மென்றன ரென்னப் பொங்கிப்
புன்றொழிற் கிராத ராகிப் போகெனப் புகற லோடும்
அன்றவ ரெயின ராகி யடவிக டோறுஞ் சென்றார்
நின்றுவேள் வியையு முற்றி நிரசனர் வருக வென்றான்.

பொழிப்புரை:

எனச் சொல்லி யாம் இதற்கு உடன்படோம் என்று (வசிட்ட குமாரர்) சொன்னார்கள் என்று சொல்ல, கௌசிகன் கோபங்கொண்டு இழி தொழில்களையுடைய வேடர்களாக என்று சொன்ன அளவில் அவர்கள் வேடர்களாகிக் காடுகள் தோறும் போய்விட்டார்கள். கௌசிகனோ நிலைத்து நின்று வேள்வியை முடிக்கத் தொடங்கி (ஆகுதி பெற) 'தேவர்களே வருக' என்று அழைத்தான்.

பதவுரை:

என்று உரைத்து - என்று சொல்லி, 'யாங்கள் ஒல்லோம் என்றனர் - நாம் இதற்கு உடன்பட்டு வரோம் என்றார்கள்.' என்ன - என்று சொல்ல, பொங்கி (கௌசிகன்) கோபித்து, புன் தொழில் கிராதர் ஆகி போக என – இழி தொழில்களையுடைய வேடர்களாகக் கடவீர்

என்று, புகறலோடு உம் - சொன்ன வளவிலே, அன்று அவர் எயினர் ஆகி அடவிகள் தோறும் சென்றார் - அப்பொழுதே வசிட்ட குமாரர் கள் வேடுவராகிக் காடுகள் தோறும் சென்றனர் ஆயினர். நின்று - (கௌசிகன்) தான் பற்றியதில் நிலைத்து நின்று, வேள்வியை உம் முற்றி - யாகத்தையும் முடிக்கத் தொடங்கி, நிராசனர் வருக என் றான் - (ஆகுதி பெற) தேவர்களே வருக என அழைத்தான்.

விசேட உரை:

'யாங்க ளொல்லோ மென்றனர்' என வசிட்டன் மைந்தர் சொன்னதைச் சொன்னவர் கௌசிகனுல் ஏவப்பட்டு அழைக்கச் சென்றவர். கிராதர், எயினர் - வேடர்; நிராசனர் - கடவுளர்; பிரம்ம விஷ்ணு உருத்திராதியர்.

கௌசிகன் தன் தவபலத்தால் திரிசங்குவை வானத்தி லேற்றுதல்

115. அரசவிப் புலியற் கென்னே யனற்றுறை முற்றி யெம்மை
விரசுக வல்லி யென்பான் விழுமிதென் றிகழ்ந்து நக்கார்
புரைசைமா களிற்று வேந்தைப் போகநீ துறக்கம் யானே
உரைசெய்தேன் தவத்தி னென்ன வோங்கினன் விமானத் துப்பர்.

பொழிப்புரை:

(அழைக்கப்பட்ட கடவுளர்) கௌசிகனுன அரசன் புலியன் பொருட்டு யாக காரியத்தை நிறைவேற்றத் தொடங்கி, எம்மை அழைப்பவனுனன். என்னே சிறப்புடையது இச்செயல்! என்று இகழ்ந்து சிரித்தார்கள். (ஆயினும் கௌசிகன்) யானைப் படையினனுன திரிசங்குவை நோக்கி நீ சுவர்க்கம் சென்றிடுக, தவத்தால் கட்டளை யிட்டேன் என்று சொல்ல (திரிசங்கு) விமானத்தின் மேலேறி உயரச் சென்றான்.

பதவுரை:

(அழைக்கப்பட்ட கடவுளர்) அரசன் இ புலியற்கு - கௌசிக னுன அரசன் இந்தச் சண்டாளன் பொருட்டு, அனல் துறை முற்றி - யாக காரியத்தை நிறைவேற்றத் தொடங்கி, எம்மை வல்லி விரசுக என்பான் - எம்மை விரைந்து வருக என்று அழைப்பானுனன். என்னே விழுமிது - என்னே சிறப்புடையது, என்று இகழ்ந்து நக்கார் - என்று நிந்தித்துச் சிரித்தார்கள். (கௌசிகனே) புரசை மா களிற்று வேந்தை - கழுத்திடு கயிற்றையுடைய பெரிய யானைப்படையை யுடைய அத் திரிசங்கு மன்னனை நோக்கி, நீ துறக்கம் போக - நீ சுவர்க்கம் செல் வாயாக, யான் ஏ தவத்தின் உரை செய்தேன் - யானே தவத்தினுல்

கட்டளையிட்டேன். என்ன - என்று சொல்ல, (திரிசங்கு) விமானத்து உம்பர் ஓங்கினன் - விமானத்தின் மேலேறி உயரச் சென்றான்.

விசேட உரை:

என்னே விழுமிது, இகழ்ச்சிக் குறிப்பு. களிற்று வேந்து - யானையை ஒத்த வேந்துமாம்.

தேவர்களால் தள்ளுண்ட திரிசங்குவைக் கௌசிகன் வானத்தில் நிற்குமாறு செய்தல்

116. ஆங்கவன் துறக்க மெய்த வமரர்கள் வெகுண்டு நீசன்
ஈங்குவந் திடுவ தென்னே யிருநிலத் தீழிக வென்னத்
தாங்கலில் வீழ்வான் மற்றுத் தாபத சரண மென்ன
ஓங்கின னின்னில் லென்ன வுரைத்துரு மொக்க நக்கான்.

பொழிப்புரை:

அவ்விடம் நின்றும் திரிசங்கு சுவர்க்க மடைய, தேவர்கள் கோபித்துச் சண்டாளன் இவ்விடம் வந்து சேர்வது என்ன நீதி? பூமியைச் சேர்வா யாக என்று தள்ள, தாங்கும் ஆதாரமின்றித் தலை கவிழ வீழ்பவனை திரி சங்கு, முனிவனே நீயே எனக்குப் புகலிடம் என்று கூவ, அது கேட்ட கௌசிகன் நிமிர்ந்து உரத்து (அவ்விடத்தே) நிற்பாயாக என்று சொல்லி இடிபோலச் சிரித்தான்.

பதவுரை:

ஆங்கு அவன் - அவ்விடத்தினின்றும் அத்திரிசங்கு, துறக்கம் எய்த - சுவர்க்கலோகத்தை அடைய, அமரர்கள் வெகுண்டு - தேவர் கள் கோபித்து, 'நீசன் ஈங்கு வந்திடுவது என்னே - சண்டாளன் இவ்விடத்தே அவ்வுடம்போடு வந்து சேர்வது என்ன நீதி?, இரு நிலத்து இழிக என்ன - பெரிய பூமியில் தானே இறங்கிச் சேர்வா யாக என்று தள்ள, தாங்கல் இல் கவிழ்வான் - தாங்கும் ஆதார மின்றித் தலை கவிழ வீழ்பவனை அத்திரிசங்கு, தாபத சரணம் என்ன - முனிவனே நீயே எனக்குப் புகலிடம் என்று கூவ, (அது கேட்ட கௌசிகன்) ஓங்கினன் நில் நில் என்ன உரைத்து - நிமிர்ந்து (அவ் விடத்தே) 'நிற்பாயாக, நிற்பாயாக' என்று சொல்லி, உரும் ஒக்க நக்கான் - இடிபோலச் சிரித்தான்.

விசேட உரை:

இல் - இல்லாமல். கவிழ்தல் - தலைகீழாக வீழ்தல். சரணம் - அபயம், தஞ்சம் என்றுமாம். கௌசிகன் தவவலிமையால் அங் கேயே நில் என நிறுத்தினன் எனக. மற்று - அசைநிலை.

கௌசிகன் வேருக உலகம் முதலிய படைக்கத் தொடங்கல்

117. பேணலா திகழ்ந்த விண்ணோர் பெரும்பத முதலா மற்றைச்
சேண்முழு தமைப்ப லென்னச் செழுங்கதிர் கோளு டிங்கள்
மாணொளி கெடாது தெற்கு வடக்கவாய் வருக வென்று
தாணுவோ டுர்வ வெல்லாஞ் சமைக்குவே னென்னும் வேலை.

பொழிப்புரை:

(கௌசிகன்) 'என்னை மதிக்காமல் இகழ்ந்த தேவர்களது பெரிய பதவி முதலாக மற்றை விண்ணுலகு முழுவதையும் படைப்பேன்' என்று கூறி, சூரியனும் சந்திரனும் கிரகங்களும் நட்சத்திரங்களும் தத்தம் ஒளி குன்றுதவாறு தெற்கு வடக்காக உதித்து அஸ்தமிக்க எனக் கட்டளை செய்து நிலையியல் இயங்கியற் பொருள்களையும் படைத்திடுவேன் என்று தொடங்கும் பொழுது,

பதவுரை:

பேணலாது - (கௌசிகன்) என்னை மதியாது, இகழ்ந்த விண்ணோர் - அமரபதித்த இந்திராதி தேவர்களது, பெரும் பதம் முதல் ஆ - பெரிய பதவி முதலாக, மற்றை சேண் முழுது - மற்றை விண்ணுலகம் முழுவதையும், அமைப்பல் என்னை - அமைப்பேன் என்று சொல்லி, செழுங் கதிர் திங்கள் கோள் நாள் - 'செழுமையான கிரணங்களையுடைய சூரியனும் சந்திரனும் கிரகங்களும் நட்சத்திரங்களும், மாண் ஒளி கெடாது - மாட்சியுடைய ஒளி குன்றுதவாறு, தெற்கு வடக்கு ஆய் வருக என்று - தெற்கே உதயமும் வடக்கே அஸ்தமனமும் உடையவாய் வரக்கடவன்' என்று கட்டளை செய்து, தாணுவோடு ஊர்வ எல்லாம் - நிலையியற் பொருள்களோடு இயங்கியற் பொருள்களும் ஆகிய எல்லாவற்றையும், சமைக்குவென் என்னும் வேலை - படைத்திடுவேன் என்று தொடங்கும் பொழுது,

விசேட உரை:

இது முதல் ஏழு கவிகள் குளகம். கோள் - அங்காரகன் முதலிய கிரகங்கள். நாள் - அசுவினி முதலிய நட்சத்திரங்கள்; ஆகுபெயர். தாணு - நிலையியற் பொருள்; அசரம். ஊர்வ - இயங்கியற் பொருள்; சரம். கோள் - சந்திர சூரியர் ஒழிந்த ஏனைய கிரகங்கள். மாணொளி கெடாமை - சீரிய ஒளி காலத்தாற் குன்றுதிருத்தல்.

தேவர்கள் கௌசிகனைச் சாந்தப்படுத்துதல்

118. நறைத்தரு வுடைய கோனும் நான்முகக் கடவு டானும்
கறைத்தரு கனலு மற்றைக் கடவுளர் பிறருந் தொக்குப்
பொறுத்தருண் முனிவ நின்னைப் புகல்புகுந் தவனைப் போற்றும்
அறத்திற னன்று தாரா கணத்தொடு மமைக வன்னான்.

பொழிப்புரை:

கற்பகத்தருவுடைய இந்திரனும், நான்முகனான பிரமனும், நச்சுக் கண்டத்தனான உருத்திரனும், மற்றத் தேவர்களும் முனிவர்களும் ஒருங்கு கூடி (தேவர்கள் இகழ்ந்ததை) முனிவனே, பொறுத்தருளுக. நின்னைச் சரண் அடைந்தவனைக் கைவிடாது காக்கும் தருமக் குணம் மிக நன்றே. அந்தத் திரிசங்கு நட்சத்திரங்களுடன் சேர்ந்து அமைபவனைக.

பதவுரை:

நறை தரு உடைய கோன் உம் - வாசனை யுடைய கற்பகச் சோலையை இடமாகக் கொண்ட தேவர்கட் கரசனான இந்திரனும், நான் முகக் கடவுள் தான் உம் - நான்கு முகங்களையுடைய பிரம தேவனும், கறை தரு களன் உம் - ஆலகால விடத்தாலுண்டாகிய கறை பொருந்திய கண்டத்தையுடைய உருத்திரனும், மற்றைக் கடவுளர் பிறர் உம் - மற்றைத் தேவர்களோடு ஏனை முனிவர் முதலியோரும், தொக்கு - ஒருங்கு கூடி, முனிவ பொறுத்தருள் - முனிவனே! (தேவர்கள் இகழ்ந்ததை) பொறுத்தருள்வாயாக. நின்னை புகல் புகுந்தவனை - உன்னைச் சரண் அடைந்தவனை, போற்றும் அறம் திறன் நன்று - கைவிடாது காப்பாற்றும் தருமம் பற்றிய குணம் மிக நன்றே. அன்னன் தாரா கணத்தோடு உம் அமைக - அந்தத் திரிசங்கு நட்சத்திரத் தொகுதியுடன் பொருந்தி அமைபவனைக.

விசேட உரை:

களன் - கழுத்து. புகலி புகுதல் - சரணடைதல்.

கௌசிகன் மேற்றிசை சென்று தவமியற்றல்

119. அரசமா தவனீ யாதி யைந்துநாட் டென்பால் வந்துன்
புரைவிளக் கீடுக வென்னைக் கடவுளர் போய பின்னர்
நிரைதவன் விரைவி னேகி நெடுங்கடற் கிறைவன் வைகும்
உரவிட மதனை நண்ணி யுறுதவ முஞற்றுங் காலை.

பொழிப்புரை:

நீ சிறந்த அரச இருடி யாவாய்: (இருபத்தேழு நட்சத்திரங்களுள்) ஐந்து நட்சத்திரங்கள் தென்பால் வந்து உனது பெருமையைத் தெரிவிக்கக் கடவன! என்று தேவர்கள் போனபின்பு, ஒழுங்கராகிய தவத்தோனாகிய கௌசிகன் விரைந்து சென்று வருணன் தங்கும் மேற்குத் திசையை அடைந்து மிக்க தவத்தைச் செய்துவருங் காலத்தில்,

பதவுரை:

அரசன் மா தவன் நீ ஆதி - நீ சிறந்த அரச இருடி யாவாய்; ஐந்து நாள் தென்பால் வந்து உன் புரை விளக்கிடுக - (இருபத்தேழு நட்சத்திரங்களுள்) ஐந்து நட்சத்திரங்கள் தெற்குத் திசையில் வந்து உனது பெருமையைத் தெரிவிக்கக் கடவன, என்னு - என்று சொல்லி, கடவுளர் போய பின்னர் - தேவர்கள் புறப்பட்டுப் போன பின்பு, நிரை தவன் விரைவின் ஏகி - ஒழுங்கான தவத்தை யுடையோனுகிய கௌசிகன் விரைவாகச் சென்று, நெடு கடற்கு இறைவன் வைரும் - பெரிய கடலுக்குத் தலைவனுகிய வருணன் திங்குவதாய, உரம் இடம் அதனை நண்ணி - வலிய மேற்குத் திசையை அடைந்து, உறு தவம் உளற்றும் காலை - மிக்க தவத்தைச் செய்துவரும் காலத்தில்,

விசேட உரை:

ஆதி - ஆவாய்; அனுஷம் கேட்டை மூலம் பூராடம் உத்தராடம் ஆகிய ஐந்து நட்சத்திரங்களும் தென்பால் விளங்குவன. படைப்புக் காலத்தில் இவை வடபாலிருந்தன வென்பர். புரை - பெருமை. நிரை - ஒழுங்கு. வருணன் மேற்குத்திக்குப் பாலகன். உறுதவம் - மிக்கதவம், உளற்றுதல் - செய்தல்.

அம்பரீடன் நரமேதத்திற்கு ஆள்தேடிச் செல்லல்

120. குதைவரி சிலைவாட் டானைக் கோமக னம்ப ரீடன்
சுதைதரு மொழியன் வையத் துயிர்க்குயி ராய தோன்றல்
வதைபுரி புருட மேதம் வகுப்பவோர் மைந்தற் கொள்வான்
சிதையிலன் கனகத் தேர்கொண் டடவிக டுருவிச் சென்றான்.

பொழிப்புரை:

குதையுடைய கட்டமைந்த சிலைகளையும் வாள்களையுமுடைய சேனையையுடைய கோமகனும் அமுதின் இனிமைதரும் மொழியை உடையவனும் உலகத் துயிர்களுக்கு உயிரானவனும் பெருமையிற் சிறந்தவனுமாகிய அம்பரீடன் என்பான், மனிதன் ஒருவனைக் கொன்று ஓமம் செய்வதாய புருட மேதம் புரிதற்காக, வலிமையுடையான் ஒருவனைப் பொருள் தந்து கொள்ளும் பொருட்டு முயற்சியில் குறைவற்றவனுய் பொன்னினனைத் தேர்மேற் கொண்டு வனங்களோறும் தேடிச் செல்பவனுனன்.

பதவுரை:

குதை வரி சிலை - குதையையுடைய கட்டமைந்த விற்களையும், வாள் - வாள்களையுமுடைய, சேனை கோமகன் - சேனையை யுடைய இராசகுமாரனும், சுதை தரு மொழியன் - அமுதத்தின் இனிமை

தரும் இன்சொற்களை யுடையவனும், வையத்து உயிர்க்கு உயிர் ஆய தோன்றல் அம்பரீடன் - உலகத்து உயிர்களுக்கெல்லாம் உயிராக அமைந்துள்ளவனும் பெருமையிற் சிறந்தவனுமாகிய அம்பரீடன், வதை புரி புருட மேதம் வகுப்ப - மனிதன் ஒருவனைக் கொன்று ஓமம் செய்வதாய புருட மேதத்தைச் செய்வதற்காக, ஓர் மைந்தன் கொள் வான் - வலிமையுடையான் ஒருவனைப் பொருள் தந்து கொள்ளும் பொருட்டு, சிதைவு இலன் (முயற்சியில்) குறைவற்றவனும், கனகம் தேர் கொண்டு - பொன்னினைத் தேர்மீது நிறையக் கொண்டு, அட விகள் துருவிச் சென்றான் - காடுகள் தோறும் தேடிச் செல்பவனானான்.

விசேட உரை:

குதை - குலை. (குலையே வில்லின் இருதலைக்குதையே - பிங் கல நிகண்டு). சுதை தரு மொழி - இன்சொல். மேதம் - யாகம். யாகப் பசு காணப்படாதவிடத்து ஒரு மனிதனைக் கொன்று ஓமஞ் செய்து யாகத்தை நிறைவேற்ற வேண்டுமென்பது நூற் றுணிபு. இந்திரனற் கவரப்பட்ட யாகப் பசுவுக்கு ஈடு செய்தற் பொருட்டே அம்பரீடன் அங்ஙனம் மைந்தன் ஒருவனைத் தேடி னான். வைதிக காரியமாகிய யாகத்திற் செய்யப்படும் உயிர் வதை கொலையாகக் கொள்ளப்படுதலில்லை யாதலால் அவன் குண நலன்கள் பேசப்பட்டன வென்க.

அம்பரீடற்கு ரிசிகன் மகற் கொடை நேர்தல்

121. நற்றவ ரிசிகன் வைகு நனைவரும் பழுவம் நண்ணிக்
கொற்றவன் வினவ லோடு மிசைந்தனர் குமரர் தம்முள்
பெற்றவ ளிளவ லெற்கே யென்றனள் பிதாமுன் னென்றான்
மற்றைய மைந்த னக்கு மன்னவன் றன்னை நோக்கி.

பொழிப்புரை:

அங்ஙன் சென்ற அம்பரீடன் நற்றவத்தனை ரிசிக முனிவன் வசிக்கும் சோலையை அணுகி தான் வந்த செய்தியைக் கூறிக்கேட்ட அளவில், ரிசி கன் மனைவி புத்திரர் மூவருள் இளையவன் தனக்கே உரியவன் என்றாள். தந்தையோ மூத்தவன் தனக்கே உரியவன் என்றான். எஞ்சிய நடுப் பிள்ளையான சுனச்சேபன் சிரித்து மன்னனாகிய அம்பரீடனைப் பார்த்து,

பதவுரை:

கொற்றவன் - (அங்ஙனஞ் சென்ற) வெற்றியையுடைய அம்ப ரீடன், நல் தவம் ரிசிகன் வைகும் நனைவரும் பழுவம் நண்ணி - சிறந்த தவவாழ்வினை மேற்கொண்ட ரிசிக முனிவன் வசிக்கும் மலர்கள் மலர் தற் கிடமான சோலையை அடைந்து, வினவ லோடு உம் - (தான்

வந்த செய்தியைச் சொல்லி) கேட்ட வளவில், இசைந்தனர் குமரர் தம்முள் - பொருந்திய தமது புத்திரர் மூவருள், இளவல் எற்கே என்றனள் பெற்றவள் – இளையவன் எனக்கே உரியவன் என்று சொன்னுள் தாயாகிய ரிசிகன் மனைவி; பிதா முன் என்முன் - தந்தையாகிய ரிசிகன் மூத்தவன் எனக்கே உரியன் என்று சொன்னுன்; மற்றைய மைந்தன் - எஞ்சிநின்ற நடு மகனுகிய சுனச்சேபன் என்பான், நக்கு மன்னவன் தன்னை நோக்கி - (தாய் தந்தையரது மனக் கருத்தை உணர்ந்து) சிரித்தவனுய் மன்னனுகிய அம்பரீடனைப் பார்த்து,

விசேட உரை:

முதல் மகன்மீது தந்தையும் ஈற்றவன்மீது தாயும் விசேட அன்பு பாராட்டுதல் உலகியல் வழக்கென அறிக. தந்தைக்குந் தாய்க்கும் கடன் கழிப்போர் முறையே முதல் மகனும் ஈற்றவனு மாதலும் இங்ஙனம் பாராட்டப்படும் அன்பு காரணமாக எழுந்த தொரு வழக்குப் போலும். சுனச்சேபன் நடுவன். அண்ணனுந் தம்பியும் தந்தை தாயரால் மறுக்கப்படத் தானே முன் வந்து வறுமையை நீக்குவான் அரசனுக்குத் தன்னைக் கொள்ளுமாறு கொடுத்தனன் என்பது கதை. நனை - மலர்; தேன். நனை வரும் பழவம் - மலர்கள் மலர்தற்கிடமான காடு. தேன் சொரியும் (மலர் நிறைந்த) காடு என்றுமாம். முன் - முன்பிறந்தோன்; காலவாகு பெயர்.

அம்பரீடன் சுனச்சேபனைப் பெற்றுக் கொண்டு செல்லுகையில் உச்சிப் போதாதல்

122. கொடுத்தருள் வெறுக்கை வேண்டிற் றெற்கமாம் விழுமங் குன்ற
எடுத்தெனை வளர்த்த தாதைக் கென்றவன் றெழுது வேந்தன்
தடுப்பருந் தேரி னேறித் தடையிலர் படர்த லோடும்
சுடர்க்கதிர்க் கடவுள் வானத் துச்சியுஞ் சூழல் புக்கான்.

பொழிப்புரை:

என்னைப் பெற்றெடுத்து வளர்த்த தந்தைக்கு வறுமைத துன்பங் கெடவேண்டிய செல்வத்தைக் கொடுத்தருளுவாயாக என்று கூறி, தந்தையை வணங்கி அரசனது தடுத்தற்கரிய தேரின் மேலேறிச் சிறிதும் தடையில்லாராய்ச் செல்லுகையில் சூரியன் ஆகாயத்தின் நடுவாகிய இடத்தை அடைந்தான்.

பதவுரை:

எனை எடுத்து வளர்த்த தாதைக்கு – என்னைப் பெற்றெடுத்து வளர்த்த தந்தையாகிய ரிசிகனுக்கு, ஒற்கம் ஆம் விழுமம் குன்ற -

வறுமையாகிய இடும்பை கெடும்படி, வேண்டிற்று வெறுக்கை கொடுத்தருள் - விரும்பு மளவினதாகிய செல்வத்தைக் கொடுத்தருள்வாயாக, என்று - என்று கூறி, அவன் தொழுது - தந்தையாகிய அவனை வணங்கி, வேந்தன் தடுப்பு அரு தேரின் ஏறி - அரசனது தடையில்லாத தேரின் மேல் ஏறி, தடை இலர் படர்தலோடு உம் - சிறிதும் தடையில்லாதவராய் இருவரும் செல்லுமளவில், சுடர் கதிர் கடவுள் வானத்து உச்சி அம் சூழல் புக்கான் - ஒளிக் கிரணங்களோடு கூடிய சூரிய தேவன் வானத்தின் மத்திய பாகமாகிய அழகிய இடத்தை அடைந்தான்.

விசேட உரை:

ஒற்கம் – வறுமை. விழுமம் - இடும்பை; வெறுக்கை - செல்வம்; பொன்னுமாம். குன்றுதல் - மெலிந்து கெடுதல். வறுமைத் துன்பம் தானே மெலிந்து கெட எவ்வளவு கொடுக்கவேண்டுமென்பதை உணரத்தக்கவன் நீயே யாதலின் விரும்பும் அளவினை நிர்ணயித்துக் கொடுத்தருள் என்பான் ''விழுமம் குன்ற வேண்டிற்று கொடுத்தருள்'' என்று னென்க. தடுப்பருந் தேர் - யாவராலுந் தடுத்து நிறுத்துதற்கரிய தேர். காரிய சித்தியால் பூரண திருப்தியோடு செல்லும் மன்னன் போலவே சுனச்சேபனும் நன்றிக்கடன் கழித்தானாகி மிக்க மகிழ்ச்சியோடு சென்றான் என்பதை உணர்த்தவே 'தடையிலர்' என்றார்;

சுனச்சேபன் கௌசிகனைக் கண்டு வணங்குதல்

123. அவ்வயி னிழிந்து வேந்த னருங்கடன் முறையி னாற்றச்
செவ்விய குரிசி றனுஞ் சென்றன னியமஞ் செய்வான்
அவ்விய மவித்த சிந்தை முனிவனை யாண்டுக் காணுங்
கவ்வையி னேடும் பாத கமலம துச்சி சேர்த்தான்.

பொழிப்புரை:

அப்பரீடன் கௌசிகன் தவம் புரியும் அவ்விடத்தே தேரினின்று மிறங்கி உச்சிப் போதிற் செய்ய வேண்டிய கடன்களைச் செய்ய, சுனச்சேபனும் அக்கடன்களைச் செய்யத் தேரினின்றும் இறங்கிப் போனான். அவ்விடத்தே பொருமை முதலியவற்றை அழித்த மனத்தினனான கௌசிக முனிவனைக் கண்டு துன்பத்தோடு அவன் பாத தாமரைகளைத் தன தலைமேற் சூடினான்.

பதவுரை:

(அப்போது) வேந்தன் - அரசனாகிய அம்பரீடன், அ வயின் இழிந்து - (கௌசிகன் தவம் புரியும்) அவ்விடத்தே தேரினின்றும்

இறங்கி, அருங் கடன் முறையின் ஆற்ற - உச்சிப்போதில் செய்ய வேண்டிய அரிய கடன்களை முறைப்படி செய்ய, செவ்விய குரிசில் தான் உம் - நேர்மையுடைய பெருமையிற் சிறந்தோனை சுனச்சேபனும், நியமம் செய்வான் சென்றனன் - அக்கடன்களைச் செய்யும் பொருட்டுத் தேரினின்றும் இறங்கிச் சென்றான். ஆண்டு அவ்வியம் அவித்த சிந்தை முனிவனை காணு - அவ்விடத்துப் பொறுமை முதலிய தீய குணங்களை நீக்கிய தூய மனத்தினனாகிய கௌசிக முனிவனைக் கண்டு, கவ்வையினொடு உம் பாத கமலம் அது உச்சி சேர்த்தான் - துன்பத்தோடும் திருவடியாகிய தாமரை மலரைத் தலைமேற் சூடினான்.

விசேட உரை:

அவ்வியம் - பொறுமை. அவித்தல் - அழித்தல், நசித்தலுமாம். எதிராகி நெருங்கிக்கொண்டிருந்த மரணத்தைப் பற்றிய துன்பத்தையே கவ்வை என்றார். கமலமது - சாதியொருமை.

சுனச்சேபன் தன் குறையைக் கௌசிகனிடம் கூறல்

124. விறப்பொடு வணக்கஞ் செய்த விடலையை யினிது நோக்கிச்
சிறப்புடை முனிவ னென்னே தெருமரல் செப்பு கென்ன
அறப்பொரு ளுணர்ந்தோ யென்ற னன்னையுந் தாதை தானும்
உறப்பொருள் கொண்டு வேந்தற் குதவின ரென்ரு னுற்றோன்.

பொழிப்புரை:

அச்சத்தோடு வணக்கஞ் செய்த அந்த மனவலியுடையோனாகிய சுனச்சேபனைச் சிறப்பினையுடைய கௌசிகன் மேன்மையோடும் பார்த்து, நீ கலங்குதல் யாதுகாரணத்தால்? சொல்வாயாக, என்று கேட்க, சரணமென்று வந்தடைந்தோனாகிய அவ்விளைஞன், தருமத்தின் பொருளை உணர்ந்தோய்! என் அன்னையும் தந்தையும் மிக்க பொருள் பெறுதலையே கருத்திற் கொண்டு என்னை (நரமேதத்தின் பொருட்டு) அம்பரீடனுக்குக் கொடுத்துவிட்டார்கள் என்றான்.

பதவுரை:

விறப்பொடு வணக்கம் செய்த விடலையை - அச்சத்தோடு வணக்கஞ் செய்த மன வலியுடையோனாகிய சுனச்சேபனை, சிறப்பு உடை முனிவன் இனிது நோக்கி - எல்லாச் சிறப்புக்களையுமுடைய தவத்தோனாகிய கௌசிகன் மேன்மை விளங்குமாறு பார்த்து, தெரு மரல் செப்புக என்ன - நம்பிக்கையற்றவனைபோலே! சொல்வாயாக என்று கேட்க, அறம் பொருள் உணர்ந்தோய் - தருமத்தின் உண்மைப் பொருளை உணர்ந்த அறிஞ!, என் தன் அன்னை உம் தாதை தான் உம் - என்னுடைய தாயும் தந்தையும், உற பொருள் கொண்டு - மிக்க செல்

வத்தைப் பெறுதலையே கருத்திற் கொண்டு, வேந்தற்கு உதவினர் என்றான் - (நரமேதத்தின் பொருட்டு) அரசனுகிய அம்பரீடனுக்கு என்னைக் கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னன்.

விசேட உரை:

விறப்பு - அச்சம்; அது சான்றோரை அண்மியவிடத்துத் தோன்றும் மனவொடுக்கம். அரணைத் தான் அமைந்திருத்தலை விளக்குமாறு கௌசிகன் நோக்கிய நோக்கினையே இனிது நோக்கி என்றார். தெருமரல் - நம்பிக்கையற்றிருத்தல். அது வியங்கோளாகி நம்பிக்கையற்றிராதே என்னும் பொருளதாயிற்று. தெருமரல் சுழலலுமாம். அறப் பொருள் - தருமத்தின் உண்மைப் பொருள்; தருமரகசியம். தருமநூல்களின் உட்பொருள் எனினு மமையும்; ஆயின், அறம் காரியவாகு பெயர். உறப் பொருள் கொண்டு - மிக்க செல்வத்தைப் பெற்றுக்கொண்டு என்றுமாம்.

கௌசிகன் சுனச்சேபனுக்குப் பிரதியாகத் தன் மக்களில் ஒருவனைச் செல்லுமாறு கூறல்

125. மைத்துன னோடு முன்னுள் வழங்கிய முறைமை கேளாத்
தத்துற லொழிநீ யானே தடுப்பெனின் னுயிரை யென்று
புத்திரர் தம்மை நோக்கிப் போகவேத் தோடு மென்ன
அத்தகு முனிவன் கூற வவர்மறுத் தகறல் காண

பொழிப்புரை:

தனக்கு முன் பிறந்தவள், மைத்துனனுகிய ரிசீகனுடன் மகனைக் கொடுத்த செய்கையைக் கேட்டு, கௌசிகன் (சுனச்சேபனை நோக்கி) 'நீ துன்பத்தினின்றும் நீங்குவாயாக, நானே உன் உயிரைக் காப்பேன்' என்று கூறித் தன் மைந்தர்களைப் பார்த்து (உங்களில் ஒருவன்) அரசனோடு போகக் கடவன் என்று சொல்ல, மைந்தரனைவரும் அக்கட்டளையை மறுத்து நீங்குதலைப் பார்த்து,

பதவுரை:

முன்னோன் - தன் முன்பிறந்தவள், மைத்துனனோடு - (அவள் கணவனை) மைத்துனனுகிய ரிசீகனுடன், வழங்கிய முறைமை கேளா - (நரமேதத்திற்குப் பிள்ளையைக்) கொடுத்துவிட்ட செய்கையைக் கேட்டு, அ தகு முனிவன் - அந்தத் தகுதியை யுடைய கௌசிக முனிவன், நீ தத்து உறல் ஒழி - நீ துன்பமடைதலினின்றும் நீங்குவாயாக!, யான் ஏ நின் உயிரைத் தடுப்பென் - நானே உன் உயிரை நீங்காதவாறு காப்பேன், என்ன - என்று கூறி, புத்திரர் தம்மை

நோக்கி வேந்தொடும் போக என்னு கூற - தனது மக்களைப் பார்த்து (நரமேதத்தின் பொருட்டு இவனுக்கு ஈடாக உங்களில் ஒருவன்) போகக் கடவன் என்று சொல்ல, அவர் மறுத்து அகறல் காணு - அவர் ஒவ்வொருவரும் மறுத்து நீங்குதலைக் கண்டு,

விசேட உரை:

இது குளகம். சுனச்சேபன் கௌசிகன் மருகன்; உடன் பிறந்தவள் மகன். தந்து - பீடை. தடுத்தல் - காத்தல். புத்திரர் - வசிட்டனுலிறந்தவர் போக எஞ்சிய மக்கள்.

மறுத்த மைந்தரைக் கௌசிகன் சபித்தல்

126. **எழுங்கதி ரவனும் நாணச் சிவந்தன னிருக ணெஞ்சம்**
புழுங்கினன் வடவை தீய மயிர்ப்புறம் பொறியிற் றுள்ள
அழுங்கலில் சிந்தை யிர்நீ ரடவிக டோறுஞ் சென்றே
ஒழுங்கறு புளிஞ ராகி யுறுதுய ருறுக வென்றான்.

பொழிப்புரை:

சூரியனும் நாண இருகண்களும் சிவந்து மனம் புழுங்கினவனுகிய கௌசிகன், வடவைத்தீயும் தீயும்படி உரோமத்துவாரங்கள் அனற்பொறிகளைச் சிந்த, (சினந்து தன்மைந்தர்களை நோக்கி) அச்சமற்ற மனத்தை உடையவர்களே, நீங்கள் வேடர்களாகிக் காடுகளிலே திரிந்து மிக்க துயரினை அடைவீராக எனச் சபித்தான்.

பதவுரை:

எழும் கதிரவன் உம் நாண - உதிக்கும் சூரியனும் வெள்கும்படி, இருகண் சிவந்தனன் நெஞ்சம் புழுங்கினன் - இரண்டு கண்களும் சிவந்து மனம் புழுங்கியவனுகிய கௌசிகன், வடவை தீய மயிர்ப் புறம் பொறியின் துள்ள - வடவைத்தீயும் தீய்ந்து போகும்படி உரோமத் துவாரங்கள் அனற் பொறிகளைச் சிந்த, (சினங் கொண்டு தன் புதல்வர்களை நோக்கி) அழுங்கல் இல் சிந்தையீர் - அச்சமற்ற மனத்தினை யுடையவர்களே, நீர் ஒழுங்கு அறு புளிஞர் ஆகி அடவிகள் தோறு உம் சென்று - நீவிர் நன்னடையில்லாத வேடுவர்கள் ஆகிக் காடுகளிலெல்லாம் போய், உறு துயர் உறுக என்றான் - மிக்க துன்பத்தை அடைவீராக என்று சபித்தான்.

விசேட உரை:

சிவந்தனன் புழுங்கினன் - சிவந்து புழுங்கினன். வடவை தீய - வடவையும் தீய. வடவை - வடவாமுகாக்கினி. அழுங்

கல் - அச்சம். தவத்தோனும் தந்தையுமாகிய ஒருவன் உரைத்ததைச் சிறிதும் மதித்திலீர் என்பார் அழுங்கலில் சிந்தையீர் என்றார். அழுங்கல் இரங்கலுமாம். புளிஞர் - வேடர்.

சுனச்சேபனுக்குக் கௌசிகன் இரண்டு மந்திரங்களை உபதேசித்தல்

127. மாமுனி வெகுளி தன்னுல் மடிகலா மைந்தர் நால்வர்
தாமுறு சவர ராகச் சபித்தெதிர் சலித்த சிந்தை
ஏமுற லொழிக வின்னே பெறுகென விரண்டு விஞ்சை
கோமரு கனுக்கு நல்கிப் பின்னரும் குறிக்க லுற்றான்.

பொழிப்புரை:

வசிட்ட முனிவனது கோபத்தால் இறவாதிருந்த தன்மைந்தர் நால்வரும் இழிகுணம் பொருந்திய வேடர்களாகும்படி (கௌசிகன்) சபித்து எதிரில் நின்ற சலனமுற்ற மனத்தினனான மருமகனுக்கு மயங்குதல் ஒழிக, இப்போதே இரு மந்திரங்களைப் பெறுக என்று சொல்லிக் கொடுத்து மீண்டும் கூறுவானுயினன்.

பதவுரை:

மாமுனி வெகுளி தன்னுல் - பெருமை பொருந்திய வசிட்டமுனிவனது கோபத்தால், மடிகலா மைந்தர் நால்வர் தாம் - இறவாத புத்திரர் நால்வரும், உறு சவரர் ஆக - (இழிகுணம்) பொருந்திய வேடர்கள் ஆகும்படி, சபித்து - சாபங் கொடுத்து, எதிர் சலித்த சிந்தை கோ மருமகனுக்கு - தன் எதிரில் சலனமுற்ற மனத்தினனுகி நின்ற மருமகனுக்கு, ஏ உறல் ஒழிக - துன்பமுற்று மயங்குதலை நீக்குவாயாக, இன்னே இரண்டு விஞ்சை பெறுக - இப்பொழுதே இரு மந்திரங்களை (நான் உபதேசிக்க) பெற்றுக் கொள்வாயாக, என நல்கி பின்னர் உம் - என்று கொடுத்து மீண்டும், குறிக்கல் உற்றான் - சுட்டிக் கூறுவானுனன்.

விசேட உரை:

மா - பெருமை. மாமுனி கோபத்தாலிறந்தவர் போக, பட்டம் பெற்ற ஒருவனும், பின்பிறந்த ஹவிஷ்யந்தன், மனுஷ்யந்தன், தீருடநேத்திரன் ஆகிய மூவருமே மைந்தர் நால்வரும் என்பர். நால்வரும் என்ற முற்றும்மை தொக்கது. சவரர் - காட்டிலிருந்து கத்துவோர். சலித்தல் - சலனமுறுதல், துன்பப் படுதலுமாம். சலிப்பு கௌசிக புத்திரருக்குத் தன்னுல் இக்கதி நேர்ந்ததே என்றதனுல் பிறந்தது; ஏம் - (துன்பத்தால்) மயங்குதல். குறித்தல் - சுட்டுதல்.

சுனச்சேபனுக்குக் கௌசிகன் விடைகொடுத்தல்

128. அரசனே டேசி யூபத் தணைக்குபீம் மறையை யோதின்
விரசுவர் விண்ணு ளோரும் விரிஞ்சனும் மிடைவ லோனும்
உரைசெறி வேள்வி முற்று முன்னுயிர்க் கீறுண் டாகா
பிரசமென் குரா வென்னப் பழிச்சொடும் பெயர்ந்து போனன்.

பொழிப்புரை:

தேன் பொருந்திய மாலையை உடையவனே! அம்பரீடனுடன் சென்று யூபத்தறியிற் கட்டும்போது இம்மந்திரங்களைச் சொன்னால் தேவரும், பிரமனும், சிவனும் (அவிர்ப்பாகம் பெற) வந்து சேருவர். யாகமும் பூர்த்தியாகும். உன் உயிருக்கும் முடிவு உண்டாகாது என்று சொல்ல (அது கேட்ட சுனச்சேபன்) கௌசிகனைத் துதித்து அவ்விடத்தை நீங்கிச் சென்றான்.

பதவுரை:

பிரசம் மெல் தாராய்! - தேன் பொருந்திய மென்மையான மாலையை உடையவனே! *அரசனெடு ஏகி* - அரசனுகிய அம்பரீடனோடு சென்று, *யூபத்து அணைக்குபு* - யூபத்தறியிற் கட்டும்போது, *இ மறையை ஓதின்* - இந்த மந்திரங்களைச் சொன்னால், *விண் உளோர்* உம் - தேவர்களும், *விரிஞ்சன் உம்* - பிரமனும், *விடை வலோனும்* - இடபவாகனத்தை யுடைய எல்லாம் வல்லவனுகிய சிவனும், *விரசுவர்* - (அவிர்ப்பாகம் பெற) வந்து சேர்வர். *உரை செறி வேள்வி முற்றும்* - புகழ்மிக்க யாகமும் பூர்த்திபெறும்; *உன் உயிர்க்கு ஈறு உண்டாகா என்ன* - உனது உயிருக்கும் முடிவு உண்டாகாது என்று சொல்ல, (அது கேட்ட சுனச்சேபன்) *பழிச்சொடு உம் பெயர்ந்து போனன்* - துதி செய்தலுடனே (அவ்விடம்) நீங்கி (அரசனுடன்) சென்றான்.

விசேட உரை:

யூபம் - யாகப்பசு கட்டுந்தறி; *விரிஞ்சன்* - சிருட்டிப்பவன். *வலோன்* - எல்லாம் வல்லவனுகிய சிவன்; *பழிச்சல்* - துதித்தல்.

அம்பரீடன் வேள்வி முடித்தலும் கௌசிகன் வடதிசை செல்லலும்

129. மறைமுனி யுரைத்த வண்ண மனத்துற மைந்த னுயர்
சிறையுறு கலுழ னன்னஞ் சேமுதற் பிறவு முரும்
இறைவர்தொக் கமரர் சூழ விளவறன் னுயிரும் வேந்தன்
முறைதரு மகமுங் காத்தார் வடதிசை முனியுஞ் சென்றான்.

பொழிப்புரை:

கௌசிகமுனிவன் உபதேசித்தபடியே மனவலியுடையனுகிய சுனச் சேபன் (யூபத்திற் கட்டியபோது) மனம் பொருந்தித் தியானிக்க விஷ்ணு பிரமன் சிவன் முதலாய தலைமையோர் தேவர்கள் சூழ வந்துசேர்ந்து அக் குமாரனது உயிரையும், அவ்வரசனது யாகத்தையும் பாதுகாத்தார்கள். கௌசிகமுனிவனும் வடதிசைக்குச் சென்ருன்.

பதவுரை:

மறை முனி உரைத்த வண்ணம் - வேத வல்லுநனுகிய கௌசிக முனிவன் உபதேசித்தபடியே, மைந்தன் - மனவலியுடையவனுகிய சுனச்சேபன் (யூபத்திற் கட்டியபோது) - மனத்து உற ஆய - மனத்தில் பொருந்தித் தியானிக்க, சிறை உறு கலுழன் - இறகு பொருந்திய கருடனும், அன்னம் - அன்னமும், சே - இடபமும், முதல் பிற உம் ஊரும் இறைவர் - முதலிய மற்றை வாகனங்களும் ஊர்திகளாகக் கொண்டு செல்லும் தலைமையோர், அமரர் சூழ – தேவர்கள் தம் மைச் சூழ்ந்துவர, தொக்கு - வந்து கலந்து, இளவல் தன் உயிரும் – அக்குமாரனது உயிரையும், முறை தரு வேந்தன் மகம் உம் - வேத விதிப்படி செய்யப்படும் அவ்வரசனது யாகத்தையும், காத்தார் - பாதுகாத்தார்கள், முனி உம் - கௌசிக முனிவனும், வடதிசை சென் ருன் - (தவத்தை முடித்தற்காக) வடக்குத் திக்கின்கண் சென்ருன்.

விசேட உரை:

ஆயல் – தியானித்தல்: இறைவர் - தலைமையோர்; பிறவும் என்றது வெள்ளையானை, எருமைக்கடா, ஆட்டுக்கடா முதலிய வற்றை. இந்திரனுக்கு வெள்ளையானையும் யமனுக்கு எருமைக் கடாவும் அக்கினிக்கு ஆட்டுக்கடாவும் ஊர்திகளாம்.

கௌசிகன் தவத்தால் உலகங்கள் சலித்தல்

130. வடதிசை முளிவு நண்ணி மலர்க்கரம் நாசி வைத்தாங்
கிடவுபயிங் கலையா னைய விதயத்து டெழுத்தொன் றெண்ணி
விடாதுபல் பருவ நிற்ப முலமா முகடு விண்டு
தடாதிருட் படலை முடச் சலித்ததெத் தலமுந் தாவி.

பொழிப்புரை:

கௌசிகன் வடதிசையை யடைந்து அவ்விடத்தே தன் கைவிரல் களை நாசியில் வைத்து இடைகலையானது பிங்கலையோடு அடங்க மனத் திலே மகாமந்திரமாகிய பிரணவத்தைத் தியானித்துப் பல வருடங்கள்

நிலைத்து நிற்க மூலாக்கினியினுலே கபாலம் வெடித்து விரிந்து இருளின் பரந்த வடிவினதாய புகைத்திரள் தடுக்கப்படாமல் எழுந்து மறைக்க எல்லா உலகமும் நடுங்கிற்று.

பதவுரை:

முனி உம் - கௌசிக முனிவனும், வடா திசை நண்ணி - வட திசையை அடைந்து, ஆங்கு மலர்க் கரம் நாசி வைத்து - இறைவனுக்காக மலரைத் தேடும் கரங்களை நாசியில் வைத்து, இடாவு பிங்கலை நய - இடை கலையானது பிங்கலையோடு அடங்கும்படி (பிராணயாமஞ் செய்து), இதயத்தூடு எழுத்து ஒன்று எண்ணி - மனத்தினுள்ளே ஏகாட்சரமும் மகாமந்திரமுமாகிய பிரணவ மந்திரத்தைத் தியானித்துக் கொண்டு, பல் பருவம் விடாது நிற்ப - பலவருட காலம் நீங்காது நிலைத்து நிற்க, மூல மா முகடு விண்டு - மூலாக்கினியினுலே பெருமை பொருந்திய கபாலம் வெடித்து விரிந்து, இருள் படலை - இருளின் பரந்த வடிவினதாய புகைத்திரள், தடாது தாவி - தடுக்கப்படாது மேலே எழுந்து, மூட - எல்லாவிடங்களையும் மறைக்க, எ தலம் உம் - எல்லா உலகமும், சலித்தது - நடுங்கியது.

விசேட உரை:

அவன் இடைகலை பிங்கலை நையச் சுழுமுனையில் பிராணவாயுவை நிறுத்திச் சுவாசபந்தனஞ் செய்தா னென்க. இடைகலை பிங்கலை தச நாடிகளைச் சேர்ந்தவை. இடைகலை – இடைகலை நாடி வழி. இடமூக்கால் வரும் சுவாசம். பிங்கலை - பிங்கலை நாடி வழி, வலமூக்கால் வரும் சுவாசம். சுழுமுனை - இடைகலைக்கும் பிங்கலைக்கும் நடு நாடி.

"ஆரிய னல்லன் குதிரை யிரண்டுள
வீசிப் பிடிக்கும் விரகறி வாரில்லே"

"பிரானன் மனத் தோடும் பேராதடக்கிப்
பிராண னிருக்கிற் பிறப்பிறப் பில்லே"

"ஏற்றி யிறக்கி யிருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லே
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றைப் பிடிக்கும் குறியது வாமே"

"இட்ட தவ்வீ டிளகா தியேசித்துப்
புட்டிப் படத்தச நாடியும் பூரித்துக்
கொட்டிப் பிரானன் சுபானனுங் கும்பித்து
நட்டம் இருக்க நமனிலைத் தாமே"

"கூடம் எடுத்துக் குடிபுக்க மங்கையர்
ஓடுவர் மீளுவர் பன்னிரண் டங்குலம்
நீடுவர் எண்விரல் கண்டிப்பர் நால்விரல்
கூடிக் கொளிற்கேல அஞ்செழுத் தும்மே"

எனத் திருமந்திரங் கூறும் பிராணயாம இரகசியங்கள் சிந்திக்கத் தக்கன. வடதிசை வடாதிசை என எதுகை நோக்கி விகாரப் பட்டது. பிங்கலை யால் - ஆல், ஒடுவின் பொருளாது. முகடு - கபாலத்தின் உச்சி. மூலமா முகடு - அண்டகோளத்தின் மேல்முகடுமாம். படலை - பரந்தவடிவு. எழுத்து ஒன்று என்றது பிரணவ மந்திரத்தை.

கௌசிகன் தவக்கனலால் புகை விம்முதல் 131 — 132

வேறு

131. எயிலெ ரித்தவன் யானையு ரித்தநாட்
பயிலு றுத்துரி போர்த்தநன் பண்பெனப்
புயலெ ரித்தெழுந் தாலெனப் பூதலம்
குயிலு றுத்திக் கொழும்புகை விம்மவே.

பொழிப்புரை:

திரிபுர தகனஞ் செய்த சிவன், யானையை உரித்த காலத்தில் அவ்வி யானையின் தோலை உடலிற் பொருந்தப் போர்த்துக் கொண்ட தன்மை போலவும், மேகங்கள் பரந் தெழுந்தமை போலவும், பூமி முழுவதையும் நெருங்கச் செய்து மிகுந்த புகையானது மிகுதியாக.

பதவுரை:

எயில் எரித்தவன் - திரிபுரங்களையும் தகனஞ் செய்த சிவன், யானை உரித்த நாள் - யானையை உரித்த காலத்தில், உரி பயில் உறுத்து போர்த்த - அவ்வியானையின் தோலை (உடம்போடு) செறியச் செய்து போர்த்துக் கொண்ட, நல் பண்பு என - நல்ல தன்மை போல வும், புயல் விரித்து எழுந்தால் என - மேகங்கள் எங்கும் பரந்து எழுந்தாற் போலவும், பூதலம் குயில் உறுத்தி - பூமி முழுவதையும் நெருக்கி, கொழு புகை விம்ம - மிக்க (மூலாக்கினியின்) புகையானது மிகுதியாக.

விசேட உரை:

இது குளகம். எயில் - நகரம். யானை, தாருகாவனத்து இரு டிகளால் ஏவப்பட்டது. விரித்து - விரிந்து. வலித்தல் விகாரம். குயிலுறுத்தல் - நெருக்குதல்.

132. தமந்தி ரண்டுல கியாவையுந் தாவுறு
நிமிர்ந்த வெங்கதிர்க் கற்றையு நீங்குறக்
கமந்த மாதிரக் காவலர் கண்ணெடுஞ்
சுமந்த நாகமுங் கண்சும் புளித்தவே.

பொழிப்புரை:

இருள் திரண்டு உலகங்கள் எல்லாம் பரவி நிற்க, சூரியனது வெம்மையாகிய கிரணத் தொகுதியும் மறைக்கப்பட, நிறைந்த திக்குப் பாலகர் கண்களுடனே பூமியைத் தாங்கும் திக்கு யானைகளின் கண்களும் கூசின.

பதவுரை:

தமம் திரண்டு – இருளானது மிகுந்து ஒருங்கு கூடி, உலகு யாவை உம் தாவுற - உலகங்கள் எல்லாம் பரவி நிற்க, நிமிர்ந்த வெம் கதிர் கற்றை உம் நீங்குற - பரந்த வெம்மையாகிய சூரிய கிரணத் தொகுதியும் மறைக்கப்பட் டொழிய, கமந்த மாதிரம் காவலர் கண்ணெடு உம் - நிறைந்துள்ள திக்குப் பாலகர்களது கண்களுடனே, சுமந்த நாகம் கண் உம் - பூமியைத் தாங்கும் திக்கு யானைகளின் கண்களும், சும் புளித்த - கூசின.

விசேட உரை:

தமம் - இருள். கமம் - நிறைவு. மாதிரம் - திக்கு, மாதிரக் காவலர் கிழக்காதி முறையே இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்போர். திக்கு யானைகள் கிழக்காதி முறையே, ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீபம் என்பன. ஐராவதம் முதலிய திக்குயானைகள் எட்டுமே பூமியைத் தாங்கி நிற்கின்றன என்பது புராணக் கொள்கை. சும் புளித்தல் - கூசுதல்.

கௌசிகன் தவத்தால் உலகத்துத் தோன்றிய மாறுபாடு

133. திரிவ நிற்ப செகதலத் தியாவையும்
வெருவ லுற்றன வெங்கதிர் மீண்டன
கருவி யுற்ற ககனமெ லாம்புகை
உருவி யுற்றிட வும்பர் துளங்கினர்.

பொழிப்புரை:

(உலகை நிலைநிறுத்துதற்கு) துணைக்காரணமான மேகங்கள் நிறைந்த ஆகாயம் முழுவதும் புகை ஊடுருவிச் சென்றதனால், உலகின் இயங்

கியற் பொருள்களும் நிலையியற் பொருள்களுமாய எல்லாம் அஞ்சின. சூரிய கிரணமும் திரும்பின. தேவர்களும் நடுங்கினர்கள்.

பதவுரை:

கருவி உற்ற ககனம் எலாம் - (உலகை நிலை நிறுத்துதற்கு) துணைக் காரணமாக அமைந்த மேகங்கள் நிறைந்த ஆகாயம் முழுவதும், *புகை உருவி உற்றிட* - புகை ஊடுருவி நிறைந்தமையால், *செகம் தலத்து* - உலகமாய இடத்திலே, *திரிவ* - சஞ்சரிப்பனவாகிய இயங் கியற் பொருள்களும், *நிற்ப* - (சஞ்சரித்தலின்றி) நிற்பனவாகிய நிலையியற் பொருள்களும், *வெருவல் உற்றன* - அஞ்சுதலை யடைந் தன; *வெம் கதிர் மீண்டன* - வெம்மையாகிய சூரியகிரணங்களும் (சென்று ஒளி செய்யாமல்) திரும்பின; *உம்பர் துளங்கினர்* - தேவர் களும் நடுங்கினர்கள்.

விசேட உரை:

கருவி என்றது உலகை நிலை நிறுத்துதற்குத் துணைக்காரண மாய மேகங்களை; உறுதல் – நிறைதல். ககனம் - ஆகாயம். திரிவ - சரப்பொருள்கள். நிற்ப - அசரப் பொருள்கள். துளங் குதல் - நடுங்குதல்.

தேவர்கள் கௌசிகனைச் சந்தித்தல்

134. **புண்ட ரீகனும் புட்டிரு பாகனும்**
குண்டை யூர்தி குலிசியு மற்றுள
அண்டர் தாமும்வந் தவ்வயி னெய்தியே
றெண்ட போதனன் றன்னை யெதிர்ந்தனர்.

பொழிப்புரை:

பிரமனும் திருமாலும் சிவனும் இந்திரனும் மற்றுள தேவர்களும் வந்து அவ்விடத்தே சேர்ந்து தவத்தினனை கௌசிகனைச் சந்தித்தார்கள்.

பதவுரை:

புண்டரீகன் உம் - தாமரை மலரில் வாழ்வோனுகிய பிரமனும், *புள் திரு பாகன் உம்* - கருடாழ்வானுக்குச் சிறந்த பாகனுகிய திருமாலும், *குண்டை ஊர்தி (உம்)* - இடபத்தை ஊர்தியாகவுடைய சிவனும், *குலிசி உம்* - வச்சிராயுதத்தை யுடைய இந்திரனும், *மற்று உள அண்டர் தாம் உம்* – மற்றுமுள்ள தேவர்களும், *வேறு வந்து அவ்வயின் எய்தி* - வேறுவேறுக வந்து அவ்விடத்தே சேர்ந்து, *எண் தபோதனன் தன்னை* - மதிக்கப்படுகிற தவமாகிய பெருஞ்செல்வத்தை உடையோனைய கௌசிகனை, *எதிர்ந்தனர்* - சந்தித்தார்கள்.

விசேட உரை:

புண்டரீகம் - தாமரை; புள் - கருடப்புள்; குண்டை - இடபம்; குலிசம் - வச்சிராயுதம்; வேறு **எண் தபோதனன்** எனக் கொண்டு மற்றைய முனிவரினும் விசேடித்து எண்ணப்படுகிற தபோதனன் எனினும் பொருந்தும்.

தேவர்கள் கௌசிகனை நீ பிரமவிருடி யாவாய் எனல்

135. பாதி மாமதி சூடியும் பைந்துழாய்ச்
சோதி யானுமத் தூய்மல ராளியும்
வேத பாரகர் வேறிலர் நீயலால்
மாத போதன வென்ன வழங்கினர்.

பொழிப்புரை:

பிறைச்சந்திரனைச் சூடிய சிவனும், துளசிமாலையை யணிந்த திருமாலும், அத்திருமாலின் உந்திக் கமலத்தை இடமாகக் கொண்ட பிரமனும், 'சிறந்த தவச்செல்வனனை முனிவனே! வேதங்களின் கரையைக் கண்டவரில் நீயே யல்லது ஒருவரில்லை' எனக் கூறினர்.

பதவுரை:

பாதி மா மதி சூடி உம் - பிறையாகிய உயர்ந்த சந்திரனைச் சடாமுடியிலணிந்த சிவனும், பைந் துழாய் சோதியான் உம் - பசுமை பொருந்திய துளசிமாலையை அணிந்த ஒளிவடிவினனான திருமாலும், அ தூய் மலர் ஆளி உம் - அத்திருமாலின் பரிசுத்தமான உந்திக் கமலத்தை இடமாகக் கொண்ட பிரமனும், (முனிவனை நோக்கி) மா தபோதன - சிறந்த தவச் செல்வத்தை யுடைய முனிவனே!, வேத பாரகர் நீ அலால் வேறு இலர் - 'வேதங்களின் கரையினைக் கண்டவருள் (உன்னை யொப்பார்) நீயே யல்லது வேறொருவர் இல்லை', என்ன வழங்கினர் - என்று கூறினர்கள்.

விசேட உரை:

பாதி மாமதி - பாதியாக அமைந்த உயர்ந்த சந்திரன். ஆளி - ஆள்வோன். பாரகர் - கரைகண்டவர். இதனால் 'நீ பிரம விருடியாவாய்' என்று மும்மூர்த்திகளும் கூறியது உணர்த்தப் பட்டது; பிரம விருடி - பிராமண விருடி; சிவன் முத்தனைய இருடி.

தேவர்கள் தம்மிடஞ் சார்தல்

136. அன்ன வாசகங் கேட்டுண ரந்தணன்
சென்னி தாழ்த்திரு செங்கம லங்குவித்
துன்னு நல்வினை யுற்றதென் றேங்கினன்
துன்னு தேவர்தஞ் சூழலுட் போயினர்.

பொழிப்புரை:

(திரிமூர்த்திகளின்) அந்த வாசகத்தைக் கேட்டறிந்த பிரமவிருடியாகிய கௌசிகமுனிவன், தலைவணங்கி இருகரங்களையுங் கூப்பி, யாவரும் கருதும் புண்ணியப் பயன் வந்து பொருந்திற்று என மனம் பூரிப்படைந்தான். வந்த உயர்ந்தோராய திரிமூர்த்திகளும் தத்தம் மிடத்திற்குச் சென்றார்கள்.

பதவுரை:

அன்ன வாசகம் - (திரிமூர்த்திகளின்) அந்த வார்த்தையை, கேட்டு உணர் அந்தணன் - செவிமடுத்து அறிந்த பிரம இருடியாய கௌசிகமுனிவன், சென்னி தாழ்த்து இரு செம்கமலம் குவித்து - தலை வணங்கித் தாமரை மலர் போன்ற இரு கரங்களையுங் கூப்பி, உன்னும் நல்வினை - யாவரும் கருதும் பெரும் புண்ணியத்தின் பயன், உற்றது என்று ஓங்கினன் – (எனக்குவந்து) பொருந்திற்று என்று பூரிப்படைந்தான். துன்னு தேவர் - அவ்விடத்தே வந்து பொருந்திய உயர்ந்தோராய திரிமூர்த்திகள், தம் சூழல் உள் போயினர் - தத் தம் மிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

விசேட உரை:

அந்தணன் - அழகிய தண்ணளி யுடையோனைய முனிவன், ஈண்டு பிராமண இருடியாகிய, அதாவது சிவன் முத்தநிலை யெய்திய கௌசிகனை உணர்த்திற்று, தேவர் - உயர்ந்தோர் (திரிமூர்த்திகள்). சிவனுக்குரிய சிவலோகத்தையும், திருமாலுக்குரிய வைகுந்தலோகத்தையும், பிரமனுக்குரிய சத்தியலோகத்தையுமே தம் சூழல் என்றார்.

கௌசிகன் வரலாற்றைச் சதானந்தன் முடித்தல்

137. ஈது முன்னர் நிகழ்ந்த திவன்றனை
மாத வத்துயர் மாண்புடை யாரிலை
நீதி வித்தகன் றன்னரு ணேர்ந்தனிர்
யாது மக்கரி தென்றன னீறிலான்

பொழிப்புரை:

இது முன்னர் நடந்தேறிய நிகழ்ச்சியாகும். இம்முனிவனுக்கு இணையாக மாதவத்தானுயர்ந்த மாட்சிமை யுடையார் யாருமில்லை. நீதியின் அறிவின் உருவினனை இம்முனிவனது கருணையைப் பெற்றுள்ளீர்கள். உங்கட்கு அரியது யாது? என்று (இராம இலக்குமணருக்கு) சொல்லி முடித்தான், இறவாத புகழினனை சதானந்த முனிவன்.

பதவுரை:

ஈது முன்னர் நிகழ்ந்தது - இந்த வரலாறே முன்னர் நிகழ்ந்த நிகழ்ச்சியாகும். இவன் துணை மாதவத்து உயர் மாண்பு உடையார் - இவனுக்கு ஒப்பாகப் பெருந் தவத்தாற் சிறந்த மாட்சிமை உடைய வர், இலை - பிறரொருவர் இல்லை. நீதி வித்தகன் தன் அருள் நேர்ந் தனிர் - நீதியின் அறிவுடைமையின் உருவினனை இம் முன்னிவன்றன் கருணையைப் பெற்றுள்ளீர்கள். உமக்கு அரிது யாது - இனி உமக்கு அரிய காரியம் யாதுளது?, என்றனன் - என்று (இராம இலக்குமண ருக்கு) சொல்லி முடித்தான்; ஈறு இலான் - இறவாத புகழினை உடை யவனை சதானந்த முனிவன்.

விசேட உரை:

ஈது - இங்ஙனம் கூறப்பட்ட வரலாறு. துணை - ஒப்பு; நீதி வித்தகன் - சத்தியம் அறிவுடைமை என்பவற்றின் வடிவினன். நேர்தல் - பெறுதல். ஈறிலாமை ஈண்டு புகழின் மேனின்றது.

சதானந்தன் இராம இலக்குமணரை வாழ்த்திச் செல்லல்

138. என்று கோதமன் காதலன் கூறிட
வென்றி வீரர் வியப்பொ டுவந்தெழா
ஒன்று மாதவன் ருடொழு தோங்கிய
பின்றை யேத்திப் பெயர்ந்தனன் றன்னிடம்.

பொழிப்புரை:

என்று கௌதமமுனிவன் குமாரனை சதானந்தன் சொல்ல வெற்றி வீரர்களாகிய இராம இலக்குமணர் அதிசயத்தோடு கேட்டு மகிழ்ந் தெழுந்து அம்முனிவனை வணங்கி உயர்ச்சி பெற்றபின்பு அம்முனிவனை (அவர்களை) வாழ்த்தித் தன்னிடத்துக்குச் சென்றனன்.

பதவுரை:

என்று கோதமன் காதலன் கூறிட - என்று இங்ஙனம் கௌதம முனிவனின் குமாரனை சதானந்தன் சொல்ல, வென்றி வீரர் - வெற் றியை யுடைய வீரர்களாய இராம இலக்குமணர், வியப்பொடு உவந்து எழா - அதிசயத்துடன் மகிழ்ந்து எழுந்து, ஒன்றும் மா தவன் தாள் தொழுது ஓங்கிய பின்றை - பொருந்தின பெருமை யுடைய தவத்தினனை சதானந்த முனிவனது திருவடிகளில் வீழுந்து வணங்கி உயர்ச்சி பெற்ற பின்பு, ஏத்தி தன் இடம் பெயர்ந்தனன் - (அம்முனிவன் குமாரர்களை) வாழ்த்தித் தன்னிடத்துக்குச் சென்ற னன்.

விசேட உரை:

ஓங்குதல் - உயர்தல். ஓங்கிய என்றது முனிவன் உளம்மலர உண்டாய உணர்ச்சியை.

இராமபிரான் சீதையை எண்ணியவண்ணை மிருத்தல்

139. முனியுந் தம்பியும் போய்முறை யாற்றமக்
கினிய பள்ளிக ளெய்தினர் பின்னிருட்
கனியும் போலிபவன் கங்குலுந் திங்களும்
தனியுந் தானுமத் தையலு மாயினன்.

பொழிப்புரை:

கௌசிக முனிவனும் இலக்குமணனும் சென்று வழக்கப்படி தத்தமக்கு என அமைக்கப்பட்ட இனிய படுக்கைகளை அடைந்தார்கள். பின்பு கருமையில் இனிமை உருப்பெற்றது போன்ற இராமபிரான் இராவும், சந்திரனும் தனிமைப்பாடும் தானும் அச்சீதாதேவியுமாக ஆயினனே.

பதவுரை:

முனி உம் தம்பி உம் - கௌசிக முனிவனும் தம்பியாகிய இலக்குமணனும், போய் முறையால் - சென்று வழக்கப்படி, தமக்கு இனிய பள்ளிகள் எய்தினர் - தத்தமக்கு என அமைக்கப்பட்ட இனிய படுக்கைகளை அடைந்தார்கள். பின் இருள் கனி உம் போல்பவன் - பின்னர், கருமையில் இனிமை வடிவுகொண்டாற் போன்றவனாகிய இராமபிரான், கங்குல் உம் - இராவும், திங்கள் உம் - சந்திரனும், தனி உம் - தனிமைப்பாடு என்ற நிலையும், தான் உம் - தானும், அ தையல் உம் - அந்தச் சீதாதேவியுமாக, ஆயினன் - ஆனன்.

விசேட உரை:

இருட் கனியும் - உம்மை இசைநிறை; இருள் - கருமை, கனி - இனிமை. இருட் கனியும் போல்பவன் - கருமையில் இனிமை உருவு கொண்டாலன்னவன். கங்குலும் திங்களும் தனிமையில் காதல் நோயை மிக வளர்ப்பவை. சீதாதேவியின் நினைவு மனத்தை முழுதுமாகப் பற்ற இராமபிரான் தன்வச மிழந்த நிலையை, "தானுமத் தையலுமாயினன்" என்றார். 'கங்குலுந் திங்களுந் தனியுந் தானும் தையலுமாயினன்' என்ற உயர்திணையொருமை முடிபு "தானுந் தேரும் பாகனும் வந்தென் நலனுண்டான்" என்பது போல. இருட் கனியும் போல்பவன் - கனிய கனிபோல்பவ னெனினுமாம். உம்மையை எச்சமாகக் கொண்டு காயாமலரும், பாலனும் முதலியன போலன்றி இருட்கனியும் போல்வன் என உரைப்பினு மமையும்.

சீதாதேவியின் உரு வெளிப்பாடு நோக்கி இராமபிரான் தன்னுட் கூறுதல் 140 — 147

140. விண்ணி னிங்கிய மின்னுரு விம்முறை
பெண்ணி னன்னலம் பெற்றதுண் டேகொலோ
எண்ணி னீதல தொன்றறி யேனிரு
கண்ணி னுள்ளுங் கருத்தினுங் காண்பலால்.

பொழிப்புரை:

மேகத்திற் பிரிந்த மின்னலி னுருவம் இவ்வாறு பெண்ணின் பேரழகி னைப் பெற்று வந்தது உண்டோ? எண்ணுமிடத்து இதையன்றி வேறொன்று தெரிகிலேன். அவ்வடிவினைக் கண்களினுள்ளும் மனத்தினுள்ளும் நான் காணுகிறேன்.

பதவுரை:

விண்ணின் நீங்கிய மின் உரு - மேகத்தினின்றும் பிரிந்த மின்ன லின் வடிவம், *இ முறை* - இவ்வாறு, *பெண்ணின் நல் நலம் பெற் றது உண்டு ஏ கொல் ஓ* - பெண்ணினது பேரழகைப் பெற்று வந் தது உண்டோ?, *எண்ணின்* - ஆராயின், *ஈது அலது ஒன்று அறி யேன்* - இத்தன்மையே யன்றி வேறு ஒன்றும் தெரிந்திலேன். *இரு கண்ணின் உள் உம் கருத்தின் உம் காண்பன்* - அவ்வடிவினை இரு கண் களினுள்ளும் மனத்தினுள்ளும் (இடையறாது) காண்கின்றேன்.

விசேட உரை:

கன்னிமாடத்தே, ''மின்னின் மின்னிய மேனி கண்டான்.'' இங்கே அதற்கமைய, 'மின்னுரு பெண்ணி னன்னலம் பெற்றது' என உருவெளிப்பாட்டினும் மயங்கின னென்க. பார்க்குமிட மெங்கும் அவ்வுருவே தோன்றியதாலும், மனத்தால் மற்றெண் ணறைப் பற்ற முடியாமையாலும் 'கண்ணினுள்ளும் கருத்தினும் காண்பன்' என்றனென்க. இராமபிரானது அகப் புறக் கண்க ளில் தேவியின் உருவமே நிறைந்திருந்த தென்க; நன்னலம் - பேரழகு; ஆல், வியப்பு. காண்பன், காலவழுவமைதி;

141. வள்ளற் சேக்கைக் கரியவன் வைகுறும்
வெள்ளப் பாற்கடல் போன்மிளிர் கண்ணினுள்
அள்ளற் பூமக ளாகுங்கொ லோவென
துள்ளத் தாமரை யுள்ளுறை சின்றதால்.

பொழிப்புரை:

இரப்போருக்கு இல்லையென்னாது கொடுப்பவனாகிய திருமால் தங்கும் சயனமாகிய வெள்ளப் பாற்கடல் போன்ற பெருமையுடைய கண்ணினளாகிய அவள் (சீதாதேவி) எனது உள்ளத் தாமரையுள் உறைகின்றதால் தாமரை மலரில் வாழ்கிற திருமகளாவளோ?

பதவுரை:

வள்ளல் கரியவன் - இரப்போருக்கு இல்லையென்னாது கொடுப்பவனாகிய திருமால், வைகுறும் சேக்கை - தங்கும் சயனமாகிய, வெள்ளப் பாற்கடல் போல் மிளிர் கண்ணினுள் - வெள்ளமாகிய பாற்கடல் போன்ற பெருமையினையுடைய கண்களையுடைய அவள் (சீதாதேவி), எனது உள்ளம் தாமரையுள் - எனது மனமாகிய தாமரை மலரினுள், உறைகின்றதால் - வந்து நீங்காது வசிப்பதனால், அள்ளல் பூமகள் ஆகும் கொல் ஓ - சேற்றிலுண்டாகும் தாமரை மலரில் வாழ்கின்ற திருமகள் ஆவளோ?

விசேட உரை:

வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் பெருங்கருணைக் கொடையுடைமையே கரியவன் வள்ளன்மை. சேக்கை - சயனம். மிளிர் - பெருமை. பாற்கடலுக்கு அமிழ்துடைமையும் கண்ணுக்கு அமிழ்த நோக்குடைமையும் பெருமைதரும் பொதுமை என்க. அமிழ்த நோக்கு, ஆன்மாக்களுக்குப் பிறவி வேரறுக்க நெறிசெய்யும் அருட் பார்வை. வள்ளற் சேக்கை எனக் கொண்டு வள்ளலாகிய ஆதிசேடனாகிய சேக்கை என்றும், வள்ளச் சேக்கை எனப் பாடங் கொண்டு, தோணியெனப் பாற்கடல் மீது கிடக்கும் ஆதிசேடனாகிய சேக்கை என்றும் உரைப்பாருளர். வெள்ளம் பாற் கடல் எனப் பிரித்துரைக்கினு மமையும். அள்ளல் - சேறு. தாமரையுள் ளுறைதல், தாமரை மலரிடத்து நீங்காதுறைதல். 'அள்ளற் பூமகளாகுங் கொல்' என்பது ஐயவணி.

142. அருளி லாளெனி னும்மனத் தாசையால்
வெருளு நோய்விடக் கண்ணின் விழுங்கலால்
தெருளி லாவுல கிற்சென்று நின்றுவாழ்
பொருளெ லாமவள் பொன்னுரு வாயவே.

பொழிப்புரை:

கருணைத்திறம் இல்லாதவளே யாயினும் என்மனத்தெழுந்த வேட்கை, கலக்கமடைவிக்கும் விரகமாக, விடம் போன்ற தன் கண்களினால் என்னை

முற்றுக உட்கொண்டு விட்டதனுல், தெளிவற்ற இந்த உலகின் சர அசர மான எல்லாப் பொருள்களும் அங்கங்கையின் அழகுருவாயே அமைந்து விட்டன.

பதவுரை:

அருள் இலாள் எனின் உம் - கருணைத்திறம் இல்லாதவள் ஆயினும், மனத்து ஆசை – என்மனத்து அவளால் எழுந்த வேட்கையானது, வெருளும் நோய் - கலக்கமடைவிக்கும் விரகமாக, விடம் கண்ணின் விழுங்கலால் - விடம் போன்ற கண்களினுல் முற்றுக (என்னை) உட்கொண்டு விட்டதனுல், தெருள் இலா உலகில் சென்று நின்று வாழ் பொருள் எலாம் – தெளிவற்ற இந்த உலகின் சரம் அசரம் எனத் தங்கி வாழ்கின்ற எல்லாப் பொருள்களும், அவள் பொன் உரு ஆய - அச் சீதாதேவியின் அழகின் வடிவமாயே அமைந்துவிட்டன.

விசேட உரை:

நோய் நோக்கு நோக்கி மருந்தாகாமையே ஈண்டு அருளிலாமை. ஆசை - வேட்கை. நோய் – விரகம்; காமநோய். முதலிற் றேன்றிய வேட்கை கண்ணின் விழுங்கலால் விரகமாயிற்று என்பது. பொன்னுரு - அழகின் வடிவம்; அழகு வடிவெடுத்தாலன்ன வள் என்பது. ஆசையால், ஆல், அசை. விழுங்கல், தன்வச மிழக்குமாறு முற்றுகப் பற்றி விடல். 'ஆசையால் வெருளும் நோய் விடக் கண்ணின் விழுங்கலால்' என்பதற்கு, 'காதலினுல் அஞ்சுதற்குக் காரணமான காமநோயைத் தருகிற விடம் போன்ற கண்களால் (அவள் என்னை) உட்கொண்டதனுலும்' என்றும், 'என் காதலால் கலக்கமடைவிக்கும் காமநோய் நீங்குமாறு என் கண்களால் நான் அவளை விழுங்கிவிட்டமையின்' என்றும் உரைப் பாருமுளர். இதனுல் ஐங்கணை யவத்தைகளுள் முதலிரு அவத்தைகளாய சுப்பிர, விப்பிர யோக நிலைகள் உணர்த்தப்பட்டன.

143. பூணு லாவிய பொற்கல சங்களென்
ஏணி லாகத் தெழுதல வென்னினும்
வாணி லாமுறு வற்களி வாய்மதி
காண லாவதொர் காலமுண் டாங்கொலோ.

பொழிப்புரை:

ஆபரணங்கள் அசையப் பெற்ற பொற்கலசங்கள் போலும் தனங்கள் பெருமையை யிழந்த என் மார்பிடை அழுந்திப் பதியாதவிடத்தும், கொடிய

சந்திரிகை போலும் இளநகை யுடைய கொவ்வைக்கனி யனைய வாயினை யுடைய முகமாகிய சந்திரனை மீண்டும் பார்க்கக் கூடுவதொரு காலம் மீண்டும் உண்டாகுமோ?

பதவுரை:

பூண் உலாவிய பொற் கலசங்கள் - ஆபரணங்கள் அசையப் பெற்ற பொன்னாலான கலசங்கள் போலும் தனங்கள், என் ஏண் இல் ஆகத்து - பெருமையை இழந்த எனது மார்பிடத்தே, எழுதல என்னின் உம் - அழுந்தப் பதிதலைப் பெறுவாயின என்றபோதும், வாள் நிலா முறுவல் - (காதலருக்கு) கொடுமை செய்யும் சந்திரிகை போன்ற இளநகை யுடைய, கனி வாய் - கொவ்வைக்கனி போலும் வாயினையுடைய, மதி - முகமாகிய சந்திரனை, காணல் ஆவது ஓர் காலம் உண்டு ஆம் கொல் ஓ - பார்க்கக் கூடுவதொரு காலம் மீண்டும் உண்டாகுமோ?

விசேட உரை:

பொற்கலசங்கள் - மாசற்ற பொன்னினாற் செய்த கலசங்களன்ன தனங்கள்; பொன், அழகுமாம். ஏண் - பெருமை; வலியுமாம். எழுதல் - அழுந்தப் பதிதலைப் பெறுவாயின. பொற்கலசங்கள் எழுதல் என்றபோது என்னுகம் பெருமையை இழந்த தாயிற்று என்ரு னென்க. சந்திரிகைபோல இளநகையும் காதலர்க்கு இன்ப உணர்ச்சியை மிகுதிப் படுத்தி மிக்க வேதனை செய்வதால் வாள் நிலா முறுவல் என்ரான். வாள் - கொடுமை. கலசம் - தனங்கள்; மதி - முகம்; இவை உவமவாகு பெயர்கள். இதனால் வெதுப்புறு நிலையாய சோகம் உணர்த்தப்பட்டது.

144. வண்ணை மேகலைத் தேரொன்று வாளைநெடுங்
கண்ணி ரண்டு கதிருலா தாமிரண்
டுண்ணி வந்த நகையுமென் ருென்றுண்டால்
எண்ணுங் கூற்றினுக் கித்தனை வேண்டுமோ.

பொழிப்புரை:

மேகலையை அணிந்த தேர்த்தட்டைப் போன்ற அல்குல் ஒன்றும், கொடுமை செய்யும் கண்கள் இரண்டும், ஐஸ்வரியமாக அமைந்த தனங்களிரண்டும், மனமாகிய உள்ளிடத் திருந்தெழுந்த இளநகை என்ற ஒன்றும் உள்ளன. என்னைக் கொல்ல எண்ணும் கூற்றினுக்கு இத்தனை கருவிகளும் வேண்டுமோ?

பதவுரை:

வண்ணை மேகலை தேர் ஒன்று - அழகிய மேகலாபரணத்தை யணிந்த தேர்த்தட்டுப் போன்ற அல்குல் ஒன்றும், வாள் நெடு கண்

இரண்டு - கொடுமை செய்வனவும் நீண்டு காதளவோடியவையுமாகிய கண்களிரண்டும், கதி முலை தாம் இரண்டு - ஐஸ்வரியமாக அமைந்த தனங்கள் இரண்டும், உள் நிவந்த நகை என்ற ஒன்று உம் - உள்ளிடத்திருந் தெழுந்த இளநகை என்ற ஒன்றும், உண்டு - உள்ளன. எண்ணும் கூற்றினுக்கு - என்னைக் கொல்ல எண்ணுகிற கூற்றுக்கு, இத்தனை வேண்டும் ஓ - இத்தனை கருவிகளும் வேண்டுமோ?

விசேட உரை:

அல்குல் முதலிய ஒவ்வொன்றுமே என்னைக் கொல்வதற்குப் போதியது என்பது கருத்து. வண்ணம் - அழகு; தேர் - தேர்த் தட்டென அமைந்த அல்குல்; உவமையாகு பெயர். கதி - ஐஸ்வரியம். கதிமுலை - பெருந்தனமாய தனங்கள். உள் நிவந்த நகை என்றது, மனத்தகத்தே உருவாகிய காதலை உணர்த்துவான் எழுந்த இளநகையை. இதனால் மோக நிலை யெய்தியது உணர்த்தப்பட்டது.

145. கன்ன லின்கருப் புச்சிலை யான்விரைப்
பொன்னை முன்னிய பூங்கணை மாரியால்
என்னை யெய்து தொலைக்குமென் றுலினி
வன்மை யென்னு மிதாரிடை வைகுமே.

பொழிப்புரை:

கரும்பு வில்லினையுடைய மன்மதன் சருக்கரையினும் இனிய தெய்வ மணங்கமழும் மகாலக்குமியை ஒத்தவளான அந்நங்கையை நீங்கிந்து வருந்த மலர்க்கணைகளாகிய மழையினால் ஊறுபடுத்தி என்னை அழிக்குமே யாயின் வலிமை என்று சொல்லப்படுங் குணம் யார்மாட்டு நிலைக்கும்?

பதவுரை:

கருப்பு சிலையான் - கரும்பு வில்லினையுடைய மன்மதன், கன்னல் இன் விரை பொன்னை முன்னிய பூ கணை மாரியால் - சருக்கரையினும் இனிய தெய்வமணங் கமழும் மகாலக்குமியை யொத்தவளான அந்நங்கையை நீங்கிந்து வருந்த மலர்க் கணைகளாகிய மழையினால், எய்து என்னைத் தொலைக்கும் என்றுல் - ஊறுபாடு செய்து என்னை அழிக்குமே யாயின், இனி வன்மை என்னும் இது - இனிமேல் வலிமை என்று சொல்லப்படுங் குணம், ஆரிடை வைகும் - யார்மாட்டு நிலைக்கும்?

விசேட உரை:

கன்னல் - சருக்கரை. இன் - இனிய, விரை - வாசனை; அது தெய்வ மணத்தைக் குறித்து நின்றது; பொன் - மகாலக்குமி.

முன்னுதல் - கருதுதல் (நினைந்து வருந்துதல்). எய்தல் - ஊறு படுத்தல். இற்றை யெல்லைவரை எவனோயுந் தீண்டுதலில்லாத நெறி கைவந்த மனத்தினளை என்னை முன்னிய எய்து தொலைக்கு மென்றல், அசைதலில்லாத மனத்தின் வன்மை யென்னு மிது ஆரிடை வைகும் என்று னென்க. விரை - விரைந்து எனினுமாம். ஈண்டும் மோகநிலையை உணர்த்தினு ரென்க.

146. கொள்ளை கொள்ளக் கொதித்தெழு பாற்கடற்
பள்ள வெள்ள மெனப்பட ரும்நிலா
உள்ள உள்ள உயிரைத் துருவிட
வெள்ளை வண்ண விடமுமுண் டாங்கொலோ.

பொழிப்புரை:

(உலகினை) கொள்ளை கொள்ளுதற்குப் பொங்கியெழும் பாற்கடலின் ஆழ்ந்த நீர் வெள்ளம் போலப் பரவியுள்ள சந்திரிகை யானது அங்ங் கையை நினைக்க நினைக்க என் உயிரைத் துளைத்தலால் வெண்மை நிறத்த தொரு விடமும் உலகில் உள்ளது போலும்.

பதவுரை:

கொள்ளை கொள்ள - (உலகினை) முற்றுகக் கவர்ந்து தன்வசமாக் குதற்கு, கொதித்து எழு பாற்கடல் பள்ள வெள்ளம் என - பொங்கி எழுகின்ற பாற்கடலினது ஆழ்ந்த நீர் வெள்ளம் போல, படரும் நிலா - பரவியுள்ள சந்திரிகை யானது, உள்ள உள்ள - நினைக்குந்தோ றும், நினைக்குந்தோறும், உயிரை துருவிட - என் உயிரைத் துளைத்த லால், வெள்ளை வண்ண விடம் உம் - வெள்ளை நிறத்தைப் பெற்ற விடமும், உண்டு ஆம் கொல் ஓ - உலகில் உண்டு போலும்!

விசேட உரை:

உள்ள உள்ள உயிரை என்பதற்கு, 'அந்நங்கையை உள்ளு வதனற் பிழைத்துள்ள உயிரை' எனிலோ உள்ளாதவழிப் பிழைக் காத உயிர் என்றுமாதலால் அது பொருந்தா தென்க. துரு வுதல் - துளைத்தல்; அது சிறிது சிறிதாக ஊறுபடுத்தி யழித்தல். விடம் கரியது; நிலா வெள்ளியது. விடத்தின் செயலையே நிலா வும் செய்தலால் வெள்ளை வண்ண விடமு முண்டாங் கொலோ என்று னென்க. நிலாவுக்கும் விடத்துக்கும் பொதுமை அழித் தல். இதுவும் மோகநிலையா மென்க.

147. ஆகு நல்வழி யல்வழி என்மனம்
ஆகு மோவதற் காகிய காரணம்
பாகு போல்மொழிப் பைந்தொடி கண்ணியே
ஆகும் வேறிதற் கையுற வில்லையே.

பொழிப்புரை:

செல்லுதற் கமைந்த நல்ல நெறியின் கண்ணன்றித் தீய நெறியின் கண் என்மனம் செல்லுமோ? என்மனம் அவள்பாற் சென்றமைக்காகிய காரணம் பாகுபோல் மொழியினை யுடைய பசும்பொற் றொடியினளாகிய அந்நங்கை கன்னியே யாவள். இதற்கு ஐயப்பா வேண்டுவ தொன்றில்லை.

பதவுரை:

ஆகும் நல்வழி அல்வழி - செல்லுதற் கமைந்த சீரிய நல்ல நெறி யின்கண்ணன்றித் தீய நெறியின்கண், என் மனம் ஆகும் ஓ - எனது (பரிசுத்தஞ் செய்யப்பட்ட) மனம் செல்லுமோ?, அதற்கு ஆகிய காரணம் - அந்நங்கையிடத்து என்மனம் சென்று பொருந்தியதற் கான காரணம், பாகு போல் மொழி பைந்தொடி கன்னி ஏ ஆகும் - சருக்கரையைப் பாலிற் காய்ச்சிய குழம்புபோலினிய சொற்களை யுடைய பசும்பொற் றொடியினளாய அவள் என்னுல் விரும்பப்படத் தக்க என்றும் அழிவற்ற பிரகாசமுடைய திருமணமாகாத கன்னியே யாவள். இதற்கு வேறு ஐயுறவு இல்லை - இம்முடிபுக்கு வேறுய சந் தேகப்பட வேண்டுவதில்லை.

விசேட உரை:

ஆகுதல் - நிகழ்தல்; செல்லுதல்; நல்வழி - நல்ல நெறி; சீரிய ஒழுக்கம். அல்வழி - பிறன்மனை நயத்தல். பாகு - சருக்கரை யைப் பாலிற் காய்ச்சிய குழம்பு. பைந்தொடி - பசும் பொன்னு லாகிய தொடியை உடையளாய சீதாதேவி; மூன்றும் வேற்று மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. கன்னி - விரும்பப்படுபவளும் பிரகாசமுடையவளும் அழிவற்ற வளும் கற்புக் கெடாதவளும் இளமை நீங்காதவளும் திருமண மாகாதவளுமாய இளம் பெண். ஐயப்பாடு, பிறன்மனையாதல் கூடுமோ என எழும் சந்தேகம். இது கருதியே என்மனம் அல் வழியிற் குமோ என்று னென்க. சான்றோர் தம் மனச்சாட்சியையே பிரமாணமாகக் கொள்வர் என அறிக. என்மனம் நல்வழி ஆகும்; அல்வழி ஆகுமோ என உரைப்பினு மமையும்.

சந்திரன் மறைதல் 148 – 149

148. கழிந்த கங்கு லரசன் கதிர்க்குடை
விழுந்த தென்னை மேற்றிசை வாள்கூடக்
கொழுந்து சேர்ந்துதற் கோதறு சுட்டிபோய்
அழிந்த தென்னை மாற்றந்து தீங்களே.

பொழிப்புரை:

இறந்துபோன இரவாகிய அரசனது ஒளியுடைய வெண்கொற்றக் குடையானது கீழே விழுந்தது போலவும், மேற்குத் திசையாகிய பெண்ணினது ஒளிக் கொழுந்து பொருந்திய நெற்றியிலணிந்த குற்றமற்ற சுட்டியென்னும் அணியானது அழிந்தது போலவும் சந்திரன் மேல்கடலில் ஆழ்ந்தது.

பதவுரை:

கழிந்த - இறந்துபோன, *கங்குல் அரசன்* - இரவாகிய அரசனது, *கதிர்க்குடை விழுந்தது என்ன உம்* – ஒளிவீசும் வெண்கொற்றக் குடை கீழே விழுந்தது போலவும், *மேல் திசையாள்* - மேற்குத் திசையாகிய பெண்ணினது, *சுடர் கொழுந்து சேர் நுதல் கோது அறு சுட்டி* - ஒளிக் கொழுந்து பொருந்திய நெற்றியிலணிந்த மாசற்ற சுட்டி என்னும் அணியானது, *போய் அழிந்தது என்ன உம்* - கெட்டழிந்தது போலவும், *திங்கள் ஆழ்ந்தது* - சந்திரன் மேல்கடலில் மூழ்கியது.

விசேட உரை:

'கங்குலரசன்', 'மேற்றிசைப் பெண்' அஃறிணைப் பொருள்களுக்கு உயர்திணைப் பண்பேற்றிக் கூறப்பட்டது. குடைவீழ்தல் அரசனது வீழ்ச்சியையும், சுட்டியழிதல் அவன் தேவியின் துக்க நிலையையும் உணர்த்துமாறு.

149. ஈசு கின்ற நிலாச்சுடர் வீந்ததால்
ஈச னுமதி யேகவுஞ் சோகத்தாற்
பூசு வெண்கல வைப்புனை சாந்தினை
ஆசை மாத ரழித்தன ரென்னவே.

பொழிப்புரை:

தலைவனாகிய சந்திரன் பிரிந்து சென்ற அளவில், திசைகளென்ற அவன் தேவியராகிய காதன் மகளிர் தாம் பூசிய சந்தனக் குழம்பைத் துயரினால் அழித்தனர் என்னத் திசைகளெங்கும் பரந்திருந்த நிலாவின் ஒளி ஒழிந்தது.

பதவுரை:

ஈசன் ஆம் மதி - தலைவனாகிய சந்திரன், *ஏகவும்* - பிரிந்து போன அளவில், *ஆசை மாதர்* – திசைகளென்ற அவன் தேவியராகிய காதன் மகளிர், *பூசு வெண் கலவை புனை சாந்தினை* - பூசப்பட்டுள்ள வெண்ணிறக் கலவைச் சந்தனத்தை, *சோகத்தால் அழித்த*

னர் என்னு- துயரத்தினுல் அழித்துவிட்டார்கள் என்று சொல்லும் படி, வீசுகின்ற நிலா சுடர் வீந்தது - திசைகளெங்கும் பரந்திருந்த நிலாவின் ஒளி ஒழிந்தது.

விசேட உரை:

ஈசனும் மதி ஏக ஆசை மாதர் பூசு வெண் கலவைப் புனை சாந்தினை அழித்தனர் என்ன என்பது தற்குறிப் பேற்றவணி. ஆசை மாதர் - வேட்கையுடைய காதன் மகளிர். வீசுகின்ற, காலவழுவமைதி. புலரிக் காலமாயிற்று என்பதாம்.

வேறு

சூரியன் தோன்றுதல்

150. தகையுமலர்த் தாரண்ணல் இவ்வண்ணம்
மயலுழந்து தளரு மேல்வைச்
சிதையுமனத் தீடருடையச் செங்கமல
முகமலரச் செய்ய வெய்யோன்
புதையிருளி னெழுகின்ற புகர்முகயா
னையினுரிவைப் போர்வை போர்த்த
உதயகிரி யெனுங்கடவு ளுதலிலிருந்த
விழியேபோ லுதயஞ் செய்தான்.

பொழிப்புரை:

நெருங்கிய மலர்மாலையை யணிந்த இராமபிரான் இவ்வாறு மயக்கத் தால் வருந்தித் தளரும் போது, செங்நிறச் சூரியனுனவன் சிதையும் அவன் மனத்தின் ஈடர் நீங்கவும் செந்தாமரை மலர்கள் மலரவும், புள்ளிகளை யுடைய முகத்தோடு தோன்றும் இருளாகிய யானையின் தோலைப் போர்த்த உதயகிரியாகிய சிவன் நெற்றியிற் புறப்பட்டுவிட்ட கண்ணேபோல உதித் தலைச் செய்தான்.

பதவுரை:

தகையும் மலர் தார் அண்ணல் - நெருங்கிய மலர் மாலையை யணிந்த பெருமையிற் சிறந்தோனுகிய இராமபிரான், இ வண்ணம் மயல் உழந்து - இவ்வாறு விரக மயக்கத்தால் வருந்தி, தளரும் எல்வை - தளருகிற காலத்தில், செய்ய வெய்யோன் - செந்நிற முடைய சூரியன், சிதையும் மனத்து இடர் உடைய - நிலை குலை யும் அவன் மனத்துயரம் நீங்கவும், செங்கமல முகம் மலர - செந் தாமரை மலர்களாகிய முகங்கள் மலரவும், புதை இருளின் எழு கின்ற புகர் முகம் யானையின் - ஆழ்ந்த இருளாகிய உயர்ந்து தோன்

றுகிற புள்ளிகளையுடைய முகத்தோடு தோன்றும் யானையினது, உரிவை போர்த்த - தோலாகிய போர்வையைப் போர்த்த, உதய கிரி எனும் கடவுள் - உதயகிரியாகிய சிவன், நுதல் கிழித்த விழி ஏ போல் - நெற்றியில் புறப்படவிட்ட நெருப்புக் கண்ணே போல, உத யம் செய்தான் - உதித்தலைச் செய்தான்.

விசேட உரை:

சிதையுமனத்திடர் என்றது மேற்கூறிய இடரை. இருளில் மறைந்துள்ள உதயகிரிக்கு யானையுரி போர்த்த சிவனும், சூரி யனுக்கு அக்கடவுளது நெற்றிக் கண்ணும், யானையின் முகத்துப் புகருக்கு உதயத்துத் தோன்றும் நட்சத்திரங்களும் உவமைக ளாம். கொழுநனுகிய சூரியனைப் பிரிந்ததால் சிதையும் மனத் திடருடைய செங்கமலம் எனக் கொள்ளினு மமையும். சிதையும் மனத்திடருடைய இராமபிரான் செங்கமல முகமலர என்று உரைக்கினும் பொருந்தும். எல்வை - காலம்.

வெயில் பரவுதல்

151. விசையாடற் பசும்புரவிக் குரமிதிப்ப
உதயகிரி விரிந்த நூளி
பசையாக மறையவர்கைந் நறைமலரு
நிறைபுனலும் பரந்து பாய
அசையாத நெடுவரையின் முகடுதொறு
மினங்கதிர்சென் றணைந்து வெய்யோன்
தினசமாரு மதகரியைச் சிந்தூர
மப்பியபோற் சினந்த மாதோ.

பொழிப்புரை:

வேகமும் வலிமையு முடைய (சூரியன் தேரிற் பூட்டப்பட்ட) பச்சைக் குதிரைகளின் காற்குளம்புகள் மிதித்தலால் உதயகிரியில் எழுந்து பரவிய செங்துகள்கள் பசையாகுமாறு மறையவர் கைதூவும் தேன் மலர்களும் நீரும் பரந்து பாய (அத்தூளி கொண்டு) சூரியன் கீழ்த்திசையாளும் மத யானைக்குச் சிந்தூர திலகத்தை அப்பியதுபோல அசையாத அவ்வுதயகிரி யின் சிகரங்களில் இளங்கிரணங்கள் சென்று படிந்து செந்நிற முடையன வாயின.

பதவுரை:

விசை ஆடல் பசு புரவி - வேகமும் வலிமையுமுடைய (சூரியன் தேரிற் பூட்டப்பட்ட) பச்சைநிறக் குதிரைகளின், குரம் மிதிப்ப -

காற்குளம்புகள் மிதித்தலால், உதயகிரி விரித்த தூளி - உதயகிரியில் எழுந்து பரவிய துகள்கள், பசையாக - பசையாகும்படி, மறையவர் கை நறை மலர் உம் நிறை புனல் உம் - வேதமோதுதலை யுடையவ ரது கைகளா லெடுத்திடப்படும் தேன் ஒழுகும் மலர்களும் கைகளா லூற்றப்படும் மாட்சிமையுடைய நீரும், பரந்து பாய - பரவிப் பாய் தலினால், (பசையான செந்துகள்களைக் கொண்டு) வெய்யோன் திசை ஆளும் மத கரியை - வெம்மையையுடைய சூரியன் கீழ்த்திசையைக் காத்தலைச் செய்யும் மதயானைக்கு, சிந்தூரம் அப்பிய போல் - சிந் தூர திலகத்தை அப்பியதைப் போல, அசையாத நெடு வரையின் முகடு தொறும் - சலனமற்ற நெடிய அவ்வுதயகிரியின் சிகரங்களி லெல்லாம், இள கதிர் சென்று அளைந்து சிவந்த - இளங்கிரணங்கள் சென்று படிந்து செந்நிறமுடைய வாயின.

விசேட உரை:

திசையாளும் மதகரியைச் சிந்தூர மப்பியபோல் என்பது தற் குறிப் பேற்றவணி. மறையவர் - வேதமோதுதலை யுடையவர்; நிறை - மாட்சிமை. நிறைநீர் - மாட்சிமையுடைய அர்க்கிய சலம். அசையாமை - சலனப்படாமை; அளைதல் - சார்ந்து படி தல்.

பொய்கைகளில் தாமரை மலர்தல்

152. பண்டுவருங் குறிபகர்ந்து பாசறையிற்
பொருள்வயினிற் பிரிந்து போன
வண்டுதொடர் நறுந்தெரிய லுயிரனைய
கொழுநர்வர மணித்தே ரோடும்
கண்டுமனங் களிசிறப்ப வொளிசிறந்து
மெலிவகலுங் கற்பினர் போற்
புண்டரிக முகமலர வகமலர்ந்து
பொலிந்தனபூம் பொய்கை யெல்லாம்.

பொழிப்புரை:

(தலைவியரைப் பிரிய) முன்பு தாம் மீண்டுவரும் கால எல்லையைக் கூறி, (போர்கருதி) பாசறைக்காயினும் பொருளீட்டுதற்காயினும் பிரிந்து சென்ற வண்டு தொடரும் மணமாலைகளை யணிந்த தம்முயிருக் கொப் பானவரான தலைவர் அழகிய தேரோடும் மீண்டு வரக்கண்டு மனம் மிகப் பூரிக்க காந்தி பொலியப் பெற்றுத் தளர்வு நீங்கிய கற்புடைத் தலைவியர் போலத் தாமரை முகங்கள் மலர அழகிய தடாகங்கள் எல்லாம் அகம் மலர்ந்து பொலிவன வாயின.

பதவுரை:

பண்டு - (தம் தலைவியரைப் பிரிவதற்கு) முன்பு, வரும் குறி பகர்ந்து - மீண்டுவரும் கால எல்லையைக் கூறி, பாசறையின் - பாச றைக்கண் பகைமேற் செல்லல் காரணமாகவாயினும், பொருள் வயி

னின் - பொருள் மேற் செல்லல் காரணமாகவாயினும், பிரிந்துபோன வண்டு தொடர் நறு தெரியல் உயிர் அனைய கொழுநர் - (தலை வியரைப்) பிரிந்து சென்ற வண்டுகள் இடையீடின்றித் தொடர்ந்து மொய்க்கும் நறிய மண மலர் மாலைகளை யணிந்த தமது உயிரை ஒத்த தலைவர், மணி தேரோடு உம் வர கண்டு - அழகிய தேரோடும் மீண்டு வருதலைப் பார்த்து, மனம் களி சிறப்ப - மனமானது மிகப் பூரிக்க, ஒளி சிறந்து - காந்தி பொலிய, மெலிவு அகலும் - (இற்றை யெல்லைவரை நீடித்த) தளர்ச்சி நீங்கப்பெறும், கற்பினார் போல் - கற்புடைத் தலைவியரே போல, புண்டரிகம் முகம் மலர - தாமரை யின் மலராகிய முகங்கள் மலர்ச்சியைப் பெற, பூ பொய்கை எல் லாம் அகம் மலர்ந்து பொலிந்தன - அழகிய தடாகங்கள் எல்லாம் உள்ளிடங்கள் மலர்ச்சிபெற்றுப் பொலிவனவாயின.

விசேட உரை:

பண்டு - முன்பு.

"வண்ணவண் டிமிர்ந்தானா வையைவா ருயரெக்கர்த்
தண்ணருவி நறுமுல்லைத் தாதுண்ணும் பொழுது"

"மல்கிய துருத்தியுள் மகிழ்துணைப் புணர்ந்தவர்
வில்லவன் விழவினுள் விளையாடும் பொழுது"

"நிலனாவில் திரிதருஉம் நீண்மாடக் கூடலார்
புலனாவிற் பிறந்தசொற் புதிதுண்ணும் பொழுது"

என்றிவ்வாறு கூறப்படுங் கால எல்லையே 'வருங் குறி' என அறிக. பாசறை - பகைமேற் செல்வோ ருறையுமிடம். பகை மேற் சென்று பாசறைக்கண் தங்குதலே பாசறைப் பிரிவாம்; பொருளீட்டற்குப் பிரியும் பிரிவு பொருள்வயிற் பிரிவாம். இங் ஙனம் பிரிந்த உயிரனைய கொழுநர் வர மகிழுங் கற்பினாரைச் சூரியன் உதிக்க மலர்ந்த தாமரைப் பொய்கைகட்கு உவமை கூறினார். மணித்தேர் - அழகிய தேர்; இரத்தினங்கள் பதித்த தேருமாம்.

சூரிய கிரணங்கள் விரிதல்

153. எண்ணரிய மறையினொடு கின்னரர்க
ளிசைபாட வுலக மேத்த
விண்ணவரு முனிவர்களும் வேதியருங்
கரங்குவிப்ப வேலை யென்னும்
மண்ணுமணி முழவதிர வானரங்கி
னடம்புரிவா ளிரவி யான
கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரிந்தா
லெனவிரிந்த கதிர்க ளெல்லாம்.

பொழிப்புரை:

அறிவினால் அறிதற்கரிய வேத சூத்திரங்களோடு கின்னரர்கள் இசை யினைப் பாடவும், உயர்ந்தோர் துதிக்கவும், தேவர்களும் முனிவர்களும்

அந்தணர்களும் கைகுவித்து வணங்கவும் கடலாகிய முழவு ஒலிக்கவும் வானமாகிய நடனசாலையில் நடனம் செய்கின்ற சூரியனை நெற்றிக் கண்ணையுடைய சிவனது பொன்மயமான சடைகள் விரிந்தனவாமெனச் செந்நிறக் கிரணங்கள் யாவும் பரந்தன.

பதவுரை:

எண் அரிய மறையினெடு - அறிவினால் அறிதற்கரிய வேதசூத் திரங்களோடு, கின்னரர்கள் இசைபாட - கின்னரர்கள் இசையினைப் பாடவும், உலகம் ஏத்த - உயர்ந்தோர் துதிக்கவும், விண்ணவர் உம் - சுவர்க்க வாசிகளான தேவர்களும், முனிவர்கள் உம் - மௌன முடையவராய தவத்தோரும், வேதியர் உம் - வேத மோதுதலை யுடைய அந்தணர்களும், கரம் குவிப்ப - கைகளைக் குவித்து வணங்க வும், வேலை என்னும் - கடல் என்கின்ற, மண்ணும் அணி முழவு அதிர - அலங்கரிக்கப்பட்ட அழகிய பறை ஒலிக்கவும், வான் அரங் கின் - வானமாகிய நடனசாலையில், நடம் புரி - நிருத்தம் செய் கின்ற, வாள் இரவி ஆன கண் - ஒளி பொருந்திய சூரியனுகிய கண் ணையும், கண் நுதல் வானவன் - அக்கினியாகிய கண்ணை நெற்றியி லுடையவனுமாகிய சிவனது, கனகம் சடை - பொன்மயமான சடை கள், விரிந்தால் என கதிர்கள் எல்லாம் விரிந்த - விரிந்தன வாமெனச் செந்நிறக் கிரணங்கள் யாவும் பரந்தன.

விசேட உரை:

எண் - அறிவு. மறைப் பொருள் சிற்றறிவுக் கெட்டாத ஆழ முடைமை கருதி எண்ணரிய மறை எனப்பட்டது. உலகம் என் றது உயர்ந்தோரை. கின்னரர் - சிறிது மனிதரூபமுடைய பாடுந் தொழிலுடைய கந்தருவர். விண்ணவர் - சுவர்க்க வாசி கள். முனிவர் - மௌனமுடையவர். வேதியர் - வேதமோது தலை யுடையவர். மண்ணுதல் - அலங்கரிக்கப்படுதல்; மண்ணும் என்பதற்கு மார்ச்சனை யமைந்த என்றுமாம். மார்ச்சனை - முழவின் வாய் முடிவார். முழவு - பறைப்பொது. கண், இரவி யான கண், கண்நுதல் என ஈரிடத்துங் கொண்டு உரைக்கப் பட்டது.

இராமபிரான் துயிலெழுதல்

154. கொல்லாழி நீத்தங்கோர் குளிவயிரச்
சிலைத்தடக்கை கொண்ட கொண்டல்
எல்லாழித் தேரிரவி இளங்கரத்தா
லடிவருடி யனந்த நீர்ப்ப
அல்லாழிக் கரைகண்டா னுயிரவாய்
மணிவிளக்க மழலுஞ் சேக்கைத்
தொல்லாழித் துயிலாதே துயராழி
நெடுங்கடலுட் டுயில்கின் றானே.

பொழிப்புரை:

பாற்கடலிலே கொல்லவல்ல சக்கரப்படையை நீக்கிவிட்டு ஓர் குனித்த உறுதியான கோதண்ட மென்னும் வில்லை விசாலித்த திருக்கரத்திலே கொண்ட மேகவண்ணனுகிய இராமபிரான், ஆயிர முகங்களிட மாய மாணிக்க தீபங்கள் ஒளிசெய்யப் பெற்ற பாற்கடலிலே பள்ளி கொண்டருளாமல், (சீதாதேவியா லெழுந்த) துன்பமாகிய ஆழ்ந்த பெருங் கடலிடையே மயங்கினவனுனன். ஒளி பொருந்திய ஒற்றைச் சக்கரத் தேரினனுய சூரியன் இளங் கிரணங்களாகிய கைகளினுல் திருவடிகளை மெல்லத் தடவி நித்திரையை யொழிக்க இரவாகிய கடலின் எல்லையை (அவன்) கண்டனனுயினன்.

பதவுரை:

அங்கு - பாற்கடலிலே, கொல் ஆழி நீத்து - கொல்லுகின்ற சக்கரப்படையைத் துறந்து, ஓர் குனி வயிரம் சிலை தடகை கொண்ட கொண்டல் - ஒப்பற்ற வளைவாகிய உறுதியான கோதண்டம் என்னும் வில்லை விசாலித்த திருக்கரத்திலே பற்றிய மேகவண்ணனுகிய இராமபிரான், ஆயிரம் வாய் மணி விளக்கம் அழலும் சேக்கை தொல் ஆழி துயிலாது - ஆயிரம் முகங்களிடமாய மாணிக்க தீபங்கள் பிரகாசிக்கும் ஆதிசேட சயனத்திலே பழமையான பாற்கடலிலே துயில் கொண்ட ருளாமல், துயர் ஆழி நெடு கடலுள் - (சீதா தேவியா லெழுந்த) துன்பமாகிய ஆழ்ந்த பெரிய கடலினிடையே, துயில்கின்றுன் - மயங்கினவனுனன்; எல் ஆழி தேர் இரவி - ஒளி பொருந்திய ஒற்றைச்சக்கரத் தேரினனுகிய சூரியன், இளங் கரத்தால் அடி வருடி - இளங் கிரணங்களால் திருவடிகளை மெல்லத் தடவி, அனந்தல் தீர்ப்ப அல் ஆழி கரை கண்டான் - மயக்க நித்திரையை யொழிக்க இரவாகிய கடலின் கரையை (அவன்) கண்டனனுயினன்.

விசேட உரை:

இராமபிரான் சூரியனுதிக்க எழுந்தருளினன் என்பதாம். அழலுதல் – பிரகாசித்தல். தொல்லாழி - பழமையான பாற்கடல். துயராழி நெடுங்கடலுள் துயிலுதல், மயங்கிக் கிடத்தலாம்; துயிலின்மையால் முடிவற்றதுபோல் நீண்டிருந்த இரவை அல்லாழி என்றுர் என்க. அனந்தல் - மயக்கம்; அஃது ஈண்டு மயக்கநிலையிற் பிறந்த துயிலை உணர்த்திற்று. இரவி - துதிக்கப்படுபவன் (சூரியன்). கொண்டல், உவமையாகு பெயர். இளங்கரம், உருவகம்.

இராமபிரான் முதலியோர் சனகனது வேள்விச்சாலை சார்தல்

155. ஊழிபெயர்ந் தெனக்கங்கு லொருவண்ணம்
புடைபெயர வுறக்க நீத்த
சூழியா னையினெழுந்து தொன்னியமத்
துறைமுடித்துச் சுருதி யன்ன
வாழிமா தவற்பணிந்து மனக்கினிய
தம்பியொடும் வம்பின் மாலை
தாழுமா மணிமௌலித் தார்ச்சனகன்
பெருவேள்விச் சாலை சார்ந்தான்.

பொழிப்புரை:

ஊழிக்காலம் கழிந்தாற்போல அவ்விரவு ஒருவாறு கழிய, உறக்கம் நீத்த முகபடாத்தினை யுடைய யானைபோல எழுந்து, நித்திய கடன்களை முடித்து மந்திரம் போன்றவனுய கௌசிக முனிவனை வணங்கி அவனெடும் தன் இனிய தம்பியான இலக்குமணனெடும் மணிமகுடத்தையும் மலர் மாலைகளையுமணிந்த சனக மகாராசனது யாகசாலையை (இராமபிரான்) அடைந்தான்.

பதவுரை:

ஊழி பெயர்ந்து என - கற்பகாலம் கழிந்ததுபோல, கங்குல் ஒரு வண்ணம் புடை பெயர - இராக்காலமானது ஒருவாறு நிலையில் நின்று நீங்க, உறக்கம் நீத்த சூழி யானையின் எழுந்து - நித்திரை விட்டெழுந்த முக படாத்தையுடைய யானை போலத் துயிலுணர்ந் தெழுந்து, தொல் நியமம் துறை முடித்து - பழமையான நித்திய கடன்களை முடித்து, சுருதி அன்ன மாதவன் பணிந்து - மந்திரம் போன்றவனுன கௌசிக முனிவனது பாதங்களில் வீழ்ந்து வணங்கி, (அவனெடும்) மனக்கு இனிய தம்பியொடு உம் - தன் மனத்துக்கு இனியனும் தம்பியுமாகிய இலக்குமணனெடும், வம்பின் மாலை தாழும் மா மணி மௌலி - நறுமணம் நீங்காத மலர்மாலைகள் தொங்கும் மாணிக்க மகுடத்தையும், தார் - மலர்மாலைகளையு மணிந்த, சனகன் பெரு வேள்விச் சாலை சார்ந்தான்-சனக மகாராசனது பெரிய யாகசாலையை (இராமபிரான்) அடைந்தான்.

விசேட உரை:

மேலே 'அல்லாழிக் கரை கண்டான்' என்றவர் ஈண்டு 'ஊழி பெயர்ந்தெனக் கங்குல் ஒருவண்ணம் புடைபெயர்' என்றது அவனுக்குற்ற விரகவேதனையின் தன்மையைத் தெளிவிக்க வென்க. சூழி - முகபடாம்; தொல் நியமம் என்றது, வருணச்சிரமத்துக் கமைய விதிக்கப்பட்ட நித்திய கடன்களை, சுருதி - மந்திரம்; அது நினைப்பவனைக் காப்பது; வாழி - அசை;

சனகன் வீற்றிருத்தல்

156. முடிச்சனகர் பெருமானு முறையாலே
மறைவேள்வி முற்றிச் சுற்றும்
இடிக்குரலின் முரசியம்ப விந்திரன்போற்
சந்திரன்றேய் கோயி லெய்தி
எடுத்தமணி மண்டபத்து ளெண்டவத்து
முனிவரொடு மிருந்தான் பைந்தார்
வடித்தகுனி வரிசிலைக்கை மைந்தனுந்தம்
பியுமருங்கி லிருப்ப மாதோ.

பொழிப்புரை:

சனகர்குலத் தலைவனுகிய அரசனும் வேதவிதிப்படி வேள்வியை முடித்து, இடியின் குரலெனப் பேரிகைகள் சுற்றிலும் ஒலிக்க, சந்திரமண்டலத்தை அளாவிய அரண்மனையை அடைந்து அங்கே உயர்ந்தமைந்த மணிமண்டபத்திலே கௌசிக முனிவனுடனே, பசிய மாலைகளைச் சூடிய வரும் சிலையைக் கையில் கொண்டவருமாய இராமபிரானும் இலக்குமணனும் தன்பக்கத்தில் இருக்க இருந்தனன்.

பதவுரை:

முடி சனகர் பெருமான் உம் - மகுடந்தரித்த சனகர்க்குத் தலைவனுகிய அரசனும், முறையால் மறை வேள்வி முற்றி - வேதம் விதித்த முறை வழுவாது மந்திரங்களோடு கூடிய யாககாரியத்தை முடித்து, சுற்றும் இடி முரசின் குரல் இயம்ப - எல்லாப் பக்கங்களிலும் இடியின் ஒலியை யுடைய பேரிகைகள் ஒலிசெய்ய, இந்திரன் போல் சந்திரன் தோய் கோயில் எய்தி - தேவேந்திரனே போலச் சந்திரனை யளாவி யுயர்ந்த அரண்மனையை அடைந்து, எடுத்த மணி மண்டபத்துள் - (உள்ளே) உயர்ந்தமைந்த அழகிய மண்டபத்திலே, எண் தவத்து முனிவரொடு உம் - அறிவும் தவமும் நிரம்ப உடைய கௌசிக முனிவனுடனே, பை தார் வடித்த குனி வரி சிலை கை மைந்தன் உம் - பசிய வெற்றிமாலை சூடிய நெடிதாக்கப்பட்ட வளை வினையுடைய கட்டமைந்த கோதண்டமாகிய வில்லினை யேந்திய கையை யுடைய வலிமை யுடையோனுகிய இராமபிரானும், தம்பி உம் - தம்பியாகிய இலக்குமணனும், மருங்கின் இருப்ப இருந்தான் - பக்கத்திலே இருக்க இருந்தனன்.

விசேட உரை:

முறை - வேதம் விதித்த முறை. மறை - மந்திரம். இடிக்குரலின் முரசு - பேரிகை. எண் - அறிவு. வடித்த - நெடிதாக்கிய.

மைந்தன் - வலிமையுடையோன். முனிவர் - மரியாதைப் பன்மை: முனிவர்கள் எனினுமாம். பெருமான், முற்றி, இயம்ப, எய்தி, முனிவரொடும் மைந்தனும் தம்பியும் இருக்க இருந்தான் என முடிக்க.

இராம இலக்குமணர்களே யாவரென்று சனகன் வினவ கௌசிகன் கூறுதல்

157. இருந்தகுலக் குமரர்தமை யிருகண்ணும்
முகந்தழகு பருக நோக்கி
அருந்தவனே யடிவணங்கி யாரிவரை
யுரைத்திடுமி னடிக ளென்ன
விருந்தினர்க ணின்னுடைய வேள்விகா
ணியவந்தார் வில்லுங் காண்பார்
பெருந்தகைமைத் தயரதன்தன் புதல்வரென
வவர்தகைமை பேச லுற்றான்.

பொழிப்புரை:

தன்னருகில் இருந்த உயர்குலக் குமாரர்களைத் தன் இரு கண்களாலும் அவர்கள் அழகினை அள்ளிப் பருகுவா னெனப் பார்த்து, அருந்தவனுகிய கௌசிகன் பாதங்களைத் தொழுதவனுய், அடிகளே! இவர் யாவர்? உரைத்தருளுக, என்று வேண்ட, கௌசிகமுனிவன், உன்பக்கத்தில் புதியராய் வந்தவர்கள் பெருந்தகையினனுன தசரதன் குமாரர்களாவர்; உனது யாகத்தைக் காண வந்துள்ளார்கள்; நின்னிடத்துள்ள சிவதனுசையும் (நீ விரும்புமிடத்துக்) காண்பார்கள் என்று கூறி அவர்களது மேன்மையைச் சொல்வானுயினன்.

பதவுரை:

இருந்த குலம் குமரர் தமை - (அங்ஙனம் இருந்தவனுன சனகன்) அருகிருந்த உயர்குலத்தவராக விளங்கிய இளைஞர்களான இராம இலக்குமணர்களை, இருகண்ணும் அழகு முகந்து பருக நோக்கி - தன் இருகண்களாலும் அவரது புற உள் அழகு முழுவதையும் அள்ளிப் பருகுவா னெனப் பார்த்து, அருந்தவனே அடி வணங்கி - அரிய தவத்தினனுகிய கௌசிகமுனிவன் திருவடிகளை வணங்கி, அடிகள் - முனிவனே; யார் இவரை உரைத்திடுமின் - இவர் யாவர்? இவர்கள் வரலாறு, வந்த காரணம் முதலியவற்றைச் சொல்லுக, என்ன - என்று வேண்ட, (கௌசிகன்) விருந்தினர்கள் - புதியராய் வந்த இவர்கள், பெருந்தகைமை தயரதன்தன் குமரர் - மிகச் சிறந்த குண நலன்களையுடைய தசரதச் சக்கரவர்த்தியின் புதல்வர்கள், நின்னுடைய

வேள்வி காணிய வந்தார் - உனது யாகத்தைப் பார்த்தலின் பொருட்டு வந்தார்கள். வில் உம் காண்பார் - நின்னிடத்துள்ள சிவ தனுசின் வலியையும் (நீ விரும்புமிடத்து) காண்பார்கள், என அவர் தகைமை - என்று அந்த இராம இலக்குமணர்களின் மகிமையை, பேசல் உற்றான் - சொல்லத் தொடங்கினன்.

விசேட உரை:

முகந்து பருக நோக்கும் நோக்கு என்றது, உள்ளும் புறமும் ஊடுருவ நோக்கும் நோக்கினை, உள்ளும் நோக்கி உணரவல்லா னைய சனகன், அங்ஙனம் நோக்கி அவர் பெருமையைத் தானே உணர்ந்து கொண்டானுதலின், அவரைப் பற்றிய முழுமையை யும் அறியும் விருப்பினனாகி 'அவரை உணர்த்திடுமின்' என்று னென்க. விருந்தினர் - புதியவர். வில்லும் காண்பார் - வில்வலி யும் காண்பார். பெருந்தகைமைத் தயரதன்றன் புதல்வர் என் றதனால் ஒருவாறு குலப்பெருமை பேசப்பட்டது. 'அவர் தகைமை' என்றது குலப் பெருமையும் அவர் பெருமையுமாகிய இரண்டையுமே யென்க. யாரிவரை என்பதை இவர் யாரை என மாற்றி உரைப்பினுமாம்; எனின், ஐ இடைச்சொல்.

மிதிலைக் காட்சிப் படலம் முற்றிற்று.

ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம்.